
கல்கி
கௌசல்யாவின்
விரல் ஜோஸியம்!
KALKI
27.6.2004
ரூ.6.00
இலவசம்
கல்கி வழங்கும்
சென்னை ஸ்கேன்
(சென்னை வாசகர்களுக்கு மட்டும்)
'ரஜினி, ஒரு மகான்!'
-சேலம் குட்டிசாமி
அதிரடி!

உடல் ஆரோக்கியத்திற்கும்
நல்வாழ்விற்கும்

KOSMIC MUSIC பெருமையுடன் வழங்கும்

" MANTRA THERAPY SERIES "

OMKARA DHYANA



meditation for pregnant women

GARBA RAKSHA




for every expectant mother


Advisor
Dr. Kamala Selvaraj




ULCER



DIABETES




HEADACHE



HEART



BLOOD PRESSURE



Free !!! booklet
with all Cassettes & Cds

இப்போது
விற்பனையில்

KOSMIC MUSIC PVT. LTD.,

No.33, Shaffee Mohammed Road, Chennai - 600 006. India.
Tele : (+91-44) 5214 2500 (Multi Lines). Web: www.kosmicmusic.com





கல்கி
27.6.2004

இரண்டு, மூணு விஷயம்!

தமிழ்நாட்டுக்கா, கேரளாவுக்கா?

கேரள மாநிலம் வெள்ளரடையிலுள்ள பனச்சமூடுகாரக்கோடு ஜங்ஷனில் போய், அங்குள்ள ஆட்டோ டிரைவர்களிடம் சவாரி வருமா எனக் கேட்டால் "எங்கே? தமிழ்நாட்டுக்கா, கேரளாவுக்கா?" எனக் கேட்பார்கள். அப்போதுதான் அங்கு மஞ்சள் நிற ஆட்டோக்களும், கறுப்பும் மஞ்சள் நிறமும் உள்ள ஆட்டோக்களும் நிற்பதை கவனிப்போம்.



மஞ்சள் நிற ஆட்டோக்கள் தமிழ் நாட்டில் ஓடுபவை. மஞ்சள் கறுப்பு நிற ஆட்டோக்கள், கேரளாவில் ஓடுபவை. இந்தப் பகுதி கேரள, தமிழக எல்லைப் பகுதி. இந்த ஜங்ஷனிலிருந்து இடதுபக்கம் திரும்பினால் தமிழ்நாட்டுக்கும், வலதுபக்கம் திரும்பினால், கேரளாவுக்குள்ளும் செல்லும். எனவேதான் இந்தக் கேள்வி!

- எஸ்.எஸ். மணி,
திருவனந்தபுரம்-40.

1788 அறைகள்

உலகின் மிகப் பெரிய பணக்காரர் ப்ருனே நாட்டின் சுல்தான். ப்ருனே... எண்ணெய் வளத்துக்குப் பெயர் பெற்ற ஊர்! இது தவிர, கற்பூரம் தயாரிக்க உதவும் மூலப் பொருள்கள் இங்கு ஏராளமாய்க் கிடைக்கின்றன. இதனால் இதற்கு கற்பூரத் தீவு எனவும் பெயர் உண்டு. வெளிநாட்டுக் கடன் இல்லை. துண்டு விழாத பட்ஜெட் தரும் நாடு.

சுல்தான் தங்கியுள்ள அரண்மனையில், மொத்தம் 1788 அறைகள் உள்ளன. இதில் பிரதமர் அலுவலகமும் உள்ளது. ரம்ஜான் முடிந்த மாதத்தில் அரண்மனை, பார்வையாளர்



வாசகர்கள் கைவண்ணத்தில்...

களுக்குத் திறந்திருக்கும். மூன்று நாட்கள் ப்ருனே குடிமக்கள் சுல்தானை சந்தித்துப் பேசி, இலவச உணவும் உண்ணலாம்.

ப்ருனே மக்கள் ஒவ்வொருவரிடமும் சராசரியாக மூன்று கார்கள் உள்ளன. பெட்ரோல் ஒரு கேலனே, ஒரு டாலர் விலைதான்! டாக்சிகள் ஓடுகின்றன. பஸ்ஸை அபூர்வமாகத் தான் பார்க்க முடியும்.

- ராஜி ராதா,
திருச்சி - 14.




நல்ல யோசனையா இருக்கே!

தோழியின் வீட்டுக்குச் சென்றபோது அவளுக்காக சற்றுநேரம் காத்திருக்க நேர்ந்தது. ஆட்டோவில் ஏராளமான மளிகை சாமான்களை ஏற்றிக் கொண்டு வந்து சேர்ந்தார். "எதற்கு இத்தனை மளிகை? வீட்டில் ஏதாவது விசேஷமா?" என்றேன்.

"இல்லை இல்லை, இந்தக் கட்டடத்தில் உள்ள ஆறு ஃபிளாட்டுகளுக்கும் சேர்த்து வாங்கி வருகிறேன். லிஸ்ட் தந்து விடுவார்கள். மொத்தமாய் வாங்குவதால், மலிவு விலைக்குக் கிடைக்கிறது. முறை வைத்துக் கொண்டு போவதால், ஆறு மாசத்துக்கு ஒரு தடவை மளிகை சாமான் வாங்கப் போனால் போதும். நேரமும் மிச்சம்" என்றாள்.

இந்த யோசனை எனக்குப் பயன் பட்டது. உங்களுக்கும் பயன்படுமா, பாருங்களேன்!

- கோவை எஸ். சுந்தரி



கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
செ. ஏக்நாத் ராஜ்
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

ஆன்மிகத்தில் மகனுக்கு இருக்கும் நாட்டத்தைப் புரிந்து கொண்டவர்களாய், கும்பகோணம் அருகில் உள்ள திருக்கோட்டுக் காவலூரில் வேதம் படிக்கவும் அனுப்பியுள்ளார்கள்.

ஆனால் சிறுவன் பரணீதரனோ, திடீரென்று காவியும் தண்டமும் தரித்து, மந்திராலயத்துக்குப் போய் விட்டார். அங்கே மந்திராலய மடாதிபதிகளுடன் ஏற்பட்ட விவாதத்தில்



• 'தெய்வீகம்' திருமண மண்டபம்

கூர்மையாகப் பேசி, அனைவரையும் அசர வைத்திருக்கிறார். பல்வேறு விதமான தீக்ஷைகளில் ஒன்றான மானசிக தீக்ஷையை மேற்கொண்டு, ராகவேந்திர சுவாமிகளை, மானசிக குருவாகக் கொண்டு, சந்நியாசமும் வாங்கிக் கொண்டு விட்டார்.

தமது பெயரை பரணீதர ஸ்ரீ ஹரி ராகவேந்திர சுவாமிகள் என்று மாற்றிக் கொண்டு, பக்தி, பஜனை, சொற்பொழிவு என வளைய வந்தவரைச் சுற்றி, பெருங்கூட்டம் வளர ஆரம்பித்தது.

மோகன குமாரன் (இவருக்கும் வயது இருபத்தைந்துக்குள் தான் இருக்கும்) லோகநாதன், ஏ.கே. தியாகராஜன் (இவர் காவல் துறையில் பணி புரிகிறார்) சிவாஜி (கட்டட காண்டிராக்டர்) போன்றவர்களைப் பிரதான சிஷ்யர்களாகக் கொண்டு, ஆன்மிகப் பணிகளில் முழு மூச்சாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்.

மகனது பிரிவுத் துயரம் வாட்ட, அவரை பலமுறை தேடிப் போய் கூப்பிட்டுள்ளனர் பெற்றோர். சுவாமிகள் மறுக்கவே, சேலம் பேலஸ் தியேட்டர் எதிரில் உள்ள ஒரு திருமண மண்டபத்தில் சொற்பொழிவு ஆற்றிக் கொண்டிருந்தவரை, வலுக்கட்டாயமாக அழைத்து வந்து விட்டனர். விவகாரம் கடத்தல் என்றாகி, போலீஸ் தலையிட்டதில், குட்டி சாமியார், ஒரே இரவில் பிரபலமாகி விட்டார்.

சேலம் 'தெய்வீகம்' திருமண மண்டபத்தில் தங்கி, நூற்றுக்கணக்கான பக்தர்கள் தரிசித்துக் கொண்டிருக்க, குட்டி சாமியாரிடம் 'கல்கி' சார்பாகப் போய் நின்றோம். பத்திரிகை, நேர்முகம் என்பதற்கெல்லாம் சற்றும் தயங்காமல் உடனடியாகச் சம்மதம் அளித்தார்.

"சன்னியாசம் பெற தங்களுக்கு வேட்கை ஏற்படக்

"ரஜினி, ஒரு மகான்!"

–சேலம் குட்டிசாமி அதிரடி பேட்டி!

காரணம் என்ன?''

"பிறந்தோம், வாழ்ந்தோம், மடிந்தோம் என்பது மனித இயல்பு. இப்படி வாழ்வதால் யாருக்கு என்ன பயன்? மக்களுக்குச் சேவை செய்யவே எம் மனம் நாட்டம் கொண்டது. சன்னியாசம் என்பது பற்றறுப்பது. பகவான் அநுக்ரஹம் இருந்ததால், சன்னியாசம் எமக்குக் கிட்டியது.''

''சிறு வயதிலிருந்தே ஞான வேட்கை உண்டா?''

''மூன்று வயதிலேயே வீட்டில் உள்ள ஸ்வாமி படங்களின் முன்னால் நெடுநேரம் தியானத்தில் நின்றிருப்பதாக எமது பூர்வாசிரம தாயார் சொல்லி இருக்கிறார். எட்டு வயதில், உலகுக்கு சேவை செய்யாமல் சும்மா இருப்பதாக கவலை ஏற்பட்டது. பள்ளிப் படிப்பைத் துறந்தோம்.''

''உங்களுடைய இந்த வேட்கையை ஆதரித்தவர்கள் யார்?''

"எமது தாயார் வறுமையில் வாடினாலும், பூஜைக்கு இன்ன மலர் வேண்டும், இத்தனை பழம் வேண்டும் என யாம் கூறி விட்டால் போதும்; சிரமம் பாராது கொண்டு வருவார். தாயாரே எமது ஆன்மிக வேட்கையை முதலில் வளர்த்தவர்.''

உங்களது குரு என்று யாரை குறிப்பிடுகிறீர்கள்?''

"மகா ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளே கலியுகத்தில் எம் போன்ற பல எண்ணற்ற ஸ்வாமிகளின் குருவாக உள்ளார்.

தமிழகத்தில் நாள்தோறும் விதவிதமான சாமியார்கள் தோன்றி வருவது குறித்து உங்கள் அபிப்ராயம் என்ன?''

''கலியுகம் பாவாத்மாக்களால் நிறைந்தது. ஆத்மா முக்தியடைய,



இப்பொழுது தோன்றியுள்ளதைப் போல் இன்னும் பல ஸ்வாமிகள் தோன்ற வேண்டும்.''

''எது போன்ற புத்தகங்களை விரும்பிப் படிப்பீர்கள்?''

''திருமூலரின் திருமந்திரம்.''

''சிறு வயதில் சன்யாசம் பெற்றுக் கொண்டதால், பாலகர்களுக்கு உண்டான அபிலாஷைகள் பூர்த்தியாகாமல் போனது குறித்து வருந்தியதுண்டா?''

''ஆன்மிகச் சேவை என்னும் பேராசை, மற்ற ஆசைகளை அழித்து விட்டது.''

''நடப்பு விஷயங்களுக்கு வருவோம். ஸ்வாமியின் ஞான திருஷ்டியில் சந்தனக் கடத்தல் வீரப்பன் பிடிபடுவானா என்று கண்டு சொல்ல முடியுமா?''

(புன்னகைத்து) அரசியல் வேண்டாமே.''

''காவிரியில் கர்நாடகம் தண்ணீர் திறந்து விட ஸ்வாமிகள் முயற்சிப்பீர்களா?''

''வேத சம்ரக்ஷணம் என்பது பல்லுயிர் ஓம்புவதற்குச் சமம். எங்கு வேதங்கள் போற்றப்படுகின்றனவோ, அங்கு வான் பொய்க்காது.''

''தீண்டாமை குறித்து உங்கள் கருத்து?''

''மகான்களிடம் உள்ள யோக நெறி

குட்டி சாமியாரின் வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்று பலவித உதவிகளைப் புரிந்த பாரதிய ஜனதா சேலம் மாவட்டச் செயலாளரும் பிரபல ஆடிட்டரும், ஆர்.எஸ்.எஸ். சேவகருமான ப. ரமேஷ் நம்மிடம் பகிர்ந்து கொண்டவை.

சிறு வயது முதலே எனக்குக் குட்டி சாமியாரைத் தெரியும். அவரது தாயார் சாவித்திரி அம்மாள், சாப்பாட்டுக்குக் கஷ்டப்பட்டாலும்கூட பிள்ளை கேட்கிறான் என்றால், ஹோமப் பொருள்களைக் கொண்டு தருவார். தண்டமும், காவியும் அணிந்து சன்னியாசம் பெறப் போவதாகச் சொன்னால், அழாமல் என்ன செய்வார்? நான் குட்டி சாமியாரிடம் அவர் செயல்பாடுகள் குறித்துக் கேட்டதற்கு, கோவில் கோவிலாகச் சென்று சேவை செய்யப் போகிறேன் என்றார். நான் நடைமுறைக்கு ஒவ்வாத விஷயம் என்றேன். ஒரு ஆசிரமத்தில்

காரணமாக, இயல்பாகவே அவர்களிடம் மின்சார வளையம் போன்ற அரண் சுற்றி இருக்கும். எனவே மற்ற



• மோகனகுமாரன்

குட்டி சாமியார் பற்றி அவரது சீடர்களின் கருத்து

மோகனகுமாரன்:

எனக்கு ஸ்வாமிகளை முதலில் பழக்கமில்லை. சிங்கப்பூரில் உள்ள எனது அக்காவின் கனவில் தோன்றிய ஸ்வாமிகள், பாவாயம்மாள் காவடி முருகன் அருளால் குழந்தை பாக்கியம் உண்டு என்றாராம். நான் என் ஆன்மிக குருவைத் தேடி மந்திராலயம் சென்று, கண்கள் மூடி அமர்ந்திருந்தேன். கண்கள் திறந்தபொழுது ஸ்வாமிகள் என்னைச் சீடராக வரித்தார்.




• லோகநாதன்

லோகநாதன்:

என் ஆன்மிகத் தேடலில் ஸ்வாமிகளை நேரில் சந்திக்கும் பாக்கியம் ஏற்பட்டது. கொல்லிமலையில் ஒருமுறை சித்தர்களைச் சந்தித்தபொழுது ''என் குரு யார்?'' எனக் கேட்டேன். ''குட்டி சாமியார்'' என்றார்கள். ''பதின்மூன்று வயது பாலகனா என் குரு?'' என்றேன். ''366 வருடங்களான மகான்'' என்றார்கள்.

இதே போன்றே சிவாஜி எனும் பில்டிங் காண்ட்ராக்ட்டருக்கும்,



• ப. ரமேஷ்

சேர்ந்து நடப்பு விஷயங்களைப் பற்றி முதலில் தெரிந்து கொள்வதுதான், எல்லா மகான்களும் செய்வது. ஒரு மாதிரி பயிற்சி என்றேன். குட்டிசாமி கேட்கவில்லை. அவசரப்பட்டார். நான் அயோத்தியாபட்டினம் இராமர் கோவில் அருகில் ஒரு ரைஸ்மில்லில் தங்க ஏற்பாடு செய்து கொடுத்தேன். குட்டிசாமியார் அங்கிருந்தபடியே ஆன்மிகச் சொற்பொழிவுகள் செய்யத் தொடங்கி பிரபலமானார். ஆர்.எஸ்.எஸ் என்றுமே பண விஷயங்களில் மிக நேர்மையுடன் விளங்கும் என்பதால், குட்டிசாமியாரிடம் எச்சரிக்கையாக இருக்கச் சொன்னேன். ட்ரஸ்ட் ஒன்று ஏற்படுத்தித் தரச் சொன்னார் என்பதற்காக, ஜி. ஸ்ரீனிவாசன், டி. சந்திரசேகர், எம். ராமகிருஷ்ணன் என்ற மூன்று பேரை ட்ரஸ்டிகளாகக் கொண்ட 'சத்ய தர்மா சேவா ட்ரஸ்ட்' என்ற தர்ம ஸ்தாபனத்தை ஏற்படுத்திக் கொடுத்தேன். பெற்றோர் மகனுக்கு இடையில் விரிசல் அதிகமானது. தன்னுடன் தங்குவதில்லை என அவர்களுக்கு வருத்தம். சன்னியாசம் வாங்கிய தன்னை, மற்றவர் முன்னிலையில் ஒருமையில் அழைப்பது குட்டிசாமியாருக்குப் பிடிக்காமல் போனது. அதற்குள் இடைவெளி பெரிதாகி, விஷயம் போலீஸ் வரை போய்விட்டது. குட்டிசாமியார் ஞானம் கைவரப் பெற்றவர் என்பதில் ஐயமில்லை. முன்பு குட்டிசாமியாரிடம் நெருங்கி இருந்தவர்கள் விலகிப் போனதும், புதியவர்கள் பிடியில் சிக்கிக் கொண்டவர் போல குட்டிசாமியார் தோற்றமளிப்பதும்தான் வருத்தமளிக்கிறது'' என்கிறார்.

சாதாரண மனிதர்கள் தீண்டும்பொழுது, அந்த ஸ்பரிசத்தை அவர்களால் தாங்கிக் கொள்ள முடியாது. மற்றபடி எமக்கு மேல்சாதி, கீழ்சாதி என்ற பாகுபாடு இல்லை. அவரவர் அவரவர் சாதி அனுஷ்டானங்களை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதே தர்மம்.''

''ரஜினிகாந்த் உங்களிடம் ஆசி பெற்றாராமே?''

''ஆம். இரண்டு மாதங்களுக்கு முன்பு மந்திராலயத்தில் எம்மை வணங்கி ஆசி பெற்றார். அவர் கட்டிய புது இல்லத்தில் யாம் வழங்கிய ராகவேந்திரர் படம் ஒன்றை வைத்து பூஜை செய்கிறார்.''


''ரஜினிகாந்த் ஆட்சிக்கு வருவாரா?''

''ரஜினிகாந்த் ஒரு மகான். தியானமும், யோகமும் கைகூடிய அவரைப் போன்றவர்கள் ஆட்சிக்கு வர வேண்டும் என்பதே எமது விருப்பம். (எலுமிச்சம் பழம் கொடுத்து ஸ்வாமி ஆசிர்வதிக்கிறார்.)


பேட்டி, படங்கள்:
சாந்தி சர்மா

காவல் துறையில் பணிபுரியும் ஏ.கே. தியாகராஜனுக்கும் நிஷ்டை அல்லது கனவு மூலம் தரிசனம் தந்தே, குட்டி சாமியார் குருவாகி இருக்கிறார்.

சித்தர் நெறியைச் சேர்ந்த சேலம் சிட்டிபாபு எனும் ஆன்மிகச் சொற்பொழிவாளரும், குட்டிசாமியார் தவயோகமும், ஞானமும் பிறவியிலேயே கைவரப் பெற்றவர் என்கிறார்.



• தியாகராஜன்



• சிவாஜி



ஏழை மாணவ மணிகளுக்(

அமரர் கல்கி நினைவு அறக்கட்டளை

படிப்பில் சிறந்து விளங்குகிற ஆனால் பொருளாதாரத்தில் பின் தங்கிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவ மாணவியருக்கு மட்டுமே இந்த உதவி. நடப்புக் கல்வி ஆண்டுக்கு (2004 - 2005) உதவித் தொகைகள் பின்வருமாறு விநியோகமாகும்:

- ஒருவருக்கு ரூ. 2,500 வீதம் எட்டு பட்ட மேற்படிப்பு அல்லது ஆராய்ச்சி மாணவர்களுக்கு ரூ. 20,000/-
- ஒருவருக்கு ரூ. 2,000 வீதம் இசை அல்லது நாட்டியம் பயிலும் நான்கு மாணவர்களுக்கு ரூ. 8,000/-
- ஒருவருக்கு ரூ. 1,500 வீதம் 50 கல்லூரி மாணவர்களுக்கு ரூ. 75,000/-
- ஒருவருக்கு ரூ.1000 வீதம் 70 மேல் நிலைப் பள்ளி அல்லது பாலிடெக்னிக் மாணவர்களுக்கு ரூ. 70,000/-
- ஒருவருக்கு ரூ. 750 வீதம் 36 உயர் நிலைப் பள்ளி மாணவர்களுக்கு ரூ. 27,000/-

இவற்றுள் **அமரர் கல்கி** படித்த மூன்று பள்ளிக் கூடங்களில் மூன்று மாணவர்களுக்கு மூன்று உதவித் தொகைகள் ஒதுக்கப்படுகின்றன. மீதமுள்ள உதவித் தொகைகளைப் பெற மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.

- விண்ணப்பங்களை மாணவர்கள் தங்கள் கைப்பட எழுத வேண்டும். **தட்டச்சு, கம்ப்யூட்டர் கடிதங்கள் நிராகரிக்கப்படும்.** பார்வையற்ற மாணவர்களுக்கு மட்டும் இதில் விதிவிலக்கு உண்டு. பிறர் எழுதித் தர கைநாட்டு பதிக்கலாம்.
- தபால் மூலம் மட்டுமே மனுக்களை அனுப்பலாம். **கூரியர் கூடாது.**
- அரசு அங்கீகாரம் பெற்ற ஒரு கல்வி நிலையத்தில் சேர்ந்து படிக்க அனுமதி பெற்றிருக்க வேண்டும். தாற்காலிக அனுமதி செல்லுபடி யாகாது.
- படிப்பில் சிறந்தவர்களாக விளங்கி, பெற்றோர் உதவியுடன் மட்டுமே கல்வியைத் தொடர முடியாத நிலையில், பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களாக இருக்க வேண்டும்.
- மேற்கூறிய அனைத்தையும் உறுதிப்படுத்த, கல்வி நிலையத்தின் முதல்வருடைய சான்றிதழை இணைக்கவும்.

…தவி :



விண்ணப்பங்கள் வந்து சேரக் கடைசித் தேதி : ஜூலை 31, 2004

- சென்ற கல்வி ஆண்டின் இறுதித் தேர்வில் பெற்ற மதிப்பெண் நகலை முதல்வருடைய கையொப்பத்துடன் அனுப்பவும்.
- ஊனமுற்றவர்கள் மேற்படி சான்றிதழ்கள் தவிர, தங்கள் ஊனம் பற்றிய விவரத்தையும், முதல்வருடைய சான்றிதழாக மட்டுமே அனுப்புதல் வேண்டும். இத்தகையோருக்கு முன்னுரிமை உண்டு.

நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தேவைப்படாத சான்றிதழ்களை அனுப்புதல் அம்மாணவருக்குப் பின்னடைவாக விளங்கும்.

உதவித் தொகை பெறத் தகுதியுடைய மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதில், அறங்காவலர்களின் முடிவே இறுதியானது.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு விவரம் தெரிவிக்கப்படும். மற்றபடி கடிதப் போக்குவரத்து கிடையாது. சான்றிதழ்களைத் திருப்பி அனுப்புவதற்கில்லை.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

நிர்வாக அறங்காவலர்,
கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை,
புது எண் 14, பழைய எண் 35, நான்காவது பிரதான சாலை,
கஸ்தூர்பா நகர், அடையாறு, சென்னை - 600 020.

அம்மாவின்

தமிழகமெங்கும் இருக்கும் அ.தி.மு.க. பிரமுகர்கள், தங்களுக்கு "ராஜ்ய சபை உறுப்பினராகும் அதிர்ஷ்டம் இருக்கிறதா?" என்று படபடப்புடன் காத்துக் கொண்டிருந்தார்கள். நான்கு பெயர்களை அறிவித்து, சம்பந்தப்பட்டவர்களுடைய ரத்தக் கொதிப்பைத் தணித்தும், நிறையப் பிரமுகர்களுக்கு உயர்த்தியும் விட்டிருக்கிறார் அம்மா. திண்டுக்கல் சீனிவாசன், செங்கோட்டையன், பி.ஹெச்.பாண்டியன், செல்வகணபதி, சுலோசனா சம்பத், ஏன் சமீபத்தில் ஆளுங் கட்சியில் இணைந்த கே.எஸ். ராதா கிருஷ்ணனும் கூட, ஏமாற்றமடைந்தவர்களில் ஒரு சிலர். தம்மை ராஜ்ய சபாவுக்கு அனுப்ப வேண்டும் என்று உயிர்த் தோழி நச்சரித்ததாகவும், ஆனால் அம்மா 'முடியவே முடியாது' என்று மறுத்து விட்டதாகவும் தோட்டத்துச் செய்தி உண்டு.

டி.டி.வி.தின



டி.டி.வி.தினகரன், மலைச்சாமி, அன்பழகன், என்.ஆர்.கோவிந்தராஜர்

கரன், மலைச்சாமி, நாமக்கல் மாவட்ட கழகச் செயலாளர் அன்பழகன், அம்மாபேட்டை ஒன்றியச் செயலாளர் என்.ஆர்.கோவிந்தராஜர் ஆகியோர்தான், அம்மாவின் கருணைப் பார்வையில் பட்டவர்கள். இதில் துவக்கத்திலிருந்தே முதலிடத்தில் இருப்பவர் தினகரன். மத்தியில் உள்ள காங்கிரஸ் அரசு, தமக்கு எதிராக இருக்கும் நிலையில், சில அனுசரணையான காங்கிரஸ் தலைவர்களை அம்மாவின் வாய்ஸாக மாற்றுவதே தினகரனின் பணியாக இருக்கும் என்கிறார்கள். குறிப்பாக, தமிழக காங்கிரஸில் ஒரு பிளவை ஏற்படுத்தும் பொறுப்பு - அதுவும் சட்டமன்றத் தேர்தலுக்குள், இவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதாம். மற்றபடி தில்லியில் சுர்ஜித், முலாயம்சிங் யாதவ் போன்ற தலைவர்களுடன் நட்புப் பாலத்தை பலப்படுத்த வேண்டியதும் தினகரனின் வேலை.

மலைச்சாமியின் பணி, அதிகாரிகள் சம்பந்தப்பட்டது. தமது ஐ.ஏ.எஸ். தோழமையை அதிகாரிகள் மட்டத்தில் பயன்படுத்தி, பணியாற்ற வேண்டும் இவர். அதே சமயம் ராஜ்ய சபை விவாதங்களில் கட்சி சார்பாக பேசவும் இவர் தயாராக இருக்க வேண்டும்.

முக்குலத்தோரில் இவர் மறவர் என்னும் பிரிவைச் சேர்ந்தவர். தினகரன்

கள்ளர் பிரிவு. ஒயின் கடை, மணல் வியாபாரம் ஆகியவற்றை அரசு எடுத்துக் கொண்டதாலும், கந்து வட்டிக்கு எதிராக ஜெ. நடவடிக்கை எடுத்ததாலும், பாதிக்கப்பட்டவர்கள் மறவர் பிரிவினர் என்கிறார்கள். பெரியகுளம் இடைத்



அஜெண்டா!


தேர்தலில் மறவர் பிரிவினர் தான் தினகரனின் காலை வாரி விட்டவர்களாம். எனவே மறவர் பிரிவினருக்கு மலைச்சாமி மூலம் ஓர் ஆறுதல் கொடுத்திருக்கிறார் அம்மா என்று பேச்சு இருக்கிறது.


என்.ஆர்.கோவிந்தராஜர், கோபிச்செட்டிப் பாளையத்தில் ஈ.வி.கே.எஸ். இளங்கோவனை எதிர்த்து நின்று தோற்றவர். அந்தத் தொகுதியில் நல்ல பணிகள் செய்து, தொகுதியை இளங்கோவன் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ளும் வாய்ப்பு இருப்பதால், அதற்கு ஸ்பீட் பிரேக்கர்கள் போடுவதற்காக இவருக்குப் பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்கிறார்கள். அம்மாவுக்குப் பிடித்த ஒன்றியச் செயலாளர். பொதுக் குழுவில் இவரை ஜெ. பாராட்டியிருக்கிறார்.

நாமக்கல் அன்பழன் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர். ஜாதி ரீதியாக வாய்ப்பு என்று வரிசைப்படுத்தியதில், முதலில் முக்குலத்தோர், அடுத்து தாழ்த்தப்பட்டவர்கள், அடுத்து கொங்கு வேளாளர், அதன் பிறகு நாடார், வன்னியர், நாயுடு, ரெட்டியார் என்று வரிசை தொடர்கிறது. முக்குலத்தோர், தாழ்த்தப்பட்டவர்கள், கொங்கு வேளாளர் ஆகியோருக்கு சான்ஸ் அடிக்க, மற்ற ஜாதிக்காரர்கள் அடுத்த வாய்ப்புக்காகக் காத்திருக்கிறார்கள். மூன்று வருடம் கழித்துத்தான் இனி தமிழகத்தில் ராஜ்ய சபா தேர்தல். அதற்கென்ன, அம்மா நினைத்தால் அமைச்சர் பொறுப்பு, கழகப் பொறுப்பு என்று எதை வேண்டுமானாலும் கொடுக்கலாமே'' என்று நம்பிக்கையுடன் காத்திருக்கிறார்கள் கழகத்தின் சிங்கங்கள்!

- கௌசி

ஆடை தயாரிப்பில் அசத்தல்






கலக்கல் டிரஸ்ஸில் இருக்கும் திரிஷாவைப் பார்த்ததும் மனசு சந்தோஷத்தில் குதிக்கிறதா? பார்ப்பதோடு நிறுத்திக் கொள்ளாமல் அடுத்த ஸ்டெப்புக்கும் போக ஆசை வருகிறதா? டோண்ட் ஒர்ரி... அடுத்த ஸ்டெப்புக்குப் போகலாம்! திரிஷா அணிந்திருக்கும் உடையைப் போல் நீங்களும் டிஸைன் பண்ணலாம். (இதுதான் அடுத்த ஸ்டெப்! ஹி... ஹி..!) அதற்கு நீங்கள் அப்பேரல் டிசைனிங் கோர்ஸ் படித்திருக்க வேண்டும். இவ்விதமான டிப்ளமா கோர்ஸ்களை வழங்குவது கிண்டியில் உள்ள ஆயத்த ஆடை பயிற்சி வடிவமைப்பு மையம் (Apparel Training & Design Centre) இந்த கோர்சுக்கு Diploma in Apparel Manufacturing Technology என்று பெயர்.

இந்த மையம் மத்திய அரசின் ஜவுளித் துறையால் நடத்தப்படுகிறது. ஜவுளி ஏற்றுமதியை அதிகரிக்க, கார்மெண்ட் இண்டஸ்ட்ரியில் விருப்பமுள்ளவர்களுக்கு டிரெயினிங் கொடுத்து உள்ளிழுப்பதுதான் இந்த மையத்தின் நோக்கம்.

இந்த டிப்ளமோ கோர்ஸில் கார்மெண்ட் இண்டஸ்ட்ரியின் உற்பத்தியை அதிகரிக்கத் தேவையான அடிப்படைகள், புது ஃபேஷனில் எப்படி டிரஸ்ஸை டிஸைன் பண்ணுவது, தரக் கட்டுப்பாட்டினை மேன்மைப்படுத்துவது என்ன பிரிண்டிங் முறையைப் பயன்படுத்தலாம். ஏற்றுமதி - இறக்குமதி நுணுக்கங்கள், மற்றும் ISO 9000 உட்பட எல்லாவற்றையும் கற்றுத் தருகிறார்கள்.



இந்த கோர்ஸுகளில் சேருவதற்கு குறைந்த பட்சம் பத்தாவது தேர்ச்சி பெற்றிருந்தாலே போதுமானது. செலவுகள் மிகக் குறைவானதே. அதாவது ரூ.2500/- முதல் ரூ.30,000 வரைதான். நம் வசதிப்படி காலையிலோ அல்லது மாலையிலோ படிக்கலாம். இந்தப் பயிற்சி தமிழிலும், ஆங்கிலத்திலும் கற்றுத் தரப்படுகிறது.




இந்த மையத்தின் இணை இயக்குநர் வி. நாகராஜன், "இந்தியாவில் இன்னிக்கு கார்மெண்ட் எக்ஸ்போர்ட்டுக்குதான் முதலிடம். 35 ஆயிரம் கோடிக்கு மேல் ஏற்றுமதியாகிறது. கார்மெண்ட் இண்டஸ்ட்ரியில் வேலை பார்க்கிறவர்கள் 3 மில்லியனுக்கு மேலே. இதில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் முறையாக கார்மெண்ட் பற்றிப் படிக்காமல் நுழைந்தவர்கள்தான்.

உலக மார்க்கெட்டில் வளர்ந்த நாடுகள், வளரும் நாடுகளிலிருந்துதான் கோட்டா (குறிப்பிட்ட நாடுகள் குறிப்பிட்ட, நிர்ணயிக்கப்பட்ட சதவிகிதத்தில்தான் விற்பனை செய்ய முடியும்!) அடிப்படையில் கார்மெண்ட் எக்ஸ்போர்ட் பண்றாங்க. 2005லிருந்து கோட்டா சிஸ்டம் நீக்கப்பட்டு, ஓபன் மார்கெட் சிஸ்டம்தான் வருது. இதனால மலிவான, தரமான தயாரிப்பைப் பொறுத்து எவ்வளவு வேண்டுமானாலும் வாங்கலாம் என்கிற நிலைமை வந்துடும். இதனால் இந்தியாவுக்கு போட்டியை சமாளிக்க கார்மெண்ட் பற்றி படித்தவர்கள் அதிகம் தேவை. இப்போதுகூட கார்மெண்ட் துறை பற்றி படித்தவர்கள் 20 லட்சம் பேருக்கு வேலை இருக்கிறது. இன்னொரு விஷயம். அரசே கார்மெண்ட் இண்டஸ்ட்ரியை டெவலப் பண்ண Technology Upgradation Fund Scheme (TUF) என்ற பெயரில் பேங்க் மூலம் லோன் கொடுக்கிறது. இதனால் இக்கோர்ஸைப் படிப்பவர்களுக்கு வேலை நிச்சயம்" என்கிறார் உறுதியாக.

மேலும் விவரங்களுக்கு அப்பேரல் டிரெயினிங் & டிசைன் சென்டர் திரு.வி.க. இண்டஸ்டிரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை-32. போன் : 22312121

ATDC



விபத்து - 1

மத்ஸ்யகந்தா எக்ஸ்பிரஸுக்கு நேர்ந்த விபத்தின் படங்களும், டி.வி. காட்சிகளும் ரயிலில் ஏறும் யாரையும் நீண்ட காலத்துக்கு அச்சுறுத்தும். "இயற்கையின் சீற்றம் மனித முயற்சிகளைக் காட்டிலும் வலுவானது" என்று வருத்தத்தோடு விளக்கம் தருகிறார் கொங்கண் ரயில்வே நிர்வாக இயக்குனர் பி.ராஜாராம். இது உண்மைதான். ஆனால், கொங்கண் ரயில்வே என்பதே இயற்கையை வெற்றிகொள்ளும் மனித முயற்சியாகத்தானே அமைந்தது! மலைகளைக் குடைந்தும், பள்ளத்தாக்குகளை இணைத்தும், ரயில் பாதை அமைத்தது குறித்து மிகுந்த பெருமிதத்துடன் பேசப்பட்டது; விளம்பரமும் செய்யப்பட்டது. பொருளாதார, சுற்றுலா முன்னேற்றங்களுக்கு இத்தகைய முயற்சிகள் தேவைதான். ஆனால், பாதை போடுவதோடு பணி முடிந்து விடுவதில்லை. ரயில்வே துறையில் பாதுகாப்பு, பராமரிப்புப் பிரிவுகள் தினந்தோறும் மேம்பாடு அடைய வேண்டியது அவசியம். அதிலும் கொங்கண் ரயில்வே போல் இயற்கைக்குச் சவால் விடுகிற பிரிவுகளில், பாதுகாப்பு ஏற்பாடுகள் நிமிடத்துக்கு நிமிடம் மேம்படுத்தப்படவேண்டியது மிக அவசியம்.

ஆனால், நடந்திருப்பது என்ன...? பட்ட காலிலே படும் என்பது போல், ஒரு வருட காலத்துக்குள் ஒரே போன்று இரு விபத்துகள் நிகழ்ந்துள்ளன. கடந்த ஆண்டு ஜூன் மாதத்துப் பருவ மழையில் மலைப் பாறைகள் நெகிழ்ந்து கொடுத்து, சரிவில் உருண்டு,




கல்கி



2004 ஜூன் 27
தாரண ஆனி 13
மலர் : 62
இதழ் : 48

த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



ரயில்பாதையில் விழுந்து, விபத்து ஏற்படுத்தியதைப் போலவே இந்த ஆண்டும் நிகழ்ந்திருக்கிறது.


கொங்கன் ரயில்வே திட்டமிடப்பட்ட போதே பாதுகாப்பு அம்சங்களும் மிகக் கவனமாக, விபத்துக்கு இடமின்றித் திட்டமிடப்பட்டிருக்க வேண்டும். அதுதானில்லையெனில், முதல் விபத்துக்குப் பிறகாவது பாதுகாப்பு முழுமையாக்கப்பட்டிருக்க வேண்டும். ஒரு பகுதி மலைச்சரிவுகளுக்கு மட்டும் கம்பித் தடுப்புகள் பொருத்தியிருப்பது எந்த அடிப்படையில்? ரயில்கள் தடதடத்துச் செல்லும் போது ஏற்படும் அதிர்வும் மலைச்சரிவுப் பாறைகளை நாளாவட்டத்தில் நெகிழச் செய்யும் அல்லவா? கம்பித் தடுப்பு பொருத்தப்படாத இடத்தில் விபத்து நிகழ்ந்திருப்பதற்கு யார் பொறுப்பு ஏற்பது..?

நம் மனத்தில் எழும் இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடை கிடைக்கப் போவதில்லை. ஆனால், கொங்கன் ரயில்வே, கொலைகார ரயில்வேயாக மாறாதிருக்க வேண்டுமானால், நிர்வாகம் இயற்கைக்குத் தலைவணங்கி, பாதுகாப்பை தினசரிக் கண்காணிப்பின் அடிப்படையில் மேம்படுத்த வேண்டும். பருவ மழைக் காலத்துக்கு என சிறப்புப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். கொங்கண் ரயில்வே பிரிவு ஓட்டுனர்களும், தொழில்நுட்ப ஊழியர்களும் சிறப்புப் பயிற்சியும், பிரத்யேக விபத்துக் காப்புப் பயிற்சியும் பெறவேண்டும்.

விபத்து - 2

தேர்தலில் நின்று தோற்றுப்போன டிடிவி. தினகரன், அன்பழகன், கோவிந்தராஜூ ஆகிய மூன்று பேருக்கு வாய்ப்புத் தருகிறது அ.தி.மு.க.! மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள், மாநிலங்களவைக்குள் நுழையப் போகிறார்கள்.

'வாரிசு அரசியலை வளர்க்க மாட்டேன்' என்று சூளுரைத்த பா.ம.க. ராமதாஸ், தமது மகன் அன்புமணியை அமைச்சராக்கி, பின் குறுக்கு வழியில் எம்.பி.ஆக்குகிறார்.



சமாஜ்வாதி கட்சியோ காங்கிரஸிடம் கோபம் கொண்டு, தனது செல்வாக்கைப் பலப்படுத்திக் கொள்வதற்காக துளியும் பொருத்தமில்லாதவர்களை முன்மொழிகிறது; ஆதரிக்கிறது. ஜெயா பச்சன் மாநிலங்கள் அவையில் நுழைய எவ்வித தகுதி படைத்தவர்? பொது வாழ்வுக்கும் அவருக்கும் சம்பந்தமே கிடையாது. அனில் அம்பானிக்கு அளிக்கப்படும் ஆதரவு, பலவித சந்தேகங்களுக்கு இடமளிக்கிறது. அவர் வெற்றிகரமான தொழிலதிபராக இருக்கலாம்; ஆனால், நிச்சயமாக சமூக சிந்தனையாளர் என்றோ, கல்வியாளர் என்றோ, பொருளாதார நிபுணர் என்றோ பெயரெடுத்தவர் அல்ல. அவரை ஆதரிப்பதன் மூலம் சமாஜ்வாதி கட்சி, இந்தியாவின் மிகப் பெரிய தொழிலகத்துடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்கிறது. ஆதாயங்கள் பரஸ்பரமாக இருக்கும் என்று எதிர் பார்க்கலாம். இதேபோல் கர்னாடகத்தின் ஜனதா தள் (செகுலர்), தமிழகத்தின் தொழிலதிபர் எம்.ஏ.எம். ராமசாமியைத் தேர்ந்தெடுத்து அனுப்ப இருப்பதாகச் செய்தி!

பா.ஜ.கவும் தன் பங்குக்கு, லோக்சபா தேர்தலில் தோற்ற முரளி மனோகர் ஜோஷியை நிறுத்துகிறது. நேற்று வந்த நஜ்மா ஹெப்துல்லாவை வேட்பாளராக்கியிருக்கிறது.

இவர்கள் எல்லோருமே எவ்வித சிரமமும் இன்றி எம்.பிக்கள் ஆகி விடுவார்கள். ஒருவர் கூட தோற்கப் போவதில்லை!

மாநிலங்கள் அவை என்பதே, சராசரி அரசியலில் ஈடுபடாமல், உயர்நோக்குடனும், சமுதாயப் பார்வையுடனும் சிந்திக்கவல்ல அறிஞர்களின் அவையாக ஏற்படுத்தப்பட்டது. அதனால் தான் அதற்கு மேல்சபை (மேலானவர்கள் சபை) என்று பெயர்!

இந்த நோக்கை ஓரளவு பூர்த்தி செய்யும் ஓரிருவர் நீங்கலாக, ஏனைய வேட்பாளர்கள் அரசியல் நோக்குடனும், வேறு விதமான உள்நோக்குடனும் நிறுத்தப்படுவது இந்திய ஜனநாயகத்தில் நிகழ்ந்துள்ள இன்னொரு விபத்துதான்.


இதற்கு இணையான இன்னொரு விபத்தைக் கூற வேண்டுமானால், அது நாடாளுமன்றத் தேர்தலில் தோற்ற காங்கிரஸ் வேட்பாளர் பல்ராம் ஜாக்கருக்கும், ஆர்.எல்.பாட்டியாவுக்கும் ஆளுனர் பதவிகள் வழங்கப்பட்டிருப்பதே! அரசியலில் வென்றாலும் வாழ்வு; தோற்றாலும் வாழ்வுதான் போலும்! ○



உலகம் முழுவதையும் கலக்க, கலக்கலாக ஒரு படம் வந்துவிட்டது. அது Disney pictures வழங்கும் ஜாக்கிசானின் Around the world in 80 days. முதல்நாள் லண்டனில் ஆரம்பிக்கும் படம், பத்தாம் நாளில் பாரீஸுக்கு மாறி, துருக்கி, நியூயார்க் என 'ரவுண்டு' கட்டி கலக்குகிறது. படத்தில் ஜாக்கிசானுடன் அர்னால்டும் வருகிறாராம்.

(34வது நாளில் இந்தியாவில் ஜாக்கி கூத்தடிக்கிறாராம்!)

பூஜா பாட்டி பராக்!



• பூஜாபட்.

இதுவரை உலகத்தில் நடந்துள்ள போர்களுக்கான காரணங்கள். அதனால் ஏற்பட்ட விளைவுகள், விபரீதங்கள், மனிதகுலம் சந்தித்த துயரங்களை புகைப் படங்களுடன் தருகிறது. www. iwn. org. uk, 1,60,000 போர்ச் செய்திகளையும், 3000க்கும் மேலான புகைப்படங்களையும் கொண்டுள்ள இத்தளம், லண்டனில் உள்ள இம்பீரியல் அருங்காட்சியகத்திற்கு உரிய தளமாகும். போர்களால் ஏற்படும் அழிவுகள் பற்றி எடுத்துச் சொல்லி, அமைதிக்காகப் பாடுபடுவதே இத்தளத்தின் நோக்கம்.

(போர் பற்றிய தகவல்கள் 'போர்' அடிக்காமல் இருக்குதுங்கோ!)

பூஜாபட், பாட்டி ரோலில் நடிக்கிறாராம். படம் 'Zakhm'. அது அவரது பாட்டியை மையமாக வைத்து எடுக்கப்படும் படமாம். "இந்த ரோலைப் பண்ணுவது, என் மனத்திற்கு மிகவும் திருப்தியாக உள்ளது. இந்த வேடத்தில் என்னைத் தவிர வேறு யாராலும் பண்ண முடியாது" என்று சிலாகிக்கிறார் பூஜாபட். பூஜாபட்டை பாட்டியாக தரிசிக்க, வயதான அவரது ரசிகர்கள் வாய் திறந்து காத்துள்ளனராம். சொல்வது www. rhythminto.com

(சிநேகாவோட பாட்டி கதை எதுவும் இருக்காங்க?!)

- வித்யன்

வலை பாயுதே

சந்தா கட்டுங்கதை சந்தோஷம் அள்ளுங்க!

கல்கி வழங்கும்

வாழ்க வளமுடன்

உங்கள் வாழ்க்கைத் தரம் மேம்பட

லைஃப் ஸ்டைல் மலர்

- 'கல்கி' பத்திரிகைக்கு ஆண்டுச் சந்தா ரூ.330/- மட்டும் செலுத்துங்கள். ரூ.40/- பெறுமானமுள்ள 'வாழ்க வளமுடன்' லைஃப் ஸ்டைல் மலர் **இலவசமாக** அனுப்பி வைக்கப்படும்.
- ஏற்கெனவே சந்தாதாரராக இருப்போரும் ரூ.330/- செலுத்தி தங்கள் சந்தாவை நீடித்துக் கொண்டு, 'வாழ்க வளமுடன்' சிறப்பு மலரை **இலவசமாகப்** பெறலாம்.
- முந்துங்கள்! இந்த அறிவிப்புக்குப் பிறகு வரும் முதல் 500 சந்தாதாரர்களுக்கு மட்டுமே இச்சலுகை!
- **சந்தாதாரர்களுக்கான கடைசித் தேதி: 10.07.2004**

உங்கள் முழு விலாசத்தைத் தெளிவாக எழுதி, தொகையை DD / MO / காசோலை மூலம் 'KALKI' என்ற பெயருக்கு அனுப்பவும். வெளியூர் காசோலைகளுக்கு ரூ.30/- சேர்த்து அனுப்பவும்.

கல்கி லைஃப் ஸ்டைல் மலர் தனிப்பிரதியாகவும் கிடைக்கும். விலை ரூ. 40/- கூரியரில் பெற ரூ. 60/- அனுப்புங்கள்.



முகவரி:
சர்குலேஷன் மானேஜர், கல்கி காரியாலயம்
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல்,
சென்னை - 600 097

தொகுப்பில் இருக்கிறது!
திருச்சி - 2, என். பாலசுப்ரமணி.

✉ ஆசாரம், அனுஷ்டானங்களில் தீவிரப் பற்று கொண்ட காலத்தில்கூட, பிராமண சமுதாயத்தில் பிறந்த, கே. சுப்ரமணியம் அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல், அனைவரையும் சமமாக நடத்தியதை எண்ணிப் பார்க்கும்போது, என் நெஞ்சமெல்லாம் நெகிழ்ந்தது.
திருச்சி - 102, பறம்பை இரா.சு. பிரகாசம்.

✉ 'தோல்விகள் தொடாத மனிதர்' கே. சுப்ரமண்யம் பற்றிய கட்டுரையில், 1936ல் 'பாலயோகி' படம் எடுத்ததாக வருகின்றது. அந்தப் படத்தின் பெயர் 'பாலயோகினி'; அதில் பேபி சரோஜா சிறப்பாக நடித்திருந்தாள். அந்தச் சமயத்தில் பிறந்த பெண் குழந்தைகளுக்கெல்லாம் சரோஜா என்று பெயரை வைத்தார்கள்!
திருச்சி - 102, பி.வி. குப்புசாமி.



கரும்புச் சாறு பிழிந்து..!

✉ எழுத்தாளர் வாஸந்தி, பதினான்கு வாரங்களாக அமெரிக்காவின் அருமை பெருமைகளை அழகாக எடுத்துச் சொல்லி நீங்காத இடம் பிடித்து விட்டார்.
சென்னை - 83,
லக்ஷ்மி ராமானுஜம்.

✉ 'விமானம் சென்னையைத் தொட்டபோது, உடலில் மின்சாரம் பாய்ந்தது போல் இருந்தது' என்று குறிப்பிட்டு இருப்பது, 'சொர்க்கமே என்றாலும், அது நம்ம ஊரு போல வருமா?' என்ற அற்புதப் பாடலை ஞாபகப்படுத்தியது.
திருநெல்வேலி டவுன்,
எம். வெங்கடேஸ்வரன்.

✉ 'முதல் பாடம்' போஸ்ட் கார்ட் - கதை, தென்கச்சி சுவாமிநாதனின் கதைத்

✉ கேள்விக் கணைகளைத் தாங்கிப் பிடித்து, பதில் மாலை தொகுத்த விஜய்க்கும், கவிதை மூலம் நெஞ்சில் இன்ப மழையைப் பொழிய செய்த பா. விஜய்க்கும், இவ்விரு கரும்புகளில் சாறு பிழிந்து அளித்த 'கல்கி'க்கும் மனமார்ந்த பாராட்டுகள்!
சென்னை - 18, கன்னிக்கோவில் இராஜா.

✉ 'கவர்னர் ஆகிறார் அன்பழகன்?' கட்டுரையில் டி.என். சதுர்வேதி முன்னாள் தேர்தல் கமிஷனர் எனக் கூறப்பட்டுள்ளது, தவறு. டி.என். சதுர்வேதி சி.ஏ.ஜியாக இருந்தவர்.
சென்னை - 73, கே.வி. ராமன்.

✉ 'தொலைந்த திசை' சிறுகதையின் அமைப்பு வித்தியாசமாய் இருந்தது. முடிவு மனநிறைவைத் தந்தது.
போடிநாயக்கனூர், எஸ்.எம். பாலசுப்ரமணியன்

✉ வெளி வராத 'நூல் விமர்சனம்' செம காமெடி போங்க!
சென்னை - 5, கே. கணேசன்.

✉ "காசு கொட்டும் மல்டி மீடியா' மினி கல்கி, வளரும் இளைஞர்களுக்கு தெம்பூட்டியது.
சென்னை - 94, கீதா அனந்தராமன்.

BHARATH INSTITUTE OF FASHION TECHNOLOGY & DESIGN

(A unit of Bharath College of Science & Management)
(Affiliated to Bharathidasan University)
Near New Bus Stand, Trichy Road,
THANJAVUR - 5
Ph : 04362 - 227937, 228081, E.Mail : bharathcollege@hotmail.com. Website : bharathcollege.org

ADMISSION NOTICE 2004 - 2005

1. **B.Sc.,** - Fashion Technology and Costume Designing (3 years)
2. **B.Sc.,** - Interior Decoration and Designing* (3 years)
3. **P.G.** Diploma in Apparel and Fashion Technology (1 year)
4. Diploma in Fashion Technology (1 year)

Eligibility : U.G & Diploma; +2 / H.Sc, P.G : Any Degree *Subject to Affiliation

1.State of the art infrastructure 2. Strong placement cell for constant interaction with the garment industry to help the students in securing good jobs in the industry. 3. Well constructed separate labs for Garment construction and pattern sampling. 4 U.S. Based Tukatech software for computer aided designing for garments. 5. Highly talented faculty members. 6. Well equipped Library. 7.Industrial Training to the students at the end of every semester in reputed Garment Industries at BANGALORE, CHENNAI,COIMBATORE, TIRUPUR & NEW DELHI.

NO DONATION *NO CAPITATION* *SPOT ADMISSION*

Prospectus and application Forms Rs. 50/- by cash or by DD Of Rs. 75/- drawn in favour Of BHARATH COLLEGE OF SCIENCE AND MANAGEMENT Payable at THANJAVUR.

Prof.N. GANESAN, M.Com., M.Phil., (Ph.D.,)
Secretary

Fashion - Designs Life Style, Fashion Designing Course will make style Life career.

INDIAN INSTITUTE OF CATERING TECHNOLOGY & HOTEL MANAGEMENT

(Recognised By The Government of TamilNadu)
No: 22, Shivaji Nagar, Near Membalam,
THANJAVUR - 1. Tamilnadu
Tel : (04362) 232567 / 278776 E. Mail : iicthm@hotmail.com.

ADMISSION NOTICE FOR 12th BATCH - 2004 - 2005

COURSES OFFERED	ELIGIBILITY
1. Combined Three Years Course in Hotel Management & Catering Technology	10th Std / S.S.L.C / Matriculation (H.Sc / 10 + 2 Std. Preferable)
2. B.Sc., Hotel Management and Catering Technology* (3 years)	H.Sc./ +2
3. M.Sc., Hotel Management and Catering Science* (2 years)	Any Degree
4. PGDCHM- P.G.Dip. in Catering & Hotel Mgt* (1 year)	Any Degree
5. One Year Craft Courses: a. Food & Beverage Production b. Food & Beverage Service c. House keeping d. Bakery & Confectionery	10th Std / S.S.L.C / Matriculation/+2
6. Front Office Operation (1 Year)	H.Sc./ +2 / Matriculation

*(At our Bharath College Campus)

A Decade of Educational Excellence with Better Placement

NO DONATION! NO CAPITATION!! 100% PLACEMENT!!!

HOSTEL FACILITY AVAILABLE FOR MEN & WOMEN SEPARATELY

Prospectus and Application forms can be obtained by sending a Demand Draft of Rs. 100/- drawn in Favour of the DIRECTOR, IICTHM, Payable at THANJAVUR

Prof.N. GANESAN, M.Com., M.Phil., (Ph.D.,) Director

A JOB IN YOUR HAND JOIN IMMEDIATELY

வாசகர்களும் 'விஜய் கேள்வி', கல்கி சென்னை-97 என்று குறிப்பிட்டு போஸ்ட் கார்டில் கேள்விகள் அனுப்பலாம்.





★ உங்களுக்கு அரசியல் தெரியுமா விஜய்?

- எஸ். விஜய் மாணிக்கம், சேலம்

சாதாரணக் குடிமகனுக்கு என்ன தெரியுமோ அவ்வளவு தெரியும். முதல்வர் யார், பிரதமர் யார், குடியரசுத் தலைவர் யார், நான் வசிக்கும் தொகுதியின் எம்.பி., எம்.எல்.ஏ. யார், யார்? இதை மட்டும் தெரிந்து கொண்டால் போதாதா?



★ அப்துல் கலாமிடம் உங்களுக்குப் பிடித்தது?

- என். எஸ். சஞ்சய், சேலம்

இளைஞர்கள் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கை. அப்புறம் அவர் ஹேர் ஸ்டைல்.

★ டியர் விஜய், பைபிள் படிப்பதுண்டா?

- கே. மகேந்திரன், சேலம்

எப்போது நேரம் கிடைக்கிறதோ அப்போதெல்லாம். 'உங்களுக்கு பிறர் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அதையே நீங்கள் அவர்களுக்குச் செய்யுங்கள்' என்ற வேத வசனம் ரொம்பப் பிடிக்கும்.

★ கதைக்கு ஹீரோவா? ஹீரோவுக்கு

விஜய்









கதையா, நீங்கள் எந்த கட்சி?

- டைகர் பிரேம் குமார், ஸ்ரீரங்கம்

நூறு பர்சென்ட் கதைக்குத்தான் ஹீரோ. ஒரு ஹீரோவுக்காக உருவாக்கப் படும் கதை வெற்றி பெறும் என்று உறுதி யாகச் சொல்ல முடியாது. புதிய விஷயம் உள்ள கதைகளை மட்டுமே தேர்வு செய் கிறேன். அதில் என்னிடம் ரசிகர்கள் எதிர்பார்க்கும் சில பொழுது போக்கு அம்சங்களை சேர்த்துக் கொள்கிறேன். இவை கதையை எந்தவிதத்திலும் பாதிக் காமல் பார்த்துக் கொள்கிறேன்.

சிறந்த கேள்விக்கான பரிசாக
விஜய்யின் 'மதுர' திரைப்படப் பாடல்
ஆடியோ காசட்டை
பிரேம் குமார் பெறுகிறார்.

★ உங்கள் சினிமாக்காரர்கள் தொப்புளை படாதபாடு படுத்துவது பற்றி வருந்தியதுண்டா?

- க. ரேவதி, இந்திரா நகர், திருச்சி

நீங்களெல்லாம் அதை விரும்பிப் பார்ப்பதால்தான், அதைப் படாதபாடு படுத்துகிறோம்.

★ விஜய்யின் விலை என்ன?

- எம். சிவா, தான்தோன்றி மலை

என் மீது உண்மையான அன்பு, பாசம் காட்டுகிறவர்களுக்கு நான் இலவசம்.

★ சினிமாவில் காதலை இனி காட் டக் கூடாது என்று கடுமையான சட் டம் கொண்டு வந்தால் தமிழ் சினி மாவின் கதி?


- த. சரவணன், கரூர்

அப்படி ஏதாவது சட்டம் போட் டால் தமிழ் சினிமா இன்னும் ஒரு படி உயரும். நமது இயக்குனர்கள் மூளை யைக் கசக்கி எப்படியாவது ஜெயித்து விடுவார்கள்.

★ மழையில் நனைவது பிடிக்குமா?

- ஜி. பாலு, கரூர்

அறவே பிடிக்காது...



'கில்லி' பதில்கள்

களமிறங்கினால்

"அரசியல் செய்தியாளராக வேலைக்குச் சேர்ந்து விட்டீர்கள்! காவிரி நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்னையில், தி.மு.க., அ.தி.மு.க, காங்கிரஸ் மற்றும் இதர கட்சிகள் காட்டும் முனைப்பையும், அது தொடர்பான முன்னேற்றங்களையும் ரிப்போர்ட் செய்யும் அசைன்மெண்ட் உங்களுக்கு ஒதுக்கப்படுகிறது. தற்போதைய சூழ்நிலையில், காவிரிப் பிரச்னையில் எந்தக் கட்சி அதிக அக்கறை காட்டுவதாக உணர்கிறீர்கள்?" இப்படிக் கேட்டவர் பிரபல தமிழ் தினசரி ஒன்றில் பணியாற்றி ஓய்வு பெற்ற மூத்த செய்தியாளர். அவர் முன்பு அமர்ந்திருந்த நாற்பது பேரில், இருபது பேர் "திமுக" என்றனர்.

"நீங்கள் எழுதும் செய்தியில் உங்கள் கருத்தாக இதைப் புகுத்துவீர்களா?" என அடுத்த கேள்வியை அவர் கேட்க, "நிச்சயமாக" என்று அந்த இருபது மாணவர்களிடமிருந்தும் உற்சாகமாக பதில் வந்தது. ஆனால் "நீங்கள் அத்தனை பேரும் அரசியல் செய்தி சேகரிக்கத் தகுதி அற்றவர் ஆகிறீர்கள்! உங்களையும் அறியாமல் நீங்கள் தி.மு.க மீது அபிமானம் கொண்டவராக இருக்கிறீர்கள். அரசியல் உணர்வுகளுக்கு அப்பாற்பட்டவராக, அரசியல் உணர்வு இருந்தாலும், அதைத் தனது செய்திகளிலும், செய்திக் கட்டுரைகளிலும் எவ்விதத்திலும் பிரதிபலிக்காத நடுநிலையாளரே நல்ல அரசியல் செய்தியாளராக இருக்க முடியும்" என்று செய்தி ஆசிரியர் சொல்ல, ஓர் அரசியல் செய்தியாளருக்கு அவசியமான குணங்கள் பற்றிய அன்றைய காலை வகுப்பில் வெப்ப அலைகள்.



• தன்னம்பிக்கை வகுப்பில்...

சென்னை நெல்சன் மாணிக்கம் சாலையில் உள்ள சாஃப்ட்வியூ விஷுவல் கம்யூனிகேஷன் பயிற்சி மையத்தில் நடைபெற்று வரும் இதழியல் பயிற்சி வகுப்பில்தான், இந்தச் சூடான விவாதம். "தமிழகத்தில் உள்ள பல பல்கலைக் கழகங்களும், தன்னாட்சி கல்லூரிகளும் ஏற்கெனவே இதழியல் கல்வியை டிகிரி, டிப்ளமோ படிப்புகளாகத் தரும்பொழுது, இது என்ன தனி ஆவர்த்தனம்?" என்று சாப்ட்வியூ மையத்தின் இயக்குனர் ஆண்டோ பீட்டரிடம் கேட்டோம். அவரே, "இது தனி ஆவர்த்தனம் அல்ல, தமிழ் ஆவர்த்தனம்" என்று விளக்கினார்.

"ஆங்கில இதழியல் என்பது இங்கே ஏற்கனவே பிரபலமாக இருக்கிறது. ஆங்கில இதழியல் கல்வியும் தாராளமாகக் கிடைக்கிறது. ஆனால் அதிக தேவையும், வேலை வாய்ப்புகளும் நிறைந்த தமிழ் இதழியல் துறையில் சாதிக்க விரும்புகிறவர்களுக்கு, முழுமையான தமிழ் இதழியல் கல்வி என்பது, தமிழகத்தின் தலைநகரில் இல்லை. தமிழ் மீடியாவுக்காக தமிழ் மென்பொருட்கள் தயாரிப்பு, மற்றும் தமிழ் இணைய இதழ்கள் அமைத்தல், கணினிக் கல்வி உள்ளிட்ட பல்வேறு ஊடகப் பணிகளில் கடந்த பதினான்கு ஆண்டு

கலக்கலாம்!

களாகப் பணிபுரிந்த அனுபவத்தைக் கொண்டு, டிப்ளமா இன் ''ஜர்னலிசம் பயிற்சியைத் தருகிறோம்'' என்றவரிடம் ''எதனடிப்படையில் தமிழில் முழுமையான இதழியல் கல்வி இல்லை என்று உறுதியாகச் சொல்கிறீர்கள்?'' என்றோம்.

''எங்களது பாடத் திட்டம் ஒன்று போதும். தமிழகத்தில் கிடைக்கும் பெரும்பாலான இதழியல் படிப்புகளில், கேஸ் ஸ்டடி என்பதே கிடையாது. தவிர, இன்றைய நடைமுறை இதழியலில் எதிர் கொள்ள வேண்டிய பிரச்னைகள் பற்றி மருந்துக்குக்கூட சொல்லித் தரப்படுவது இல்லை. மேலும் இணையம் மற்றும் டி.வி மீடியம் பற்றிய முறையான பிராக்டிக்கல் கல்வி என்பதும் இல்லை. மாணவர்களின் சிந்தனை, எங்களது சிலபஸ் இரண்டையும் இணைத்துக் கொள்கிறோம். ஒரு செய்தியை தொலைக்காட்சிக்குத் தரும் விதம், இணையத்தில் தரும் முறை, அச்சு மீடியத்திற்கு கையால் எழுதுவதை விடுத்து, கணினியில் விரல் தட்டி செய்தியை எழுதுவது என, இதழியலில் அடுத்தகட்டம் நோக்கிய பயிற்சியாக வடிவமைத்திருக்கிறோம். தமிழகத்தின் பிரபல தினசரிகள் மற்றும் பருவ இதழ்களில் கட்டாய இன்டெர்ன்ஷிப்பாக நேரடிப் பயிற்சியும் தருகிறோம். குறிப்பாக, எங்களது மாணவர்களின் செய்திகள், கட்டுரைகள், படைப்புகளைத் தாங்கி 'வேர்கள்' என்ற பத்திரிகை வெளி வரப் போகிறது'' என்று சொல்லும் இவர், இங்கு பயிலும் மாணவர்களை, 'காம்பஸ் இண்டர்வியூ' மூலம் தேர்வு செய்து கொள்ள, பிரபல தமிழ் நாளிதழ் முன்வந்திருப்பதையும் மகிழ்ச்சியோடு பகிர்ந்து கொள்கிறார்.



• ஆண்டோ பீட்டர்

''குறிப்பாக இதழியல் கல்வி என்ற பெயரில் ஒரு லட்சம், இரண்டு லட்சம் என்று கட்டணம் வசூலிக்கும் பயிற்சி நிறுவனங்களுக்கு மத்தியில், திறமையுள்ள பலருக்கும் தமிழ் இதழியல் கல்வி சென்று சேர, எட்டாயிரத்து ஐந்நூறு ரூபாய் மட்டுமே பயிற்சிக் கட்டணமாக நிர்ணயித்துள்ளோம்'' எனும் ஆண்டோ பீட்டர், நடப்பாண்டுக்கான தமிழக அரசின் நூலாசிரியர் விருதைப் பெற்றுள்ளவர்.

- ஸ்ரீ



வெள்ளை ராகம்

'மாணிக்க வீணை ஏந்தும் மாதேவி கலை வாணி...!'

நெஞ்சுருகப் பாடிக் கொண்டிருந்த மகளை வியப்புடன் பார்த்தான் கதிரேசன். ஸ்ருதிக்குப் பத்து வயதுகூட இன்னும் நிறையவில்லை. அதற்குள் இப்படியொரு கலைச் செல்வத்தை அள்ளிக் கொடுத்திருக்கிறான் இறைவன். மனதுக்குள் மானசீகமாய்க் கை கூப்பி வணங்கினான் அவன்.


போன வருடம் அவர்களது குடியிருப்பு சங்கத்தின் ஆண்டு விழாவில் ஸ்ருதி பாடியதும், மூன்று நிமிடங்களுக்குத் தொடர்ந்த கைத்தட்டல்களும், இப்போதுதான் நடந்தாற்போலிருக்கிறது - அதற்குள் ஒரு வருடம் நிறையப் போகிறது. இந்த வருடமும் ஸ்ருதிதான் பாடவேண்டும் என்று சங்க உறுப்பினர்கள் ஏக மனதாய்ச் சொல்லிவிட்டதில், கதிரேசனுக்கு ரொம்பப் பெருமை.

அவனது சிந்தனையைக் கலைத்தது டெலிபோன் மணி. எடுத்தால், குடியிருப்புச் சங்கத்தின் தலைவர் ஜெயசுதர்ஸனா.

"கதிர் சார், விழாவுக்கு இன்னும் ஒரு வாரம்தான் இருக்கு. எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுக்கிட்டுச் செய்யறவர் நீங்க, சங்கத்துப் பக்கமே வராம இருந்தா எப்படி?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லை சார். கொஞ்சம் வேலை அதிகம். அதான் வரமுடியலை!" என்றான் கதிரேசன். 'மத்தபடி நீங்க எனக்குக் கொடுத்த எல்லா வேலையும் ஒழுங்கா நடந்துகிட்டிருக்கு சார். நீங்க அதைப் பத்திக் கவலைப் பட வேண்டியதில்லை!"

"தெரியும்பா. இருந்தாலும் உன் வாயால அதைக் கேட்டா ஒரு நிம்மதி!" என்று சிரித்தார் தலைவர். "அப்புறம், விழாவில் உன் பொண்ணு பாடறதா இருந்ததில்லையா? அதில் ஒரு சின்ன மாற்றம்."



"என்ன சார்?" திகைப்புடன் கேட்டான் கதிரேசன்.

"போன வருஷம் உன் பொண்ணை அரங்கேற்றின மாதிரி, இந்த வருஷம் வேறொரு பொண்ணைப் பாடவைக்கலாம்னு நம்ம துணைத் தலைவர் பிரியப்படறார்ப்பா. அவரோட சொந்தக்காரப் பொண்ணு ஒண்ணு. நாங்களும் கேட்டுப்பார்த்தோம். நல்லாவே பாடுது!" என்றார் தலைவர்.

"நாமளும், வருஷா வருஷம் ஒரு புதுப் பாடகியை அறிமுகப்படுத்தினமாதிரி இருக்கட்டுமே. என்ன சொல்றே?" என்று சிரித்தார்.

"ம்ம்... அது சரி" அவனுக்குள் ஆத்திரம் பொங்கிக் கொண்டிருந்தது.

"சரிப்பா. நான் அப்புறம் பேசறேன். இப்போ கொஞ்சம் வேலை இருக்கு!"

தலைவர் ஃபோனை வைத்துவிட்டார்.

தலைவரையும், துணைத் தலைவரையும் கண்டபடி திட்டிக் கொண்டே எழுந்தான் கதிரேசன். இந்த விழாவுக்காக ஆஃபீஸ் வேலைகளையெல்லாம் ஒதுக்கிவிட்டு, மாங்குமாங்கென்று உழைத்தேனே, அதற்கு இவர்கள் செய்கிற மரியாதை இது தானா?

உள்ளறையில் ஸ்ருதி சத்தமாய்ப் பாடிக் கொண்டிருக்க, இந்தச் செய்தியை அவள் எப்படி எடுத்துக் கொள்வாளோ என்று யோசிப்



பதற்கே அவனுக்கு ரொம்பக் கஷ்டமாய் இருந்தது. பாவம், இத்தனை ஆசையாய்ப் பயிற்சி எடுத்தபின், உனக்கு மேடையில் வாய்ப்பில்லை என்று சொன்னால், வாடிப் போய் விடுவாள்!

''ஸ்ருதி...'' பொய்க் கொஞ்சலாய் அழைத்தான்.

''என்னப்பா?''

''ப்ராக்டீஸ் பண்ணினது போதும். கொஞ்ச நேரம் ஸ்கூல் பாடத்தையும் படிம்மா கண்ணு!''

ஆண்டு விழா நெருங்கிக் கொண்டிருந்தது. ஆனால் எந்த வேலையிலும் கதிரேசன் கலந்து கொள்ளவில்லை. தபாலில் வந்த அழைப்பிதழைக்கூட பிரித்துப் பார்க்காமல் தூர வீசி விட்டான்.

விழாவைப் பற்றி ஸ்ருதி விசாரிக்கும்போதெல்லாம், அவள் காயப்பட்டுவிடாதபடி பதில் சொல்வதுதான் ரொம்ப சிரமமாய் இருந்தது. 'யாரும் ஸ்ருதியிடம் இதைப் பற்றிப் பேசக் கூடாது' என்று வீட்டில் கண்டிப்பான உத்தரவு போட்டு விட்டான் கதிரேசன்.

அன்று மாலை ஸ்ருதி பள்ளியிலிருந்து மிகவும் தாமதமாய் வீட்டுக்கு வந்தாள். பதற்றத்துடன் அங்கும் இங்கும் தேடிக் கொண்டிருந்த கதிரேசனுக்கு அவளைப் பார்த்ததும்தான் மூச்சே வந்தது!

''ஏம்மா லேட்?'' பரிவோடு விசாரித்தான் கதிரேசன்.

''இன்னிக்குத்தானேப்பா நம்ம காலனி ஃபங்ஷன்!'' கண்கள் விரியக் கேட்டாள் ஸ்ருதி. 'நீங்க அங்கேதானே இருப்பீங்கன்னு நினைச்சுக்கிட்டு நான் ஃபங்ஷனுக்குப் போனேன்பா. ஆனா, உங்களைக் காணோம்!''

''ஓஹோ'' தன்னால் முடிந்தவரை இயல்பான தொனியில் கேட்டான் கதிரேசன். 'இன்னிக்குத்தானா அந்த விழா? ஸாரிம்மா. சுத்தமா மறந்துட்டேன்!''

''அய்யோ. இதைப் போய் யாராச்சும் மறப்பாங்களா?'' இலேசாய்த் தலையில் கைவைத்த அபிநயத்துடன் கேட்டாள் ஸ்ருதி. ''அப்பா, அந்த ஃபங்ஷன்ல ரூபான்னு ஒரு பொண்ணு, சூப்பரா பாடிச்சுப்பா. நீங்க மிஸ் பண்ணிட்டீங்க!'' என்றாள். தொடர்ந்து, ''போன வருஷம் எனக்குக் கைதட்டினமாதிரியே எல்லாரும் அந்தப் பொண்ணுக்கு கைதட்டினாங்க தெரியுமா?''

பாவனையாய்க் கைகளைத் தட்டியபடி வெள்ளையாய்ச் சொன்ன ஸ்ருதியை, நேருக்கு நேர் பார்க்க முடியாமல் தலை குனிந்தான் கதிரேசன். ○

உமா தரணி

நடக்குமென்பார், நடக்கும்!

மேஷம்: எடுத்த காரியத்தைத் திட்ட மிட்டபடி செய்து முடிப்பீங்க. இதுவரை இருந்து வந்த பிரச்னைகள் எல்லாம் விலகும். புதிய முயற்சிகள் இப்ப வேண்டாம். எதிலும் அவசரப் படாதீங்க. கொடுக்கல், வாங்கல் திருப்தியா இருக்கும். நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத் துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. கல்யாணம் ஆகாதவங்களுக்கு வாய்ப்பு வந்து சேரும்.

ரிஷபம்: மனசுல துணிச்சலும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். டென்ஷன் பண்ணிக் கொண்டிருந்த தடை, தாமதம் நீங்கும். வேலை விஷயமா வெளியூர் போக வாய்ப்பிருக்கு. பொருளாதார நெருக்கடி படிப் படியா குறையும். வர வேண்டிய பணம் வந்து சேரும். குடும்பத்தில் அமைதி நிலவும். இதுவரை இருந்து வந்த கருத்து வேறுபாடுகள், சண்டை சச்சரவுகள் மறையும். வழக்கு விவகாரங்கள்ல அனுகூலமான திருப்பம் உண்டு.

மிதுனம்: தெய்வீக ஈடுபாடுகளும் குரு பார்வை காரணமா புதிய பொருள், சொத்து சேர்க்கையும் நிகழும். கூடப் பிறந்தவங்களால சில பிரச்னைகள் ஏற்பட்டு விலகும். எவ்வளவுதான் பர்ஸ் கனம் ஏறிக் கொண்டிருந்தாலும், செலவு கண் மண் தெரியாமல் ஆகும். எதிர் பார்த்த நல்ல செய்தி தேடி வரும். அரசியல்வாதிகளுக்கு முன்னேற்றம் உண்டு. அரசுப் பணியாளர்கள் எச்சரிக்கையா இருங்க. கூட்டுத் தொழில் பண்றவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. புதிய முயற்சிகள்ல நிதானம் அவசியம்.

கடகம்: குடும்பத்துல சுபமங்கள காரியங்கள் நடக்க வாய்ப்பிருக்கு. பிரிஞ்சவங்க ஒண்ணு சேருவாங்க. பண வசதி தாராளமா இருக்கும். ஏற்றுமதி, இறக்குமதி தொழில் பண்றவங்களுக்கு ஆதாயம் உண்டு. எழுத்து, பத்திரிகை துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு மேன்மை உண்டு. வெளிநாட்டிலிருந்து நல்ல தகவல் வரும். அலுவலகத்தில் இருந்து வந்த சிக்கல்கள், பிரச்னைகள் இப்போது மறையும்.

சிம்மம்: இந்த வாரம் எதிர்பாராத பயணம் ஒன்று அமையும். இந்தப் பயணத்தால் நன்மை உண்டு. அரசியல் வாதிகளுக்கு இனிய ஆச்சரியம் காத்திருக்கு. வழக்கு விவகாரங்கள்ல நன்மை உண்டு. அலுவலகத்தில் எல்லோரும் பாராட்டும்படி நடந்துக்குவீங்க. எவ்வளவு பெரிய காரியத்தையும் திறமையாகச் செயல்பட்டு முடிப்பீங்க. சுயமாகத் தொழில் பண்றவங்களுக்கு லாபம் உண்டு. செலவு கட்டுக்கடங்காது. இருந்தாலும் பணம் பல வழிகள்ல வரும். பெண்களுக்கு அதிர்ஷ்டமான வாரம்.

கன்னி: கல்யாணம் ஆகாதவங்களுக்கு அதுக்கான வாய்ப்பு தேடி வரும். பெண்கள் தங்கள் எண்ணம் ஈடேறப் பெறுவார்கள். சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்க முன்னணிக்கு உயருவாங்க. எல்லா முயற்சிகள்லயும் அனுகூலமான திருப்பம் உண்டு. எதிர்பாராத பயணம் உண்டு. புதிய முயற்சிகள்ல வெற்றி உண்டு. வர வேண்டிய பணம் வந்து சேரும். கடன் தொல்லை மறையும்.



ரிஷப ராசிக்காரரான டெல்லி கணேஷுக்கு அனுகூலமான திருப்பம் உண்டு.

துலாம் : இதுவரை இருந்து வந்த சிக்கல்கள், பண நெருக்கடி, எல்லாம் மாயமாகும். புதிய தொழில், வியாபார முயற்சி கள்ல வெற்றி உண்டு. குடும்பத்தில் பிரச்னைகள் குறையும். புது வீடு, மனை, வாகனம், வாங்க வாய்ப்பிருக்கு. பெண்களுக்கு எதிர்பாராத பணவரவு உண்டு. மாணவர்கள் முன்னேற்றம் அடைவாங்க. உணவுப் பொருள்கள், நவ தானியங்கள், ஹோட்டல் தொழில்கள் ஆகிய துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு ஆதாயம் தேடி வரும். உற்சாகமான மன நிலை அமையும்.

விருச்சிகம்: இந்த வாரம் அலைச்சல். குழப்பமான மனநிலை ஆகியவை இருந்தாலும், ரொம்ப கவலைப்பட வேண்டாம். வார இறுதியில் நன்மை உண்டு. சுக்கிரன் உங்கள் ராசியைப் பார்க்கறதால உல்லாசம், உற்சாகம் ஆகியவை கூடும். பணவசதி தாராளமா இருக்கும். வேலை விஷயத்தில் அவசரம் வேண்டாம். எல்லோரிடமும் சுமுகமாகப் பேசிப் பழகுவது நல்லது. புதிய தொழில் முயற்சி வெற்றி தரும். செலவு கட்டுக்கடங்காமல் இருந்தாலும் பணவரவு அதைப் பூர்த்தி செய்யும்.

தனுசு: உற்சாகமான மனநிலை, தெய்வ பலம், தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். எல்லா முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். கொடுக்கல், வாங்கல் கை கொடுக்கும். எதிர்பார்த்த பொருளாதார உதவிகள் தேடி வரும். பழைய கடன் தொல்லை மறையும். குருபலம் பூர்ணமாக இருப்பதால் பொன், பொருள் சேர்க்கை ஏற்படும். குடும்பத்தில் நண்பர்கள், உறவினர்கள் வருகை, விருந்து, உபசாரம்னு கலகலன்னு இருக்கும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு எதிர்பாராத முன்னேற்றம் உண்டு.

மகரம்: எதிர்ப்புகள் மறையும். துணிவு, தன்னம்பிக்கை அதிகரிக்கும். வழக்கு விவகாரங்கள்ல நன்மை உண்டு. புதியவங்க அறிமுகம், முக்கியமானவங்க தொடர்பு ஏற்படும். இதனால நன்மை உண்டு. அலுவலகத்தில் உங்கள் கோரிக்கைகள் நிறைவேறும். சிலருக்குப் பதவி உயர்வு, இட மாற்றம் கிடைக்கும். குரு, குடும்பஸ்தானத்தைப் பார்ப்பதால், கல்யாணம் போன்ற சுபகாரிய முயற்சிகள் அனுகூலமாகும். பிரிந்து சென்றவங்க ஒன்று சேருவாங்க. மாணவர்கள் படிப்புக்காக வெளிநாடு போக வாய்ப்பிருக்கு.

கும்பம்: குடும்பத்திலே அமைதி நிலவும். எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். இயந்திரம், இண்டஸ்ட்ரீஸ், கமிஷன், காண்ட்ராக்ட்ஸ் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. எடுத்த காரியங்களைத் திட்டமிட்டபடி நிறைவேற்றுவீங்க. சிறு சிறு பிரச்னைகள், தடைகள் ஏற்பட்டாலும், உடனுக்குடன் நிவர்த்தியாகும். எதிர்ப்புகள் மறையும். பயணங்களில் உஷாரா இருங்க.

மீனம்: குடும்பத்தில் பொதுவாக சகஜ நிலை இருந்தாலும், எதிர்பாராத செலவுகள் வந்து சேரும். பொருளாதார நெருக்கடி உண்டாகும். எதிலும் நிதானம் அவசியம். அவசரம் கூடாது. கோபத்தைத் தவிர்ப்பது நலம். எல்லோரிடமும் சுமுகமாகப் பேசிப் பழகுவது நல்லது. அரசியல்வாதிகள் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. முன்பின் தெரியாதவர்களிடம் அதிகம் பழக வேண்டாம். வீண் பிரச்னைகள் வர வாய்ப்பிருக்கு. புதிய முயற்சிகளை இப்ப ஓரங் கட்டுங்க.

ஜூன் 23 முதல் 29 வரை

துக்கமான மனசு

இது ஓர் உண்மைக் கதை. அமெரிக்காவுக்குப் போயிருந்த போது, ரேடியோவில் கேட்ட நிகழ்ச்சி. அமெரிக்காவின் மிகப் பெரிய நகரத்தில் நடந்தது.

அது குளிர்காலம். ஒரு மாலை நேரத்தில், உடல் வெட வெடக்க, ஒரு தொப்பியை அணிந்துகொண்டு சாலை ஓரத்தில் நின்று கொண்டிருந்தாள் ஒரு மூதாட்டி. அவளுடன் ஒரு சின்னப் பெண், தலையை மொட்டையடித்துக் கொண்டு, ஒல்லியாக, நின்று கொண்டிருந்தாள். அவள் அணிந்திருந்த உடை அவளை விடப் பெரிதாக இருந்தது. யாரோ இரக்கப்பட்டுக் கொடுத்திருக்க வேண்டும். அவர்களுக்கு இருக்க இடம் ஏதுமில்லை என்பதும், பரம ஏழைகள் என்பதும் தெரிந்தது. அந்தச் சின்னப் பெண், 'எனக்கு கான்சர். தயவு செய்து உதவுங்கள்' என்று எழுதிய ஓர் அட்டையைப் பிடித்துக் கொண்டிருந்தாள்.

அந்த மூதாட்டியிடம் ஒரு பாத்திரம் இருந்தது. போக்குவரத்து விளக்கு சிவப்பு காட்டும்போது, நிற்கும் வாகனங்களின் அருகே சென்று உதவி கோரினார்கள், அம்மாவும் பெண்ணும்.

அமெரிக்கா பணக்கார நாடு. ஆனால் நோய் மட்டும் வந்து, இன்ஷூரன்ஸ் இல்லாது போனால், தொலைந்தீர்கள். யாரும் உதவ மாட்டார்கள். இந்த மாதிரி உதவி கேட்பவர்களுக்கு சிறிய தொகை கொடுத்து உதவுவார்கள், அவ்வளவுதான். இம் மாதிரிக் காட்சிகள் இந்தியாவில் சகஜம். குழந்தையுடன் பிச்சை எடுக்கிறவர்களை நிறையப் பார்க்கலாம். திருப்பதி போன்ற தெய்வத் தலங்களில், தொழு நோயால் பாதிக்கப் பட்டவர்களில் பலரைக் காணலாம். ஆனால் அமெரிக்காவில் அது சாத்தியமில்லை... மக்கள் இந்த அம்மாவுக்கும் பெண்ணுக்கும் நேர்ந்த துரதிருஷ்டத்தை 'பாவம்!' என்று சொல்லி வருந்தினார்கள், அவ்வளவுதான்.

ஒருநாள் ஒரு காவல் துறைக்காரர் அவர்களைக் கண்டார். தலை மயிர் உதிர்ந்த, கண்கள் வீங்கிப் போன குழந்தையைப் பார்த்ததும், சில கேள்விகள் கேட்டார். அவர்களுக்கு உதவ, திரும்பி, தம் பர்சைத் திறந்தார். வங்கியிலிருந்து அப்போதுதான் கொண்டு வந்திருந்த கரன்சி நோட்டுகள் கத்தையாக இருந்தன. சிறப்பாகப் பணியாற்றியதற்காக ஊக்கத் தொகை வேறு அவருக்குக் கொடுத்திருந்தார்கள். 'நமக்கு வீடு இருக்கிறது. அன்பான மனைவி இருக்கிறாள். பாசமுள்ள மகன் இருக்கிறான். கடவுள் நம் மீது உண்மையில் கருணைதான் காண்பித்திருக்கிறார். ஆனால் இந்த துரதிர்ஷ்டம் பிடித்தவர்களைப் பார்த்தால், பாவமாக இருக்கிறது. அவர்களுக்கு எதுவுமே இல்லை. கடவுளின் கருணைக்குப் பாத்திரமாக ஆகாதது அவர்கள் குற்றமே அல்ல.' மனைவியிடம் கொடுத்த பல வாக்குறுதிகளை நினைவு கூர்ந்தார்.

மகனிடம் என்ன எல்லாம் வாங்கித் தருவதாகச் சொல்லியிருந்தாரோ எல்லாமே நினைவுக்கு வந்தன. ஒரு நிமிடத்துக்கு யோசனை செய்து பார்த்தார். ஒருபுறம் கான்சர் வந்த குழந்தையும், அதன் தாயும். இன்னொரு புறம், அவருடைய மனைவியும் குழந்தையும் அடங்கிய குடும்பம். மறுநிமிடமே பர்சை அப்படியே அந்தப் பெண்ணிடம் கவிழ்த்து, மொத்தப் பணத்தையும் கொடுத்து, "குழந்தையை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள்!" என்றார்.



அவர் வீட்டுக்குப் போனதும், அவர் மகன் வாயிற்படியிலேயே அவரைக் கட்டிக் கொண்டான். வீடு, வசதிகளோடு இருந்தது. ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு மனைவி எதிரே அமர்ந்து, நடந்த நிகழ்ச்சியைச் சொன்னார்.

முதலில் கேட்கிறபோது அவர் மனைவியின் முகம் வெளிறினாலும், பிறகு அவள் முகத்தில் புன்னகை தெரிந்தது. ஆனால் மகனுக்கு ஒரே கோபம். "அப்பா, உங்களை அவர்கள் ஏமாற்றவில்லை என்பது என்ன நிச்சயம்? நீங்கள் அப்படியே பணம் கொடுத்து உதவ விரும்பினாலும், கொஞ்சம் தொகை கொடுத்தால் போதாதா? எல்லாவற்றையும் ஏன் கொடுத்தீர்கள்?"

காவல்காரர் சிரித்துவிட்டு, 'மகனே, வறுமை என்றால் என்ன என்று உனக்குத் தெரியாது. என்னுடைய வேலையில் நான் நிறைய துரதிர்ஷ்டசாலிகளைச் சந்திக்கிறேன்'' என்றார்.

நாளடைவில் எல்லோரும் இந்தச் சம்பவத்தை மறந்து போனார்கள்.

ஒரு நாள் செய்தித்தாள்களில் வந்த செய்தி ஒன்று, மகனின் கண்களில் பட்டது: 'ஏமாற்றிக் கொண்டிருந்த அம்மாவும் பெண்ணும் பிடிபட்டார்கள்!' வெகு சுவாரசியமாக அவன் வாசிக்கத் தொடங்கினான்:

மகனுக்கு இவர்கள்

• சுதா மூர்த்தி •

யார் என்று தெரிந்து போயிற்று. வருத்தமாகிவிட்டது. தகப்பனார் வந்ததும், விஷயத்தைச் சொன்னான். "அப்பா நீங்கள் ஏமாற்றப் பட்டிருக்கிறீர்கள். அந்தப் பெண் கான்சர் நோயாளியே அல்ல."

அமைதியான குரலில் அப்பா சொன்னார்: "மகனே, அந்தக் குழந்தை ஆரோக்கியமாய் இருக்கிறதல்லவா? எனக்கு அதுவே சந்தோஷம் தருகிறது!"

மகனுக்கு வியப்பாக இருந்தது. காவல் துறையில் இருப்பவர் என்பதால், ஸ்டேஷனுக்கு போன் செய்து தகவல் கொடுப்பார், அல்லது வேஷம் போட்டவர்களிடம் ஏமாந்து போனதற்காக வருத்தம் அடைந்திருப்பார் என்று பார்த்தால், அப்படி ஒன்றுமே காண்பிக்கவில்லை அவர்.

"அப்பா, உங்களை அவர்கள் ஏமாற்றி, அத்தனை பணத்தையும் எடுத்துக் கொண்டதை நீங்கள் உணரவில்லையா?உங்களை அவர்களது செய்கை பாதிக்கவே இல்லையா?" என்று கேட்டான் மகன்.

மறுபடியும் அவர், "அந்தச் சின்னப் பெண்ணுக்கு உடம்புக்கு எதுவுமில்லை என்பதுதான், எனக்கு மகிழ்ச்சி தருகிறது" என்றார்.

அதற்குள் அவர் மனைவி ஒரு கோப்பையில் காபி எடுத்துக் கொண்டு வந்து அவரிடம் கொடுத்துவிட்டு, "நான் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தேன். மகனே, நீ அதிர்ஷ்டசாலி. அத்தனை பணத்தையும் இழந்தபோதும், துளியும் சலனப்படாத அபூர்வமான தகப்பனார் உனக்கு வாய்த்திருக்கிறார். யாருடைய குழந்தையோ கான்சர் நோயின்றி உடல் நலமாக இருக்கிறது என்று மகிழும் தந்தை, உனக்கு இருப்பதற்காக நீ கடவுளுக்கு நன்றி செலுத்த வேண்டும். தமது பணத்தைவிட, அறியாத ஒரு சிறுமியின் உடல்நலம்தான் உன் தகப்பனாருக்குப் பெரிதாக இருக்கிறது. அவரிடமிருந்து கற்றுக் கொள். நீ யாருக்காவது உதவுவதாக இருந்தால், எந்த விதப் பலனையும் எதிர்பாராமல் உதவி செய்!" என்றாள்.

(அடுத்த இதழில் நிறைவுறும்)

முக்கூரார் அறுபது!



"குருவே! எவ்வளவு முயன்று பார்த்தும் இறைவனை என்னுள்ளே பிடித்து நிறுத்த முடியவில்லை... இதற்கு நான் என்ன செய்வது...? எந்த வழியும் இல்லையா...?" என்று கேட்டான் சிஷ்யன்.

சல்லடையில் மாவு சலித்துக் கொண்டிருந்தார் குரு. சலிப்பதை நிறுத்தினார். சல்லடையைத் தூக்கி சிஷ்யனிடம் நீட்டி..... "இதிலே தண்ணீர் பிடித்துப் பார்..." என்றார்.

சிஷ்யனும் குழாயடியில் சல்லடையை நீட்டித் தண்ணீர்ப் பிடிக்கப் பலமுறை முயன்று தோற்றான். திரும்பி குருவிடம் வந்து சொன்னான்: "சல்லடையில் தண்ணீர் நிற்கவில்லை... அது போல் கடவுளையும் நம்முள் நிறுத்த முடியாது என்று உணர்ந்து கொண்டேன்."

சல்லடையை அவனிடமிருந்து வாங்கினார் குரு. அதை ஒரு வாளி தண்ணீரில் அமிழ்த்தினார். தண்ணீர் அழகாய் சல்லடைக்குள் புகுந்து நின்றது.

"இந்த மாதிரி கடவுளுக்குள் நீ அமிழ்ந்து போக வேண்டும். அப்போது அவன் உனக்குள்ளே புகுந்து நிற்பான். அவனை நீ பிடித்து உனக்குள் நிறுத்திக் கொள்வதாக எண்ணுகிறாயே..... எவ்வளவு பேதைமை!"

இந்த குட்டிக் கதையைச் சொன்னவர் சுகி சிவம். முக்கூர் லக்ஷ்மி நரசிம்மாச்சார்யாரின் 'குறையொன்றுமில்லை' ஆறாம் பாகத்தை வெளியிட்டு சென்னை ஆழ்வார்பேட்டை ஆஸ்திக சமாஜம் அரங்கில் பேசினார் சுகி சிவம். "தமது பகவானிடத்தில் அமிழ்ந்து மூழ்கி அனுபவித்தவர் முக்கூரார்" என்பதை நினைவு கூர்ந்தார். முக்கூராரின் அறுபதாவது ஜன்ம தினத்தையொட்டி நடந்தது இவ் வெளியீட்டு நிகழ்ச்சி. நிகழ்ச்சிக்கு ஸ்வாதி நரசிம்ஹ மஹாயக்ஞ அறக்கட்டளை ஏற்பாடு செய்திருந்தது.

வானதி தயாரித்த நூலை கவிஞர் வாலி வெளியிட, முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டவர் கல்கி ராஜேந்திரன்.

ரிமோட்

ஈஷாவுக்குப் பிடிக்காத ௨ கேள்விகள்!

“ ‘ஆய்த எழுத்து’ல் எதிர்பார்த்த அளவுக்கு, பெரிசா பிரமாதப்படுத்த முடியலை என்கிற ஏக்கம் கலந்த ஏமாற்றம், துக்குளியூண்டு மனசோட ஓரத்துல இருந்தது. ஆனால் மணிரத்னம் படத்துலே நடிச்சதே பெரிய கௌரவமில்லையா? அதான் மறுபடி ஜாலியாயிட்டேன்” என்று ஏதோ இந்திச் சேனலில் சொல்லிக் கொண்டிருந்தார் ஈஷா! ஈஷாவுக்குப் பிடிக்காத இரண்டு கேள்விகள்:

1. எப்ப கல்யாணம்?
2. நீங்க உங்க அம்மா ஹேமமாலினி மாதிரி இல்லியே...





இசையில் ஆர்வம் உள்ள புதியவர்களை ஊக்கப்படுத்தும் சங்கீத நிகழ்ச்சிகள், எல்லா சேனல்களிலும் நீக்கமற நிறைந்து காணப்பட்டாலும், ஜெயா டி.வியின் ‘ராகமாலிகா’வில் நிறைய புதுமைகள்! இறுதிப் போட்டியில் பங்கு பெறும் பாடகர்களுக்காக, பிரத்யேகமாக ஒரு பாடலை இயற்றி, அதற்கு இசையமைத்து, ஒலிப்பதிவு செய்து, பிராக்டிகலாக டிப்ஸ் சொல்லிக் கொடுத்தார்கள்.

‘ஒரு தீயில் சருகாகி’ என்ற சோகப் பாடலை ஆண்கள் பாட, ‘அழகிய நிலவு’ என்ற ஜாலி பாடலை பெண்கள் பாட, மெல்லிசை மன்னரும், சங்கீத கலாநிதி டி.என்.கிருஷ்ணனும் சில உத்திகளைச் சொல்லிக் கொடுத்தது வித்தியாசமாக இருந்தது.

பாடல்களை எழுதியது நிகழ்ச்சியின் இயக்குநர் சுபஸ்ரீ தணிகாசலம். சினிமா பாடலாசிரியர்கள், உஷார்!

ஸ்டார் விஜய்யில் ‘சாம்ராட் அசோகா’ தமிழில் பேசினார். போர்க்களத்தில் கொல்லப்பட்ட கரீனா கபூர் திடீரென்று மை அழியாத கண்களுடன் எழுந்து உட்கார்ந்து, ஷாருக்கானுடன் சமரசம் ஆனார். சமரசம், சரித்திரத்திலேயே உண்டா? அல்லது சுப முடிவுக்காகவா?

- வாணிஸ்ரீ

துள்ளுவதே துணிச்சல்!

கோடம்பாக்கத்தின் தலையாய பிரச்னை எது? 1) திருட்டு விசிடி, 2) ஹீரோக்களின் சம்பளம், 3) நல்ல கதை.

உங்கள் பதில், திருட்டு விசிடியாக இருந்தால், நீங்கள் ஃபெயில்! தனுஷுக்குப் பொருத்தமான கதாநாயகியைத் தேடுவதுதான் கோலிவுட்டின் இன்றைய சவால்! அவரது என்புதோல் போர்த்திய உடம்புக்கும், உயரத்துக்கும் பொருத்தமான துள்ளல் கதாநாயகியைத் தேடி மும்பைக்கு விரைந்திருக்கிறார் 'கள்ளான்' பட இயக்குனர் ரமணா.



"காலை ஒன்பது மணி முதல் இரவு ஒன்பது மணி வரை ஒரு மணி நேரத்துக்கு ஒரு புதுமுகம் விதம், ஆறு நாட்கள் தங்கியிருந்து, எழுபத்து இரண்டு குஜிலிகளை நோட்டம் விட்டதில் கிடைத்தவர்தான் இந்த சிந்து துலானி" என்று பெருமிதப்படுகிறார்.

மும்பையிலிருந்து சென்னைக்குப் படிக்க வந்து, தனுஷ் பின்னால் லோ லோவென அலையும் 'காவ்யா' என்ற கேரக்டரில் துணிச்சலாக நடித்திருக்கிறாராம். துணிச்சல் என்றால் 'துணி' விவகாரத்திலும்தான் என்று சான்றிதழ் தருகிறார் இயக்குனர்.


• ஸ்ரீ

“ஆயுசுக்குள்ள நடக்குமா?”

சென்னை, காங்கிரஸ் கட்சி அலுவலகமான சத்திய மூர்த்தி பவன். அழுக்கு கதர்ச் சட்டையும், நைந்து போன வேட்டியும் அணிந்து, பஞ்சடைந்து போன கண்களுடன் உட்கார்ந்திருக்கும் அந்தப் பெரியவர், வந்து போகும் பெரிய பெரிய வி.ஐ.பிகளுக்கெல்லாம் வணக்கம் போடுகிறார். வாய் குளற நலம் விசாரிக்கிறார். ஆனால் யாருக்கும் அவரிடம் நின்று பேசக் கூட நேரமில்லை. இவர், ஒரு காலத்தில் கோவையில் பாரத் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் என்ற இரும்பு வியாபாரம் செய்து வந்த பெரிய தொழிலதிபர் என்றால் நம்ப முடியாது தான்.

“என் பேரு சாமிநாதன். சின்ன வயசுலேயிருந்தே காங்கிரஸ்னா ரொம்ப ஈடுபாடு. பெருந்தலைவர் என்னோட அரசியல் தலைவர். காங்கிரஸின் பெரிய பெரிய தலைவருங்க எல்லாம் எனக்கு ரொம்ப நெருக்கம். நாடு, கட்சி, தேச விடுதலைனு திரிஞ்சதுலே, வியாபாரம் கை விட்டுப் போச்சு. ஆனா அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமே, கட்சிப் பணியிலேயே காலத்தைக் கழிச்சேன். நேரு, சாஸ்திரி, இந்திராகாந்தி, காமராஜ், ராஜீவ் போன்ற தலைவர்களுடன் நெருங்கிப் பழகியபோது ஏற்பட்ட அனுபவங்களையும், அபூர்வ செய்திகளையும் ஆங்கிலத்துல ‘அவர் குளோரியஸ் ஹெரிட்டேஜ்’ங்கிற தலைப்பிலே புத்தகமா எழுதி முடிச்சுட்டேன். அந்தச் சமயத்துலே, பக்கவாதம் தாக்கி கை, காலு விழுந்து போச்சு. உறவுக்காரங்க யாரும் உதவலை. அதான் இங்கே வந்து காலத்தை ஓட்டறேன்” என்றார்.


* சோனியாவுடன்...


* பெருந்தலைவருடன்...


* சாமிநாதன்

சாமிநாதனின் ஒரே ஆசை, தமது புத்தகத்தை அச்சில் பார்த்து விட வேண்டும் என்பதுதானாம்.

புத்தகத்தின் தரம்...? ஜஸ்டிஸ் எஸ். மோகன், பொள்ளாச்சி என். மகாலிங்கம் போன்றவர்கள் பாராட்டி, வாழ்த்துரை வழங்கியிருக்கிறார்கள்.

“காங்கிரஸ் பிரமுகர்களும், பத்திரிகைகளும் பரிந்துரை செஞ்சா, என் லட்சியக் கனவு நிறைவேறும். அது என் ஆயுசு முடியறதுக் குள்ள நடக்குமா?” என்று பெருமூச்சு விட்டபடி, மெள்ள நடந்தார் சாமிநாதன்.

- ஏ.எஸ்

ஒரு தேவதை கல்லானாள்

அண்ணன் மாணிக்க பூபதி
கையில்
தேங்காய் பிளக்க வைத்த
குத்தீட்டி!

தம்பி பெருவழுதி கையில்
கோழி அறுக்கும் கொடுவாள்!

அந்த இடமே
ரத்தக் களறியாய் மாறியது!
பல்லக்கு முழுக்க
பிணங்களை ஏற்றி
அனுப்பினர் அண்ணன்மார்கள்!

அன்று இரவு முழுதும்
நிலவு அழுதது!
நட்சத்திரங்கள் அழுதன...

பெரியபாட்டி உயிர்போன
வெற்றுடலாய் விழுந்தாள்!
தகப்பன் மானமறுந்த
வாழ்க்கையாய் உடைத்தார்!
தாய் வயிறுகலங்கி
நெஞ்சடைந்து சாய்ந்தாள்!

அண்ணன்கள் ஆத்திரமும்
அழுகையுமாகப் புரண்டனர்!

அந்தத் தேன்சிட்டு!
ஒரு புள்ளியாய் சிறுத்து
பொசுங்கிக்கிடந்தது!

அந்தக் குதூகலக் கூட்டிற்குள்
குத்தீட்டிகள் விழுந்து விட்டன!
அந்த நட்சத்திரத் தோட்டத்திற்குள்
நாகப்புற்று தோன்றிவிட்டது!

ஒவ்வொரு நாளும்
ஒரு பிரச்னை!...

''சிவகாமியை அனுப்பு''
சீறும் ஒரு குரல்!

''சிவகாமியைக் கொடு''
வாங்க வரும் ஒருகை!
''சிவகாமியைத் தா''
கெஞ்சி நிற்கும் ஒருவாய்!

என்ன சமூகம்?
ஆதிக்கவாதிகளின் முதுகு சொறிய
சாதாரண மனிதனின்
இமைகளைப் பிடுங்குவதா?

என்ன கொடூரம்?
ஒரு வயோதிக நரியின்
விருந்து மேஜைக்கு
மயில் கறியா?

மதயானைகள்
துதிக்கைகளைத் தூக்கி
துவம்சிக்க நிற்கையில்
நடுத்தர வர்க்க நத்தை மனிதர்களால்
எத்தனை காலம் போராட முடியும்?


'இதோ,
இன்று இரவு!
ராஜாங்க சேனை வருகிறது!
சிவகாமியைக் கைப்பற்ற!'

தகவல் வந்தது வீட்டுக்கு!
ஒரு பெரும் காட்டெருமைக் கூட்டத்தை
இரண்டு புலிக்குட்டிகளால்
சூறையாட முடியுமா?

அண்ணன்கள் இருவரும்
அழுது அழுது சிவந்தனர்
வீடே விரக்தி மயம்!
சிவகாமி என்ற
சின்னப் பூஞ்சாரல் மேகம்
சோபிதம் இழந்த சோகச்சிலையாய்
உடைந்து கிடந்தது!

குடும்பத்தினர் கூடி
குலுங்கி அழுது முடிவெடுத்தனர்!

இதோ! இன்னும் சில



கண்ணாடிக் கல்வெட்டுகள்

3

* பா.விஜய் *

நாழிகையில் சேனைகள் வந்து விடும்
சிவகாமியை பலவந்தமாய்
சிறைப்பிடிக்கும்!

அந்த ஓவியப் பெண்ணை
அழைத்து வந்தனர்
நீராட்டினர்!
பூச்சூட்டினர்!
பொட்டிட்டனர்!
புதுஆடை சூட்டினர்!
ஆரத்தி எடுத்தனர்!

உட்கார வைத்தனர்!
உயிரொழுகப் பார்த்தனர்!
எதிரே
ஒரு தட்டில் தங்க நகை
ஒரு தட்டில் வெள்ளிப்
பாத்திரம்
ஒரு தட்டில் இனிப்புகள்
ஒரு தட்டில் கனி வகைகள்
ஒரு தட்டில் அலங்கார
சாதனங்கள்
ஒரு தட்டில் ஆடை
மணிகள்!
வரிசை வரிசையாய்
வரிசைகள் வைத்தனர்!

பெரியபாட்டி
மூர்ச்சையானாள்!
பெற்றவர்கள் இடிந்து போயினர்!
அண்ணன்கள் இருவரும்
அடியோடு சாய்ந்தனர்!

"அதோ கேட்கிறது
சேனை வரும் சத்தம்!"

சிவகாமியின் முகத்தில்
புன்னகையுமில்லை
கண்ணீருமில்லை!
அலறலுமில்லை
ஆவேசமுமில்லை!
குழப்பமுமில்லை
கொந்தளிப்புமில்லை!

அந்த தேவதை கல்லாகிவிட்டாள்!


இடிமேல் இடிவிழுந்த இதயம்
இறுகி இறுகி
இளகாத பாறையாகி விடும்!

அண்ணன்கள் இருவரும்
சீர்வரிசைத் தட்டுக்களை
குமுறி அழுது சுமந்தனர்!

இன்னும் சிறிது நேரத்தில்
படைகள் வந்து விடும்
பல்லக்கு வந்து விடும்
பாதுகாத்த பரம்பரை மானம்
பறந்து பறந்து போய்விடும்!

சிவகாமியை வீட்டின்
முற்றத்திற்கு அழைத்து வந்தனர்
அங்கே...
அங்கே...
அங்கே...

ஒரு பெரிய பள்ளம்
தோண்டப்பட்டு இருந்தது!



பள்ளத்தினுள் வரிசையாய்
அந்த சீர்பொருட்களை
அடுக்கினர்
அழுதனர்! அரற்றினர்!
பிதற்றினர்!

சிவகாமி மெதுவாய்
அப்பள்ளத்தினுள்
இறங்கினாள்
இமை மூடினாள்
மௌனமானாள்!

அண்ணன்கள் இருவரும்
ஒரு துளியும் சக்தியின்றி
மானம் காக்க கற்பு காக்க
மதித்து வந்த பண்பு காக்க
ஆவேசம் ஆவேசமாய் இறுகி
மண்தள்ளினர்!

பள்ளம்! அது
சிவகாமியை ஏற்றுக் கொண்டு
மண்ணால் தன்னை மூடிக் கொண்டது.

மண் சிவகாமியின் கற்பைக்
காப்பாற்றி விட்டது!
மண் சிவகாமியின் புனிதத்திற்கு
காவல் போட்டு கொண்டது!

புதைந்தாள் சிவகாமி!
புனிதமாய்
மறைந்தாள் சிவகாமி
மானமாய்...
இருப்பாள் சிவகாமி
தெய்வமாய்...

(வேறொரு ஊரில் சந்திப்போம்)



வெயில் நிழல்!

உண்டு அங்கே
எல்லா வெயிலுக்குமான
நிழல்.

சுட்டெரிக்கும் கொளுத்தும்
கொதிக்கும்
அக்னி நட்சத்திரம் தாங்கி
நிழல் விரிக்கும் பெண்மரம்.

இளைப்பாறி
ஆசுவாசப்படுத்தி
அமர்ந்து தூங்கி
ஓய்வெடுத்து நகரும் யாருமே
யோசிப்பதில்லை.

மரம் - எந்த நிழலில்
ஓய்வெடுக்கும்?

ஆண்டாள் பிரியதர்ஷிணி

திண்ணை

வயிறு குலுங்க
சிரிக்க வைக்கும்
தாத்தா சொல்லும்
பரமார்த்தகுரு கதைகள்

பெரியப்பா சொல்லும்
ஒற்றைக்கண் அரக்கன்
கதையோ
சாகசங்கள் நிறைந்தது

செய்தித்தாளைவிட
சுவாரஸ்யமானது
திண்ணையில் சேரும்
அண்டை வீட்டுப் பெண்களின்
கிசு கிசுப்பு

சொல்லிப்புரியுமா?
கூடிப்பேசும்
குதூகலங்கள்

மடியில் தலைசாய்த்து
கதை கேட்கும் சுகங்களை
வரும் தலைமுறைகளிடமிருந்து
பறித்துக் கொண்டது

எங்கள் கிராமத்திலும்
ஊடுருவிய
கேபிள் ஒயர்.

- நேதாஜி



ஜூன், 27-2004

மினி கல்கி




கௌரவ ஆலோசகர்கள்...

ஓவியர் மருது
டாக்டர் கே.ஸ்ரீதர்
டாக்டர் எஸ்.அசோக்
டாக்டர் எல்.மகாதேவன்
சவேரா ஹோட்டல்ஸ் நீனா ரெட்டி
வழக்கறிஞர் கே.சுமதி
டாக்டர் இரா.அன்புமணி
பேராசிரியர் கு.ஞானசம்பந்தம்
டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன்

பெருவாழ்வு வாழ்க!

– டாக்டர் சுதா சேஷய்யன்



''பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழவேண்டும்'' என்று வாயார, மனமார வாழ்த்துவது நமது மரபு; பண்பாடு.

காலப்போக்கில் பதினாறு கிடைத்தால் பெரும் பேறு என்று புரிகிறதே தவிர, அந்தப் பதினாறும் என்னென்ன என்று புரிவதில்லை. பதினாறு பிள்ளைகள் என்று விளக்கம் கொடுத்து, அதன் பின்னர் பதினாறு பிள்ளைகள் பெற்றால் வாழ்க்கையில் மற்றவை எவ்வளவு கிடைத்தாலும், அது பெருவாழ்வில்லை என்னும் முடிவுக்கு வந்து... பதினாறு பேறுகள்தான் என்ன?

வழிபாடும் பூஜையும் தொடங்கும்போது இறைவனிடம் பிரார்த்தித்துக் கொள்கிற ரீதியில் 'பதினாறு பேறுகள்' உண்டு. நலம், ஸ்திரத்தன்மை, வீரம், வெற்றி, ஆயுள், ஆரோக்யம், ஐஸ்வர்யம் ஆகிய ஏழும், அறம், பொருள், இன்பம், வீடு பேறு ஆகிய நான்கும், உள்ளக்கிடக்கை நிறைவேறுவது ஒன்று, சகல நன்மைகளும் கிடைப்பது ஒன்றும், சகல துன்பங்களும் நீங்குவது ஒன்றும் - ஆக மொத்தம் பதினான்கு. இவற்றோடு சந்ததிகளின் அபிவிருத்தியும், எந்த தெய்வத்திற்கு வழிபாடோ, அந்த தெய்வத்தின் அருளும் சேர்ந்தால், மொத்தமாக பதினாறு பேறுகள் என்று நிறைவான விளக்கம் தருவார் காஞ்சி ஸ்ரீ மஹா சுவாமிகள்!

பதினாறு பேறுகளை வேண்டுகிற பழந்தமிழ்த் தனிப்பாடல் இதோ:

துதிவாணி, வீறு, விசயம், சந்தானம்,
துணிவு, தனம்,
மதி, தானியம், சௌபாக்யம், போகம்,
அறிவு, அழகு,
புதிதாடு பெருமை, அறம், குலம்,
நோயகல் பூண்வயது
பதினாறு பேறும் தருவாய் மதுரை
பராபரனே.

காலவழக்கிலும் பல்வேறு நிகண்டுகளிலும் கூறப்படும் பதினாறு பேறுகள் :



• டாக்டர்
சுதா சேஷய்யன்

1. கல்வி

அரிதான மனிதப்பிறவி, பலவற்றைக் கேட்டும், பார்த்தும், உணர்ந்தும் புரிந்து கொள்ளும் திறமை படைத்ததாகும். இந்தத்



திறமையே கல்வியென்று வெளிப் பட்டு மேலும் மெருகடைகிறது. கல்வியே ஒருவருக்கு மிகச் சிறந்த செல்வம் என்று கூற விழைந்த வள்ளுவப் பெருந்தகை,

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

என்றார். மனிதராய்ப் பிறக்கும் மேன்மை கிடைத்தாலும் கூட, எல்லோருக்கும் கல்வி பயிலும் வாய்ப்புக் கிடைப்பதில்லை. மனித வடிவம் தாங்கி வந்த ராமனும் கிருஷ்ணனும், கல்வியைத் தேடிப் பெற்றார்கள். ஒரு பிறவியில் கிடைக்கும் கல்விப்பேறு, அந்தப் பிறவிக்கு மட்டுமன்று, மேலும் பல பிறவிகளுக்கும் நன்மை தரும் என்று சான்றோர்கள் கூறுவார்கள்.

2. தனம்

பொன், நகை, ஆபரணம் என்றெல்லாமும் இதனைச் சொல்வதுண்டு. மனிதப் பிறவியின் பல நன்மைகளை அனுபவிப்பதற்கும், அந்த நன்மைகளைப் பலரோடும் பகிர்ந்து கொள்வதற்கும், 'பொருள்' அல்லது 'தனம்' அவசியம். வறுமை கொடிது, அதிலும் இளமையில் வறுமை கொடிதினும் கொடிது. பிள்ளைப் பருவத்தில் வறுமையில் வாடியவர்கள், பின்னர் சமூக எதிர்ப் பாளர்களாகவே மாறிப்போனதை வரலாறு பலமுறை காட்டியிருக்கிறது.

"அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை, பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு" என்று திண்ணமாய்ச் சொல்வார் திருவள்ளுவர். வடமொழியில் 'அர்த்தம்' என்றும் தமிழில் 'பொருள்' என்றும் வழங்கப் பெறும் பெயர்களுக்கு, இரு மொழிகளிலும் இரு விளக்கங்கள் உண்டு. ஒன்று, செல்வம்; இன்னொன்று விளக்கம் (பொருள், அர்த்தம்) வாழ்வின் பொருளே, பொருளிலுள்ளது என்பதை வேகமாகப் புரிந்து கொண் டாலும், இந்தப் பொருளும் செல்வமும் நல்வழியில் வந்தவையாக இருக்க வேண்டும் என்பதனையும் உணர வேண்டும். அதனால்தான், அறத்திற்குப் பின் பொருள் (தர்மத்திற் குப் பின் அர்த்தம்) வைக்கப்பட்டது. தர்மத்தின் வழி வருவதே தனம்.

3. தானியம்

உயிர்களின் அடிப்படைத் தேவை உணவு. வேறெந்த பேறு பெற்றாலும் பெறா விட்டாலும், உணவு கிடைப்பது அத்தியாவசி

மினி கல்கி



யத்திலும் அத்தியாவசியம். வெறுமே 'உணவு' என்று குறிப்பிடாமல், 'தானியம்' என்று குறிப்பிட்டார்கள் நம் முன்னோர். தானியத்தில் எந்த வகை? தனியாகச் சுட்டப்படவில்லை. தானியம் என்ற பொதுச் சொல், பலவகையையும், அதே சமயம் முளைவிட்டு வளர்ந்து பெருகின்ற தன்மையையும் குறிக்கும். பசிக்கு இரண்டு கவளம் என்றில்லாமல், வகை வகையான உணவும், வளர்ச்சி தரும் உணவும் உண்மையான பேறுகள்தாமே! சரியான அளவாக உண்பது, மனிதப் பிறவியின் வாழ்நாளை அதிகரிக்கும் உபாயமென்பார் வள்ளுவர்.

'அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு'

4. அறிவு

பேறு என்பது பெறப்படுவது. சரி. பெற்ற பேற்றைப் பாதுகாப்பது எப்படி? அழிவு வரலாம்; குறை வரலாம்; பிறரின் பொறாமையால் பழுது வரலாம் - ஆனால், எந்த அழிவுக்கும் உட்படாத ஒன்றுண்டா? உண்டே!

அதுதான் அறிவு!! அறிவுக்கு அழிவு கிடையாது என்பது மட்டுமன்று; யாரிடம் அறிவுள்ளதோ, அவருக்கு அழிவு ஏற்படாமல் காக்கும் திறனும் அதற் குண்டு.

'அறிவு அற்றம் காக்கும்கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்.'

வெறும் கல்வி மட்டுமே அறிவாகி விடாது. கல்வியின் சேகரிப்புகளை வாழ்க்கையில் பொருத்திப் பயன்படுத்தும்போது, அறிவு மலரும். நிறையத் தெரிந்து வைத்திருப்பதைவிட, தெரிந்ததைப் பொருத்தமாகப் பயன்படுத்துவதே அறிவு. நிறையத் தகவல்களைத் (வேதங்கள் உள்ளிட்ட)





தெரிந்து தான் வைத்திருந்தான் இராவணன். என்ன பயன்? தூய்மையானவற்றைப் படித்தான்; ஆயின், மனம் தூய்மையடையவில்லை. 'கற்க கசடறக் கற்பவை' என்பது பொய்யாமொழி. தூய்மையானவற்றைக் கற்பது எனப் பொருள் பிரிப்பதைவிட, மனம் தூய்மையடையக் கற்பது எனப் பொருள் கொள்வதே உசிதம். நல்லவற்றைக் கற்பது கல்வி, கற்றதைக் கொண்டு மனத்தை நன்மைப்படுத்துவது அறிவு.

5. ஆற்றல்

இதனையே 'வலி' என்றும் வழங்குவதுண்டு.





ஒவ்வொரு மனிதனுக்கும் ஆசைகள் நிறைய உண்டு; கனவுகளும் அதைவிட நிறையவே உண்டு. ஆனால், அவற்றை நிறைவேற்றும் வலிமை வேண்டாமா?


ஒரு நினைப்பைச் செயல்படுத்த, அதை நினைப்பவரின் சுய வலிமை மட்டும் போதாது; அவரைச் சுற்றி உள்ளவர்களின் சரியான ஒத்துழைப்பு, அந்த நினைப்பின் தன்மை, செயலின் விளைவு என்று பலவும் ஒப்பவேண்டும். சூழல் சரியாக அமைய வேண்டும். இவற்றையெல்லாம் மீறி, எதிர்ப்பாளிகளின் வலிமையையும், அதனால் ஏற்படும் பாதிப்புகளையும் சரிக்கட்ட வேண்டும்.

தன் வலிமையையும், தன்னைச் சுற்றியுள்ள வலிமைகளையும் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளும் ஆற்றல் ஒருவருக்குக் கிடைத்து விடுமேயானால் இத்தகைய ஆற்றலுக்கான நவீனகால ஒற்றைச் சொல்தான் 'மேலாண்மை' (management) அவரைவிட பாக்கியசாலி யார்? இதையேதான்,

'ஒல்வ தறிவது அறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல்'

என்று விளக்குவார் வள்ளுவப் பேராசான்.

மினி கல்கி



6. அழகு

அழகுக்கு வசப்படாத உயிரோ, உணர்வோ இல்லை. ஒவ்வொருவருக்கும் (ஆணானாலும், பெண்ணானாலும்), அடுத்தவர் பார்வையில், தான் அழகாக இருக்க வேண்டும் என்ற ஆசையுண்டு. மூக்கின் நீளம் ஒரு மில்லி மீட்டர் மாறியிருந்தால் கூட, பேரழகி கிளியோபாட்ரா அழகியாக இருந்திருக்க மாட்டாள் என்று சொல்வார்கள். அகல நீளப் பரிமாணங்களின் அழகைவிட, உள்ளத்து மகிழ்ச்சியும், உள்ளுக்குள் பொங்கும் உற்சாகமும் கொடுக்கும் அழகை, வார்த்தைகள் வர்ணித்துவிட முடியுமா என்ன? காண்பவரைக் கையெடுத்துக் கும்பிட வைக்கும் அழகு, மதிப்பிட முடியாத மகத்துவம்.

வாழ்வில் எவ்வளவோ பிரச்னைகளும் சிக்கல்களும் வரலாம்; இல்லை, ஏற்றங்களும் வரலாம். எது வந்தாலும், நெஞ்சின் சமன்பாடு மாறாமல், அதனைச் சந்தித்து வெல்லும் மனநிலை கொண்டவர்கள், எப்போதும், எந்த வயதிலும், எந்தத் தருணத்திலும், எவ்வளவு களைப்பிலும் அழகாகவே இருப்பார்கள். மாறாக, பல வசதிகளும் வாய்ப்புகளும் இருந்தாலும், ஏதோ பாறாங்கல்லைச் சுமப்பது போல, சுயபரிதாபப்பட்டுக் கொள்பவர்கள் ஏதோ மாதிரித் தான் தெரிவார்கள்.

'கேடும் பெருக்கமும் இல்லல்ல
நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி'

என்று திருக்குறள் கூறும் கோடாமையை, அவரவர் வாழ்க்கையின் நியாய தருமங்களுக்கான நடுவு நிலைமையாகக் கொண்டால், அழகு ஊஞ்சலாடும்.



7. இளமை

குழந்தைப் பருவம், வளர்ந்து விடும் துடிப்பைக் கொண்டது. முதுமைப் பருவம், குழந்தையாக இருந்திருக்கக்

கூடாதா என்று ஏங்குவது. ஆயின், இளமை என்றும் நிலையாய் இருக்க விரும்புவது. எப்படியாயினும் இளமையின் அடையாளம், துடிப்பும் துருதுருப்பும்! வயதுக் கணக்கு வைத்து இளமையை அளப்பதைவிட, ஊக்கத்தின் வேகம் கொண்டு அளப்பதே உயர்வு.

இளமையை நீண்ட நாள் தக்க வைத்துக் கொள்ள நல்ல வழியும் அதுவே!

'வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு'

என்று குறளாசிரியர் கூறியதன் ரகசியமும் அதுவே! ஊக்கத்தின் ஊற்றுக் கண்ணிலிருந்து உற்சாகப் பெருக்கைப் பொங்க விட்டுவிட்டால் போதும் - உழைப்பு வெள்ளம் உள்ளவரை இளமை பூப் பூத்துக் கொண்டிருக்கும்.



8. பெருமை

பெருமை என்றால் என்ன?

உலகப்பேராசானை விட வேறு யார் விளக்கம் தர முடியும்?

'பெருமை பெருமிதம் இன்மை சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல்'

என்றார். செருக்கில்லாமல், பணிவுடன் பழகும் பாங்கு கொண்டிருத்தலையே 'பெருமை' என்று கூறலாம். ஒருவரின் உயர்வுக்காக, மற்றவர்கள் அவரிடம் காட்டுகிற மதிப்புதான் பெருமை. பணிவும் நயமும் பெருகப் பெருக, பெருமையும் பெருகிக் கொண்டே போகும்.

பிறர் நம்மைப் பார்த்துப் பெருமைப்பட வாழ்வது ஒரு பேறு. ஆனால், ஆணவத்தாலும், அகங்காரத்தாலும் நமக்கு நாமே பெருமைப்பட்டுக் கொள்வது, அந்தப் பெருமைக்கு மட்டுமல்லாமல், மனிதத் தன்மைக்கே ஊறு.

9. புகழ்

புகழ் என்னும் பேறு, அழிவற்றது. உண்மை! வேதவியாசர் முதல் விவேகானந்தர் வரை, ஆர்யபட்டர் முதல் ஐசக் நியூட்டன் வரை, மனித வடிவில் உயிருடன் இல்லை. ஆனால் அவர்களின் புகழ் இன்று வரை நிலைத்திருக்கிறது; இன்னும் வரும் காலங்களிலும் இப்புகழ் கூடுமேயன்றிக் குறையாது.

கல்கி



'ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்ப தொன்று இல்'

என்பது வள்ளுவம்.

ஒருவர் பெறும் புகழ், அவரைச் சார்ந்த பலருக்கும் மதிப்பையும், மரியாதையையும் பெற்றுத் தருகிறது. ஏன்? ஒருவரின் புகழ், அவரது பிற்காலச் சந்ததிகளுக்கும் கூட நற்பயன் தருவதைக் காண்கிறோம்.

புகழுக்கும் பிராபல்யத்துக்கும் வேறுபாடு உண்டு. பிராபல்யம், ஆரம்பத்தில் ஆர்ப்பரித்து, அதன் பின்னர் அடையாளம் தொலைத்து விடும். புகழ், என்றுமுளத் தென்றலாய் இனிமை தரும்.

10. துணிவு

முரட்டுத்தனத்துக்கோ, அசட்டு தைரியத்துக்கோ, துணிவு என்று பெயரில்லை. துணிவென்பது, உடலின் பாற்பட்டதன்று; மனத்தின் பாற்பட்டது. எப்போது துணிவு தேவை? எதற்குத் துணிவு தேவை? வேண்டுமானால் கேள்வியை மாற்றிக் கேட்கலாம் - எப்போது தான், எதற்குத்தான் துணிவு தேவையில்லை? ஒரு செயலைத் திட்டமிட்டு, சாதக பாதகங்களை எடைபோட, எண்ணத் துணிவு தேவை; பின்னர், அச்செயலைச் செயல்படுத்த, எண்ணித் துணிதல் தேவை; அந்தச் செயலில், பாதியிலேயே ஆதாயம் தேடி அவசரக் கோலமாக்காமல், நிறைவு வரை முழுமையாகச் செய்ய, செயல் துணிவு தேவை; அதற்குப் பின்னரும், விளைவுகளைச் சந்திக்கவும் துணிவு தேவை.

"துன்பம் உறவரினும்
செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும்
வினை"

என்பது திருக்குறள் வழி. எவ்வளவு துன்பம் வந்தாலும், நிறைவான செயலைத் துணிவுடன் செய்தால், இறுதியில்



கிடைக்கும் இன்பம் உறுதி தரும். சங்கடங்களுக்குச் சலனப் படாத துணிவே, சங்கடங்களைச் சலனப்படுத்தும். 'அம்புக்கும், தீக்கும், விடத்துக்கும் நோவுக்கும் அச்சமிலாதபடி' என்பார் பாரதியார். அம்பும் தீயும் விடமும் நோவும் இலாதபடி இல்லை; அவற்றுக்கு அச்சமில்லாதபடி - தார்மிகத்தோடு தலை நிமிர்த்தி நிற்பதே துணிவு.

11. வெற்றி

வெற்றி மங்கை, எல்லோருக்கும் எப்போதும் மாலையிட்டு விடுவதில்லை.





'எது வெற்றி' என்பதிலேயே கூட கருத்து பேதங்கள் ஏற்படலாம். தொழிலில், வணிகத்தில், நிறுவனத்தில், நாலு பேர் நடுவில் வெற்றி பெறுவது, சிலருக்குப் பெருமை. கட்டிய மனைவியிடத்தில், வாக்கு வாதத்தில் வெற்றி பெறுவதிலேயே சிலருக்கு பிறவியின் திருப்தி கிடைத்து விடும்.

எந்த விஷயமானாலும், எந்தச் செயலானாலும், தான் நினைத்த வகையில், நன்மையும் தர்மமும் நிறையும் விதத்தில், அதனை

மினி கல்கி



முழுமையாகச் செய்யும்போது கிடைக்கும் ஆத்ம சுகம் இருக்கிறதே, அதுவே உண்மையான வெற்றி.

ஒரு கோட்டையின் வெற்றியைக் குறிப்பிடும் வள்ளுவர், அந்தக் கோட்டை, முற்றுகைத் திறமை கொண்ட வீரர்களையும், அதே சமயம் உள்ளே புகுந்துவிட்ட எதிரிகளையும் பிடிக்கும் திறன் கொண்ட வீரர்களையும், ஒருங்கே கொண்டிருந்தால், வெற்றி நிச்சயம் என்பார். மனக் கோட்டையின் வெற்றிக்கும் இதுவே இலக்கு.


'முற்று ஆற்றி முற்றியவரையும் பற்று ஆற்றி
பற்றியார் வெல்வது அரண்'

தன் நல்ல எண்ணங்களைச் செயல்படுத்தி, உள்புகுந்துவிட்ட தீய எண்ணங்களைப் பற்றிக் களையும் அரணை உடைய மனமே, அசைக்க வியலாத வெற்றியையுடைய மனக்கோட்டை.

12. நன்மக்கள்(சந்தானம்)

சித்தம் அறிவின் முதிர்ச்சியையும், அனுபவத்தின் ஆளுமையையும் அடுத்த தலைமுறைக்கு விட்டுச் செல்லும் கடமை ஒவ்வொருவருக்கும் உண்டு. அப்படியாயின், நல்ல தலைமுறையையே விட்டுச் செல்வது என்பது அதனினும் பெரிய பேறு தானே!

மக்கட்பேற்றின் மாண்பு, எதை நோக்கி அவர்கள் தயார் செய்யப்படுகிறார்கள் என்பதிலேதான் உள்ளது. குழந்தைகள், தம் வருங் கால வருமானத்துக் கான இன்றைய



முதலீடுகளல்லவர். நாளைய சமூகச் செழுமைக்கான இன்றைய வித்துக்கள்.

'தம்மின்தம் மக்கள்
அறிவுடைமை
மாநிலத்து
மன்னுயிர்க்
கெல்லாம் இனிது'



கூட்டமாக இருக்கும் இடங்களில், குழந்தையைத் தோளில் தூக்கி வைத்துக் கொள்வார் தந்தை. அதுவரை எதுவும் தெரியாமல் மலங்க மலங்க விழித்த குழந்தை, தந்தையின் தோளில் உட்கார்ந்தவுடன், ''அப்பா, உன்னைவிட நான் உயரம், பார். எனக்கு அதோ அந்த மரம் கூடத் தெரியுது'' என்று மகிழ்ச்சிக் கூக்குரலிடும். தந்தையின் தோள்மீது ஏறிப் பரந்த வானைப் பார்ப்பது போன்றதே வாழ்க்கையும் ஆகும். முந்தைய தலைமுறையின் அனுபவத் தோள் மீதேறி அகன்ற சமூகவானை ஆழ்ந்து கவனிக்க, மக்கட்பேறே மங்கலவழியாம்! தன்னைப் பார்த்துத் தனை வெல்லவும் பிள்ளையை வளர்த்தால், அவனைப் பிறர் 'சான்றோன்' எனப் பாராட்டும்போது மகிழலாம். பெயர் சொல்லும் பிள்ளை ஒரு பேறு என்றால், பிற்காலத் தலைமுறையினர் பெயர் சொல்லும்படி வாழ்தலே அதன் அடிப்படை.

13. வாழ்நாள்

ஆயுள் நீண்டதாக இருக்க வேண்டும் என வாழ்த்துவதே மங்கல வாழ்த்து. 'ஒவ்வொரு நாளும், உயிரை மெல்ல மெல்ல அறுத்துச் செல்லும் ஒரு வாள்' என்பார்கள் அறிஞர்கள்.

தன் குறைந்த ஆயுளை நீண்ட ஆயுளாக மாற்றிக் கொண்ட பெருமைக்குரியவன் மார்க்கண்டேயன். என்றும் பதினாறாகவே மார்க்கண்டேயன் இருக்கிறான் என்பதன்



பொருள் என்ன? பதினாறு வயது இளமைத் துடிப்புடன் என்றும் வாழ்கிறான் என்று ஒரு பக்கம் பொருள் கொண்டாலும், பல்லாண்டுகளின் சாதனைகளைப் பதினாறு ஆண்டுகளிலேயே செய்கிறான் என்றும் இன்னொரு வகையில் சிந்திக்கலாம்.

நீண்ட ஆயுளை நிறைவான ஆயுளாகவும் மாற்றிக் கொள்வதுதான் மெய்யான பேறு. அத்தகைய வாழ்க்கை முடிந்து போவதில்லை. மண் தொட்டு, மணம் தொட்டு, வரலாற்றுச் சிகரங்களில் விண் தொடும் வித்தகப் பேறு அது!

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.''

14. ஆகு நல்லூழ்

எவ்வளவுதான் திட்டம் போட்டாலும், எதற்கும் யாருக்கும் புரிபடாமல் சில நடப்பதுண்டு. இவற்றையே 'விதி' என்போம். அவரவர் வினையின் பயனே அவரவர்க்கு வரும், என்று பாடம் போதிப்பதன் மூலம் நல்லவற்றை மட்டும் செய்ய வேண்டும் என்கிற தார்மிக அச்சத்தை நெஞ்சுக்குள் புகுத்தலாம்.

முன்னர் செய்தது நல்லதாக இருந்தால், இப்போது நன்மை கிடைக்கும். இதுவே 'நல்ல ஊழ்'. ஆக்கத்தைத் தரும் நல்லூழ், ஆகு நல்லூழ்.

''ம்... எதுக்கும் கொடுத்து வச்சுப் பிறந்திருக்கணும்'' என்பார்கள். அப்படிக் கொடுத்து வைப்பது எது? நம் வினை



களை, அவற்றின் பயன்களைக் கடவுளிடம் கொடுத்து வைக்கிறோம் (கடவுளை ஒரு பேரேட்டு அதிகாரி என்று கூட வைத்துக் கொள்ளலாம்). அதற்கான வட்டி விகிதாச்சாரம் போட்டுக் கணக்கு வழக்குகளை நமக்கே தருகிறார்.



இந்தப் பிறவியின் நல்ல பேறு, போன பிறவியின் நல்லூழ் என்றால், அடுத்த பிறவிகளுக்கு முதலீடு செய்ய, இப்போதே வாய்ப்புக் கிடைப்பதும் ஒரு புதுப் பேறுதானே!

'ஊழிற் பெருவலி
யாவுள மற்றொன்று
சூழினும் தான்
முந்துறும்'

என்பார் திருவள்ளுவர். சூழும் ஊழை, நல்லூழாகவே நிலைப்படுத்தினால், என்றும் அதுவொரு ஏற்றமுள்ள பேறு!

15. நோயின்மை

'தனம், தானியம், பஹுபுத்ர லாபம்' யாவும் இருப்பினும், உடல், நோயில் துவண்டு கொண்டிருந்தால், எல்லாமே வீணாகும். 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.' மனம் நோயடையாமல், ஆன்ம உணர்வு நோயடையாமல், சிந்தனையும் எண்ணமும் நோயடையாமல் இருக்க, உடலின் ஆரோக்கியம் அவசியம்.



உடலை எவ்வாறு நோயின்றிக்காப்பது என்பதற்கும் வழி சொல்லித் தருகிறார் ஒருவர். வேறு யார்? வள்ளுவர்தான்!

மினி கல்கி



'மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு'

உடலுக்கு மாறுபாடு தராத உணவை, தேவையான அளவு மட்டும் உண்டு, அதிகப் படும்போது மறுத்துவிட்டால், உடலுக்கும், உயிருக்கும் எந்தக் கேடும் நோயும் இல்லை யாம்.

16. நுகர்ச்சி

எத்தனையெத்தனை பேறுகள் கிட்டினாலும், அவற்றை அனுபவிக்கும் பேறும் கிடைக்க வேண்டுமே! கொட்டிக் கிடக்கும் பணம், குவிந்து கிடக்கும் உணவு, சிரித்து விளையாடும் பிள்ளைகள், அளவில் குறையா அழகும், இளமையும், அறிவும்... எல்லாமிருந்தும் ஏதோ காரணத்தால் அனுபவிக்கும் பாக்கியம் இல்லையென்றால்... எது இருந்தால் என்ன? இல்லா விட்டால்தான் என்ன?

குறிப்பாக, இருப்பதை நிறைவாக எண்ணி, மகிழ்ந்து அனுபவிக்கும் மனம் வேண்டும். இருப்பதை விட்டு விட்டுச் சில பேர் 'இன்னும் இன்னும்' என்று ஆலாய்ப் பறப்பார்கள். கடைசியில், இருப்பதும் போய்விடும், இன்னொன்றும் கிடைக்காது.

நுகர்ச்சி, மகிழ்ச்சியைத் தரும். மகிழ்ச்சியின் எல்லை எது? நுகர்ச்சியின் நுட்பத்தில்தான், மகிழ்ச்சியின் பரிமாணம்.

சிறு துளிரின் சிலிர்ப்பில், சின்ன மொட்டுகளின் வெடிப்பில், குட்டிப் பனித் துளியின் குறுகுறுப்பில்... உணவுக் கவளத்தின் ஊறு சுவையில்... இற்றைப் பொழுதின் இனிமையில்- நுகர்ச்சியின் துல்லியம்





நுட்பமுற நுட்பமுற, மகிழ்ச்சியின் தொடுவானம் விரிந்து கொண்டே போகும்.

பதினாறு பேறும்

அபிராமியம்பிகையிடம் விண்ணப்பித்த அபிராமி பட்டர், பதினாறு பேறுகளையும் வரிசைப்படுத்தினார். பதினாறில் முதலாவதாக 'நோயின்மை'யை வைத்தார். எந்தப் பேற்றையும் முழுமையாய்ப் பெற, முதலில் நோயற்ற தன்மை தேவை. அப்போதுதான், பெறும் பேற்றை உணர முடியும். பதினாறின் நிறைவாக ''நுகர்ச்சி'யை வைத்தார். அப்போதுதான் பெற்ற பேறுகளை உணர முடியும். உடல்நலம் முதலாக, மனச் செழுமை ஈறாக, இடை நிகழும் பேறுகள் இனியவையாகும்.

நோயின்மை கல்வி தன தானியம்
அழகு புகழ் பெருமை இளமை
அறிவு சந்தானம் வலி துணிவு வாழ்நாள் வெற்றி
ஆகுநல்லூழ் நுகர்ச்சி -

சகலருக்கும் தொகை தரும் பதினாறு பேறும் தந்தருளி, சுகானந்த வாழ்வருள எல்லாம் வல்ல எம்பெருமானின் பொற்பாதக் கமலங்களில் நெஞ்சார்ந்த பிரார்த்தனைகள்.



அட்டைப்படம், படங்கள் :
யோகா

படங்கள் : **ஸ்ரீஹரி,**
இரா. சண்முகசுந்தரம்

கார்ட்டூன்ஸ் : அரஸ்

மினி கல்கி

அள்ளிக் கொடுப்பார் அப்பா!

“பதினைஞ்சு வருஷத்துக்கு முன்னாலே, நான் ஒரு கல்யாணத்துக்காக, திருவண்ணாமலைக்குப் போயிருந்தேன். காலையிலேயே கல்யாணம் முடிஞ்சுடுச்சு; அருணாசலேஸ்வரர் கோயிலுக்கு மாலை நான்கு மணிக்குப் போவதாக ஏற்பாடாகியிருந்தது. இடைப்பட்ட நேரத்தை எப்படிக் கழிப்பது என்று நினைச்சேன். அப்போது விசிறி சாமியாரைப் பற்றி யாரோ ஒரு நண்பர் சொல்லியிருந்தது ஞாபகத்துக்கு வந்தது. ஆனால் கூட இருந்த நீதித்துறை நண்பர்கள், “மிலார்ட்... அவர் ஒரு கிராக்கு சாமியார்; பிடிச்சாதான் பார்ப்பார்; இல்லைன்னா எழுந்து போயிடுவார்” என்று பயமுறுத்தினார்கள். எனக்கு அவரைப் பார்க்கும் ஆவல் கூடியது. சாயங்காலம் நான்கு மணிக்கு அப்பாயின்மெண்ட் கிடைச்சுது.

“நானும் என் மனைவியும் சன்னதித் தெருவிலிருந்த அவரது வீட்டுக்குப் போனோம். காவி உடையில், ருத்திராட்சம் அணிந்த ஜடாமுடி சாமியாரை எதிர்பார்த்துப் போன எனக்கு ஒரே ஆச்சரியம்! வெள்ளை



உடை அணிந்த வாட்டசாட்டமான நபர், ரொம்பச் சுறுசுறுப்பாக வெளிவந்தார். என் கையைப் பிடித்துக் கொண்டு, "யூ ஆர் ஜஸ்டிஸ் அருணாசலம்?'' என்று கேட்டு, அன்போடு உள்ளே அழைத்துச் சென்றார். அவரது முகத்தில் அப்படி ஒரு தேஜஸ்! கண்களில் அப்படியொரு கருணை! அதுபோன்ற ஒளிமிக்க அன்பை, நான் காஞ்சி பரமாச்சாரியரிடம் மட்டுமே கண்டிருக்கிறேன்.



• ஜஸ்டிஸ் அருணாசலம்

ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார். 'நான்கு மணிக்கு அருணாசலேஸ்வரர் கோயிலுக்கு வருவதாகச் சொல்லியிருக்கிறோமே... ஆனால் இவர் பாட்டுக்கு, நம்மைப் பிடித்து வைத்துக் கொண்டிருக்கிறாரே... அங்கே நமக்காகக் காத்துக் கொண்டிருப்பார்களே!'' என்று எண்ணிக் கொண்டேன். உடனே, "யூ கேம் டு ஸீ அண்ணாமலையார்? யூ கேன் ஸீ நௌ" என்று சொன்னார். அப்போது அந்த அதிசயம் நிகழ்ந்தது. அவர் அப்படியே புகை போல மறைய, அந்த இடத்தில் அருணாசலேஸ்வர லிங்கம் காட்சியளித்தது. சப்தநாடியும் ஒடுங்கி அப்படியே விழுந்து வணங்கி விட்டேன். அந்த விநாடியிலிருந்து, பகவான் யோகி ராம்சுரத்குமாரின் சேவகன் நான்" என்று உணர்ச்சிவசப்பட்டார், ஜஸ்டிஸ் அருணாசலம். யோகிராம் சுரத்குமார் அறக்கட்டளையின் முதன்மை நிர்வாகி இவர்.

யோகி, 20.2.2001ல் சித்தி அடைந்தார். அவர் வாழ்ந்த காலத்திலேயே, திருவண்ணாமலை அக்ரஹாரக் கொல்லையில், ஆசிரமும், பிரார்த்தனை மண்டபமும் கொண்ட மிகப் பெரிய ஆலயம் அமைக்கப்பட்டது. அதில் அன்றாட பூஜைகள், வேதபாடம், அன்னதானம், சத் சங்கம், மருத்துவப் பணி போன்றவை சிறப்பாக நடைபெற்று வருகின்றன. அடுத்த கட்டமாக, சிவலிங்க ஸ்வரூபத்தில் யோகிக்கு சிலை சமைத்து, பிரதிஷ்டை செய்து, ஜூன் 27ம் தேதி மஹாகும்பாபிஷேகம் நடக்கவிருக்கிறது. அதற்கான பணிகளில் ஆசிரம நிர்வாகமும், பக்தர்களும் துரிதமாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

"ஆசிரமத்தின் கட்டட வேலைகள் நடந்து கொண்டிருந்த போது, ஐயாயிரம் பேர் அமரக்கூடிய பெரிய ஹாலைக் கட்ட வேண்டும் என்று விரும்பினார் யோகியார். 'அவ்வளவு கூட்டம் வருமா?' என்று நான் தயங்கினேன். உடனே, ''அதற்கும் மேலேயே பக்தர்கள் வருவார்கள். உலக ஆன்மிக மையமாகத் திகழ்ந்து அனைவரையும் ஈர்க்கும்'' என்று சொன்னார். அவர் வாக்கு பலித்துவிட்டது. இந்தக் கும்பாபிஷேகத்துக்கு லட்சக்கணக்கில் மக்கள் கூடுவார்கள். அதற்கான ஏற்பாடுகள் நிகழ்ந்து வருகின்றன" என்றார் ஜஸ்டிஸ் அருணாசலம்.



• வே. லட்சுமணன்.


ஆசிரம சேவையில் ஈடுபட்டிருக்கும் மற்றொரு வி.ஐ.பி, வித்வான் வே. லட்சுமணன்.

"யாகசாலை, சிறப்புப் பூஜை, விழா மலர், அன்னதானம், பிரசாதம், மற்ற செலவுகள் என ஐம்பது லட்ச ரூபாய்க்கு பட்ஜெட் போட்டிருக்கிறோம். ஆனால் அவருடைய பக்தர்கள் பலரும் தாமாகவே முன்வந்து செலவுகளை ஏற்றுக் கொண்டு விட்டனர். 'அப்பா'வே அள்ளித் தருகிறார். எல்லாமே அற்புதமாக நடந்து வருகிறது. சிரமமே தெரியவில்லை" என்றார் வித்வான் வே. லட்சுமணன்.

அக்னிமயமான திருவண்ணாமலையில், ஞானமே வடிவான யோகி ராம்சுரத்குமார், சிவலிங்க வடிவில் எழுந்தருளி அருள்பாலிக்கிறார். திருவண்ணாமலைக்குப் போனால், தரிசனம் செய்து உய்யலாம்... ஜெயகுருராயா...! ஜெயகுரு ராயா...!

- அனு

புக்போஸ்ட்






புதைமணல்
கௌசல்யா ரங்கநாதன்

வீர தீரப் பராக்கிரமங்களோ, விவாதித்து உலகை மாற்றும் அறிவு ஜீவித்தனமோ இல்லாத, யதார்த்த உலகின் சராசரி மனிதருக்கும் வாழ்வுண்டு. அந்த வாழ்வில் சுவையும், சுவாரஸ்யமான கதைகளும் உண்டு என்பதை, வாழ்விலும் எழுத்திலும் பெற்ற அனுபவம் படைத்த சிறுகதைகளின் தொகுப்பு.

போதி, ஜி-2, வி. ஜாவி அபார்ட்மெண்ட்ஸ், 38, காவேரி தெரு, சாலிகிராமம், சென்னை - 93, விலை ரூ. 60



கழுக்கம் - ஆலா

கவிதை வடிப்பதற்குத் தேவை இரண்டுதான். ஒன்று, கடவுளின் அருள், இன்னொன்று காதல் வசப்படுவது. விண் பார்க்கையில் முகம் பார்க்கும் கற்காலமுமில்லாமல், 'ரெண்டு சேஷே வெட்கம் கொடுங்க' என்னும் தற்காலமுமில்லாமல், தமிழ் மண்ணின் தடம் மாறாத காதல் வசப்பட்ட பதிவுகள்.

நெய்தல், 9. மேரித்தெரு, அபிசேகப்பாக்கம், புதுச்சேரி - 7, விலை ரூ. 50/-





தப்பி ஓடத்துடிக்கும் தமிழகம் - அ.கி. வேங்கடசுப்ரமணியன்

ஜனநாயக நிர்வாகத்தில் எந்த இடத்தில் கோளாறு என்று சொல்வதும், எட்டுக்கால் பூச்சி எந்தக் காலில் நொண்டுகிறது என்று சொல்வதும் ஒன்றுதான். ஆட்சிப் பணியிலிருந்த அனுபவம், குறை சொல்வது மட்டுமின்றி, அதை நிவர்த்திக்கவும் வழி சொல்கிறது. 2000-2003 ஆண்டுகளில் எழுதப்பட்ட 'தினமணி' நடுப்பக்க அரசியல் கட்டுரைகளின் சுவாரஸ்யத் தொகுப்பு.

உந்துனர் அறக்கட்டளை, 4/386, ராம் கார்டன், அண்ணாசாலை, பாலவாக்கம், சென்னை-41, விலை ரூ. 50/-

தம்ம பதம் - ஸோமானந்தா

பசியே நோய். உடல் நலமே ஊதியம். திருப்தியே பெரும் செல்வம். அடிவரை வெட்டினாலும், வேர்கள் பூமிக்குள் உள்ளவரை மரம் துளிர்ப்பதுபோல, ஆசை அடிமனத்திலிருந்து முற்றிலுமாக ஒழியாத வரை, வாழ்வில் துன்பம் ஒழியாது' - என மனித வாழ்வுக்கான தத்துவங்களைத் தன்னிடம் கொண்ட புத்த மதத்தின் வேதம், தம்மபதத்தின் தமிழ் வடிவம்.

அநுராகம், 19. கண்ணதாசன் சாலை, தி.நகர், சென்னை - 17, விலை ரூ. 30/-

கீதாஞ்சலி - ரவிந்திரநாத் தாகூர், தமிழில்: புவியரசு

உலகத்தின் பார்வையை இந்திய இலக்கியத்தின் பக்கம் திருப்பி வியக்க வைத்த வங்கக் காவியம். கீதை மட்டுமில்லாது, மற்ற மதங்களின் சாரமும் கலந்தது, மானுடத்தை உயர்த்த படைக்கப்பட்டது - என்ற பாராட்டைப் பெற்றது. வங்கக் கவிஞனின் நோபல் படைப்பின் தமிழ் வடிவம்.

கண்ணதாசன் பதிப்பகம், 23. கண்ணதாசன் சாலை, தி. நகர், சென்னை - 17, விலை ரூ. 51/-

- விஷ்வக்

நாலணா

ஒரு நாலணா நாணயம் நீண்ட நாட்களாக என்னிடம் சிக்கி அவஸ்தைப்படுகிறது.

அன்னியச் செலவாணியோ, தாராள மயமாக்கலோ, பண வீழ்ச்சியோ, ஏதோ ஒன்றின் காரணமாக, சில்லறைகளைப் பார்ப்பது மிகவும் அரிதாகி விட்டது. ஐந்து, பத்து, இருபது பைசா நாணயங்களைக் கண்களால் பார்த்தே வருடங்களாகி விட்டன. ஐம்பது பைசா நாணயம்தான் இப்போது குறைந்தபட்ச நாணயம் என்றாகி விட்டது. இதில் இருபத்தைந்து பைசா என்கிற நாலணா, மிகவும் குறைந்தபட்ச நாணயமாகும்.

எப்போதாவதுதான் நாலணா கைக்கு வரும். அதுவும் தனியாக வராது. கூடவே இன்னொரு நாலணாவை ஜோடி சேர்த்துக் கொண்டுதான் வரும். டீக் கடையில் அரை கிளாஸ் டீ, ஒண்ணரை ரூபாய். இரண்டு ரூபாய் கொடுத்தால் ஐம்பது பைசா மீதம் வரும். அதற்கே "சில்லறை இல்லை, நாளை வாங்கிக் கொள்ளுங்கள்" என்று சொல்வான்.

அபூர்வமாக சில சமயம் இரண்டு நாலணாக்களாகக் கொடுப்பான். முடிந்தவரை அதைச் சீக்கிரமாகச் செலவழித்து விடுவேன். ஆனால் இந்த நாலணா, மளிகைக் கடையில் எதையோ வாங்கிய போது, ஜோடி இல்லாமல் ஒற்றையாக வந்தது. ஜோடி வந்ததும் செலவழிக்கலாம் என்று சில நாட்கள் சட்டைப் பையிலே வைத்திருந்தேன். ஜோடி சேர்ந்தபாடாய் இல்லை.



மிகவும் வயதானவர்கள் உள்ள வீட்டைக் கவனித்திருக்கிறீர்களா? அவர்கள் என்னமோ ஓர் ஓரமாகத்தான் இருப்பார்கள். மற்றவர்கள் எதற்கோ அந்தப் பக்கமாகச் செல்ல வந்தவர்களுக்கு வழி விட நினைத்து, அவர் அப்படி நகர, அந்த நகர்வை எதிர்பார்க்காத இவர்கள் மோதிக் கொள்ள வேண்டியதாகும்.

"உன்னை யாரு நகரச் சொன்னது? நானே ஒழுங்கா போயிருப்பேன். அப்படி இப்படி அசையாம ஒரே இடத்துல இரு" என்று எரிந்து விழுவார்கள்.

அப்படித்தான் அந்த நாலணா, சட்டைப் பையில் ஓர் ஓரமாகத்தான் இருக்கும். எதையாவது எடுக்கப் போனால் அது வரும். எனவே அதை எப்படிச் செலவழிப்பது என யோசிக்க ஆரம்பித்தேன்.

நாலணா என்பது இப்போது மிகவும் சாதாரணமாகி விட்டது. ஆனால் எனது சிறிய வயதில் அது மிகப் பெரிய தொகை. நாலணாக்கள் தொடர்பாக என் வாழ்க்கையில் நிறையச் சம்பவங்கள்.

நானும் அண்ணனும் தினமும் பள்ளிக்குச் செல்கையில், அப்பா

ஆளுக்கு பத்துப் பைசாவைக் கொடுப்பார். ஜவ்வு மிட்டாய், புளிப்பு மிட்டாய், முறுக்கு என்று எதையாவது வாங்கித் தின்பது வழக்கம்.

அதே பெட்டிக் கடையில் பரிசுச் சீட்டும் இருக்கும். வால்போஸ்டர் போல் நீளமான தாள். அதன் தலைப்பகுதியில் ரஜினியோ, கமலோ சிரிக்கும் படம். அதைச் சுற்றி பத்துப் பைசாக்கள், நாலணாக்கள், எட்டணாக்கள், ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் படங்கள். அவற்றில் எண்கள் அச்சாகி இருக்கும். கீழ்ப்பகுதியில் மடித்து ஒட்ட வைக்கப்பட்ட சின்னச் சின்னச் சீட்டுகள் இருக்கும். ஒரு சீட்டைக்



கிழிக்க ஐந்து பைசா. அதில் என் இருந்தால், அதற்கு எவ்வளவோ, அது பரிசாகக் கிடைக்கும். ஜோக்கர் வந்தால் பரிசு கிடையாது.

எனக்கு அதில் மிகவும் ஆர்வம். அப்பா தருகிற பத்துப் பைசாவில், ஐந்து பைசாவைச் செலவழித்து விட்டு, ஐந்து பைசாவுக்கு சீட்டுக் கிழிப்பேன். பெரும்பாலும் ஜோக்கர்தான் வந்து கையை ஆட்டிச் சிரிப்பான்.

• ஆரணி யுவராஜ் •

"டேய் மூர்த்தி, இப்படியே காசை வேஸ்ட் பண்ணிட்டு இரு. அப்பாகிட்டே சொல்றேன்" என்று அண்ணன் மிரட்டு வான்.

அவனைச் சமாதானம் செய்ய, வாங்குகிற தின்பண்டத்தில் கொஞ்சம் கப்பம் கட்டுவேன். இப்போது அவன் போலீஸாக இருக்கிறான் என்பது இந்தக் கதைக்குத் தேவையில்லாத விஷயம். அதை விடுங்கள்.

சில சமயம் பத்துப் பைசா பரிசு விழும். ஆசையில் மீண்டும் சீட்டைக் கிழித்து, வந்ததையும் இழப்பேன். அப்படியொரு முறை கிழித்த போது, நாலணா பரிசாக விழுந்தது. துள்ளி விட்டேன்.

"அட, நீ அதிர்ஷ்டக்காரப் பயல். நாலணாவுக்கும் கிழி, ஒரு ரூபா வந்தாலும் வரும்" என்று கடைக்காரன் தூண்டில் போட்டான்.

வழக்கமாக மாட்டுவது போல் அப்போது மாட்டவில்லை. "வேணாம். காசு கொடுங்க" என்று கூறினேன்.

"டேய் மூர்த்தி, எனக்கு ஏதாவது வாங்கித் தாடா" என்றான் அண்ணன்.

"ம்ஹூம். இதை நான் செலவழிக்கவே மாட்டேன்" என்று கூறி, நாலணாவை உள்ளங்கையில் வைத்து பெருமிதத்துடன் பார்த்தேன்.

அதுதான் நான் நாலணாவை முதன் முதலாய்த் தொட்டுப் பார்த்த நாள். நீண்ட நாட்களாக அதை என் அரைக்கால் டவுசரிலே வைத்திருந்தேன். பிறகு எப்படிச் செலவானது என்று நினைவில்லை.

அடுத்ததாக ஒருமுறை திருமணத்திற்கு அம்மாவுடன் சென்றிருந்தோம். அங்கே வந்த அத்தை, எனக்கும் அண்ணனுக்கும் தலா ஒரு நாலணா கொடுத்தார்.

"நல்லாப் படிச்சு பெரிய ஆளா வாங்கடா" என்றார்.

பின்னாளில் அண்ணன் இதை அடிக்கடி நினைவுபடுத்தி, "வெறும் நாலணாவைக் கொடுத்து, காலேஜ் எல்லாம் போய் படிச்சு, பெரிய ஆளா வரச் சொன்னாங்களே அத்தை. என்ன அநியாயம் பாரு" என்று கிண்டலடிப்பான்.

பிறகு நான் ஐந்தாம் வகுப்பில் இருந்து ஆறாம் வகுப்பிற்கு மாறி, பெரிய பள்ளிக்கூடம் என்று சொல்லப்படும் மேநிலைப் பள்ளிக்குச் சென்ற போது, எனது தினப்படியும் உயர்ந்தது. அப்பா நாலணா கொடுக்க ஆரம்பித்தார்.

இப்போது என்னிடம் தங்கியுள்ள நாலணாவில் வருடத்தைப் பார்த்தேன். 1970 என்றிருந்தது. சொல்வதற்கில்லை. நான் முதன் முதலில் வாங்கிய நாலணா இதுவாகக் கூட இருக்கலாம். பலரது கைமாறி, இப்போது என்னிடமே வந்திருக்கலாம். அதுதான் போகாமல் அடம் பிடிக்கிறதோ என்னமோ, என்றெல்லாம் கூட நினைத்துக் கொண்டேன்.

எப்படி இருப்பினும் அந்த நாணயத்தைச் செலவழித்து விடுவதென தீர்மானித்து விட்டேன்.

இந்த 'போஸு' போதுமா?

'ஜூட்' படத்தில் கிராமத்து முரட்டு இளைஞராக நடித்த ஆவின் முக ஸ்ரீகாந்தை, ரசிகர்கள் ஆக்ஷன் ஹீரோவாக ஏற்றுக் கொண்டு விட்டார்களாம். விளைவு! கமாண்டோவாக, காஷ்மீர் எல்லையில் ஏ.கே.47 ரக துப்பாக்கியோடு கிளம்பி விட்டார். எல்லாம் 'போஸ்' படத்துக்காக. ஸ்ரீகாந்த் - சினேகா காதல் கிசுகிசு ஒரு பக்கம் கனஜோராய்க் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்க, இப்போது 'போஸ்' படத்திலும் ஜோடி சேர்ந்து விட்டார்கள். கேட்டால், இது வெற்றி ஜோடி என்று மட்டும் பதில் வருகிறது. காதலும் வெற்றி பெற்றால் சரிதான்.

திடீரென ஒரு யோசனை. செலவழிக்க வேண்டுமென்றால், ஏதாவது வாங்கத்தான் வேண்டுமா என்ன? எத்தனைக் கோவில்கள் இருக்கின்றன? வாசலில் உண்டியல் இருக்கிறது. போட்டு விடுவோம் என்று நினைத்தேன்.

ஆனால் கோவிலைக் கடக்கையில் நினைவே வராது. கடந்து சென்று பஸ் ஸ்டாப்பில் நின்று, பஸ்ஸை எதிர்பார்க்கும் போதுதான் நினைவுக்கு வரும். திரும்பிச் சென்று போடுவதற்கு சோம்பேறித்தனம். வருகையில், பார்த்துக் கொள்வோம் என நினைப்பேன்.

பிறகு இன்னொரு யோசனை வந்தது. அலுவலகம் செல்கிற வழியில், பிளாட்பாரம் ஓரமாகச் சில சமயம் இரண்டு பிச்சைக்காரர்களைப் பார்த்திருக்கிறேன். அவர்களுடைய தட்டில் போட்டு விட முடிவு செய்தேன்.

இந்த எண்ணம் வந்ததும், கோவில் உண்டியலில் போடும் திட்டத்தைக் கைவிட்டேன். அப்போது சரியாகக் கோவிலை நெருங்குகையில், நாலணா நினைவிற்கு வந்தது. ஆனால் மூன்று நாட்களாக அந்தப் பிச்சைக்காரர்கள் தென்படவில்லை.

நான்காம் நாள் அவர்கள் இருந்தார்கள். ஆனால் அப்போது எனக்கு அலுவலகத்துக்கு நேரமாகி விட்டிருந்தது.



நின்று சட்டைப் பையிலிருந்து எடுத்துப் போட சில நொடிகள்தான் ஆகும். அப்போதே செய்திருக்கலாம். ஆனால் அதற்குக் கூட நேரமில்லாததைப் போல் வேகமாகக் கடந்து சென்று விட்டேன்.

அடுத்த நாள் நேரமும் இருந்தது. அவர்களும் இருந்தார்கள். அந்த ஆண், போகிறவர்கள், வருகிறவர்களிடம் எல்லாம் தட்டை நீட்டி, "சார்... சார்" என்று விளித்துக் கொண்டிருந்தான்.

நான் நெருங்க, என்னிடமும் தட்டை நீட்டினான். நான் நடையின் வேகத்தைக் குறைத்து சட்டைப்பையில் மெல்ல கையை விட்டுத் தேடிப் பிடித்து, அந்த நாலணாவை எடுத்தேன். அதற்குள் அவன் எனக்குப் பின்னால் வந்தவரிடம் தட்டை நீட்டினான்.

அதனால் என்ன? நான் கொஞ்சம் திரும்பி நாணயத்தைத் தட்டில் போட்டிருக்கலாம். அதைச் செய்யாமல் தயங்கினேன். பின்னால் வந்தவரோ, ஒரு ரூபாய் நாணயத்தைத் தட்டில் போட்டு விட்டு, 'விடுவிடு'வென என்னைக் கடந்து சென்று விட்டார்.

அவன் என்னைச் சுத்தமாக மறந்து அடுத்தவரிடம் தட்டை நீட்ட, அது என்னை அவமானம் செய்ததாக நினைத்து, மீண்டும் நாணயத்தை சட்டைப்பையில் போட்டுக் கொண்டு விலகினேன்.

அலுவலகம் வந்து இருக்கையில் அமர்ந்த பிறகு, 'இப்படி வந்திருக்கக் கூடாது. போட்டிருக்க வேண்டும். சரி விடு. எங்கே போய் விடுவான். பிறகு போடுவோம்' என்று சமாதானம் செய்து கொண்டேன்.

அடுத்த நாள் ஞாயிற்றுக் கிழமை. நான் கடைக்குச் சென்று காய்களை வாங்கிக் கொண்டு வீடு திரும்பினேன். பாத்ரூமில் கழிவுநீர் செல்கிற தரையோடு இருக்கிற துளையை, மனைவி கொம்பினால் குத்திக் கொண்டிருந்தாள்.

"என்ன ஆச்சு?" என்று கேட்டேன்.

"தண்ணி போகலை" என்றாள்.

"தண்ணியை மட்டும் ஊத்தினாதானே போகும்? சாப்பாட்டுலே இருந்து எடுத்துப் போடற மிளகாய், கறிவேப்பிலைன்னு எல்லாத்தையும் கொட்டினா, அடைச்சுக்காம என்ன செய்யும்? கொடு இப்படி. பிடி இதை" என்று எரிச்சலுடன் சொன்னேன்.

காய்கறிப் பையைக் கொடுத்து விட்டு கொம்பை வாங்கி குத்துவதற்குக் குனிய, சட்டைப்பையில் இருந்து நழுவிய நாலணா, 'விர்ர்ர்' என பயணமாகி, குழிக்குள் விழுந்து காணாமல் போனது.

"அடடா" என்றேன்.

"என்ன ஆச்சு?" என்று கேட்டாள் மனைவி.

"நாலணா ஒண்ணு விழுந்துட்டது" என்றேன்.

"நாலணாதானே, போகட்டும் விடுங்க" என்று சாதாரணமாகக் கூறி விட்டுச் சென்றாள்.

எனக்கும் அப்போது அது சாதாரணமாகத்தான் இருந்தது, அடுத்த நாள் அலுவலகம் நோக்கிச் செல்கையில் தட்டை நீட்டிய அந்தப் பிச்சைக்காரனைப் பார்க்கும்வரை! ○



'ப்ரெஞ்ச் வோக்'னு ஒரு பத்திரிகை! அதன் அட்டைப் படத்துலே வர்றது ரொம்பப் பெரிய விஷயம். பதினாறு வருஷத்துக்கு முன்னாலேயே அதன் அட்டையில் இடம் பெற்ற முதல் கறுப்பின அழகி, நவோமி கேம்பல்!

மாடலிங் அழகி, நடிகை, பாடகி, எழுத்தாளி, என அம்மணிக்கு நிறைய முகங்கள்!

பி.ஈ.டி.ஏ. (பீபிள் ஃபார் எதிகல் ட்ரீட்மெண்ட் ஆஃப் அனிமல்ஸ்) என்ற அமைப்பின் ஆஸ்தான ஸ்போக்ஸ் மாடலாக இருந்தார். ஆனால் மிலன் நகரில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் ஃபர் ஆடையில் தோன்றினார் என்று குற்றம் சாட்டி, சீட்டு கிழித்து விட்டார்கள்.


அதனால் என்ன? ஜெர்மனியில் ஹாம்பர்க் நகரில் நடந்த 'பெண்களுக்கான உலக விருது' வழங்கும் நிகழ்ச்சியில், உலகின் தலை சிறந்த மாடல் அழகிக்கான விருது கொடுத்து நவோமியை சோகக் கடலிலிருந்து கரையேற்றி விட்டார்கள்!

'' 'பேக்ட் லேஸ் பொடேடோ சிப்ஸின் விளம்பரப் படத்தில் நான் நடித்ததிலிருந்து ''ஏய்... உருளை... என்று கிண்டலடித்துக் கொண்டிருந்தார்கள். இந்த விருது எனக்கு மிகப் பெரிய கௌரவம்'' என்று நெகிழ்ந்து ஆனந்தக் கண்ணீர் வடித்திருக்கிறார் உருளை.... ஸாரி... நவோமி!

- ஐஸ்

உருளைக்கிழங்கு அழகி!

சிரித்து வாழ வேண்டும் - 46



"பேப்பர்காரன் போட்டுட்டானே!"

நாடகம் சம்பந்தப்பட்ட வேலையை கவனிக்க வேண்டி இருந்ததால், ஆபீசிலிருந்து டிமிக்கி கொடுத்துவிட்டு, சீக்கிரமாகப் போவதற்காக நான் போட்ட திடீர் வயிற்றுவலி நாடகம், ஆன்டி கிளைமாக்ஸில் முடிந்தது.

வலுக்கட்டாயமாக என்னை ரயில்வே ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்து விட்டார்கள்.

திருடனுக்குத் தேள் கொட்டிய கதை தான்!

ஆஸ்பத்திரிக்குப் போனதும், "ஒண்டிக்கட்டை, ரூமில் இருப்பதற்கு பதிலாக ஆஸ்பத்திரியில் இருந்து விட்டுப் போகலாம். இரண்டு நாள் இப்படித்தான் ஜாலியாகக் கழியட்டுமே!" என்று என்னை நானே சமாதானப்படுத்திக் கொண்டேன்.

இரண்டு நாட்கள் ஆனதும், என்னைப் பார்க்க வந்த டாக்டரிடம், "டாக்டர்! எனக்கு வயிற்று வலி பரிபூரணமாக குணமாகிவிட்டது. நான் நாளை முதல் ஆபீஸ் போகலாம் என்று நினைக்கிறேன்" என்றேன்.

டாக்டர், "இல்லை... இன்னும் இரண்டு நாள் போகட்டும். அப்புறம் டிஸ்சார்ஜ் பண்ணலாம்" என்று சொல்லி விட்டுப் போய்விட்டார்.

நாகேஷ்

இரண்டு நாட்கள் கழித்து, "டாக்டர்! என்னை எப்போ டிஸ்சார்ஜ் பண்ணப் போறீங்க?" என்றேன்.

"இப்போ உன்னை டிஸ்சார்ஜ் பண்ண வேணாம்னு நினைக்கிறேன். இன்னும் ஒரு வாரம் போகட்டும். பார்க்கலாம்" என்று அவர் சொல்ல எனக்கு ரொம்ப ஏமாற்றமாகிவிட்டது.

நான் வயிற்று வலியே இல்லாமல் நாடகம் ஆடியதை டாக்டர் புரிந்து கொண்டு விட்டாரோ, என்ற சந்தேகம் ஏற்பட்டது. அதற்குப் பிறகு, ஆஸ்பத்திரி ஒரு சிறை போல ஆகிவிட்டது. வெறுத்துப் போனேன்.

நான் தடாலென்று அவரது காலில் விழுந்து விட்டேன். "சார்! எனக்கு உண்மையில் வயிற்று வலி கிடையாது. வயிற்று வலி என்று நான் பண்ணினது எல்லாம் நாடகம். இதைப் புரிந்து கொண்ட நீங்கள், எனக்கு இப்போது தண்டனை கொடுத்துக் கொண்டு இருக்கிறீர்கள். போதும் சார்! இது போன்ற தப்பை, இனி நான் வாழ்க்கையில் இன்னொரு தடவை செய்யமாட்டேன். ஐயம் வெரி ஸாரி! என்னை மன்னித்து விடுங்கள்!" என்று கெஞ்சினேன்.

"ம்... எழுந்திரிப்பா!" என்றார் டாக்டர். அர்த்தம் பொதிந்த புன்னகையை உதிர்த்துவிட்டு, என்னை ஆஸ்பத்திரியிலிருந்து டிஸ்சார்ஜ் செய்ய சிபாரிசு செய்தார்.

இந்த வயிற்றுவலிக் கதை ஒருபக்கம் இருக்கட்டும். நான் நிஜத்தில் லிவர் பாதிப்புக்குள்ளாகி, ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட கதையைக் கேளுங்கள்.

சிகரெட் பழக்கம் எனக்கு இளம் வயதிலேயே வந்துவிட்டது. சினிமாவில் பிசியானபின், ஏற்பட்ட மன அழுத்தம், டென்ஷன், நேரம், காலம் பார்க்காத உழைப்பு போன்ற பல்வேறு காரணங்களால், மதுப் பழக்கமும் வந்துவிட்டது. இந்த வேண்டாத பழக்கங்களை என்னால் விட முடியவில்லை. ஒரு கட்டத்தில் என்னுடைய ஈரல் பெரும் பாதிப்புக்களானது.

"நாகேஷ், சினிமாத் தயாரிப்பாளர்களுக்கு கால்ஷீட் கொடுத்தது போதும் என்று எமனுக்கு கால்ஷீட் கொடுத்து விட்டாராமே!" என்று திரையுலகில் சிலர் விமர்சனம் கூடச் செய்ததாகக் கேள்விப்பட்டேன்.

நான் உடல் நலம் மோசமான நிலையில் ஜி.ஹெச்.சில் சேர்க்கப்பட்ட விவரம் திரையுலகத்தினர் மத்தியில் மட்டுமின்றி, பொதுவாக தமிழக மக்கள் மத்தியில் கவலையுடன் பேசப்பட்டது.

நான் ஆஸ்பத்திரியில் இருந்தபோது, ஒவ்வொரு நாளும் காலை ஆறுமணிக்கெல்லாம் திரையுலகின் இரண்டு முக்கியஸ்தர்கள் தவறாமல் வந்து பார்த்து விட்டுப் போவார்கள். அந்த இரண்டு பேர் யார் தெரியுமா? எம்.ஜி.ஆரும், சின்னப்பா தேவரும்தான். எம்.ஜி.ஆர். என்னைத் தட்டிக் கொடுத்துவிட்டு, "உடம்பு குணமாயிடும்! தைரியமா இரு!" என்று ஆறுதல் சொல்வார்.

தேவர், என்னுடைய தலைமீது தம் கைகளை சில விநாடிகள் வைத்து, பிரார்த்தனை செய்துவிட்டு, எனக்கு ஆசி வழங்குவார். நெற்றியில் இருநீறு பூசி, "என் அப்பன் முருகன் உன்னைக் காப்பாற்றி விடுவான். பயப்படாதே!" என்று சொல்வார்.

அந்தக் காலகட்டத்தில், என் உடல் நிலை மோசமாக இருந்தது என்றாலும், பத்திரிகைகளில் நான் கவலைக்கிடமாக இருப்பதாகவும், பிழைப்பது அரிது என்ப

சேட்டையால் வந்த ரகளை!

வேலூர் ஸி.எம்.ஸி. மருத்துவமனை அருகே சினிமா போஸ்டர்கள் மிகுதியான பகுதி. இரண்டு 'பைக்'குக்ளில் வந்த இளைஞர்கள் சினிமா போஸ்டர்களைப் பார்த்தபடி ஓட்ட, ஒருவர் மீது ஒருவர் மோதிக் கொண்டனர். உடனே கூட்டம் கூடி அவ்விருவரும் ஒருவரை ஒருவர் ஏசிக் கொள்வதை ரசித்தது. அப்போது ஒருவர், "இதெல்லாம் 'சேட்டை'யால வந்த 'செமரகளை', நீங்க என்ன 'எதிரி'யா இல்ல 'கில்லி'ஆடற பசங்களா? ஆனது ஆச்சு போங்கப்பா. இல்லேன்னா போலீஸ் வந்து 'குத்து'விடும். மறந்துட்டு 'கம்பீரமா' போங்கப்பா" என்றார். சண்டை போட்டவர்கள் கூட தங்களை மறந்து சிரித்து விட்டுப் போய் விட்டனர்.

- பாவேந்தர்

தாகவும் செய்திகள் வெளியாகிக் கொண்டு இருந்தன. இதைப் படித்த பொது மக்கள் பலர் நான் பூரண குணம் அடைய பிரார்த்தனை செய்து, எனக்குப் பிரசாதம் அனுப்பி வைத்தார்கள். இந்த நாட்டில், இத்தனை பேர் அபிமானத்தை நான் பெற்றிருக்கிறேனா என்று நான் மெய்சிலிர்த்துப் போனேன்.

எனக்கு சிகிச்சையளித்தவர் டாக்டர் ரங்கபாஷ்யம். தீவிர சிகிச்சை செய்தும், எதிர்பார்த்த அளவுக்கு பலன் கிடைக்கவில்லை. ஒரு நாள், "அமெரிக்காவிலிருந்து ஒரு குறிப்பிட்ட மருந்தை



உடனடியாக வரவழைத்து, நாகேஷுக்கு ஊசி போட்டால் உயிர் பிழைப்பதற்கு வாய்ப்பு உண்டு" என்று சொல்லி விட்டார் டாக்டர்.

அமெரிக்காவிலிருந்து விலை உயர்ந்த அந்த மருந்தை உடனடியாக எப்படி வரவழைப்பது? அந்தத் தருணத்தில் என்றைக்கும் என்னுடைய அன்புக்கும், மரியாதைக்கும் உரிய பாலாஜி உதவ முன் வந்தார். அமெரிக்காவில் இருந்த தம்முடைய டாக்டர் நண்பருக்குத் தகவல் கொடுத்தார். "விமானத்தின் பைலட்டிடம் கொடுத்தாவது மருந்தை சென்னைக்கு உடனடியாக அனுப்பி வையுங்கள்" என்று கேட்டுக் கொண்டார்.

என்னுடைய உயிர் கெட்டி போலும்! அமெரிக்காவிலிருந்து மறுநாளே மருந்து வந்து சேர்ந்தது. அது உடனடியாக செயல்படத் துவங்க, சீக்கிரமே பலன் தெரிய ஆரம்பித்தது.

அடுத்த சில நாட்களில் நான் முழுமையாகக் குணமடைந்து வீடு திரும்பினேன். மரணத்தின் வாயில் வரை சென்று விட்ட என் உயிரை மீட்டு வந்து, எனக்கு மறு பிறவி கொடுத்த பாலாஜியும், டாக்டர். ரங்கபாஷ்யமும் என்னைப் பொறுத்தவரை கடவுளுக்குச் சமமானவர்கள். இது, வெறும் புகழ்ச்சிக்காகச் சொல்லப்படுகிற வார்த்தை கிடையாது. என்னுடைய இதயத்திலிருந்து, மீண்டும் உயிர் பெற்ற என் விவரில் இருந்து வரும் வார்த்தைகள்!

நலமுடன் வீடு திரும்பிய நான் மறுபடியும் ஷூட்டிங்கில் பிஸியானேன். ஒரு தடவை அவுட்டோர் ஷூட்டிங்கிற்காகப் போயிருந்த சமயம் நடந்த சம்பவம், என்னால் எப்போதும் மறக்கவே முடியாத ஒன்று. ஷூட்டிங் நடந்த இடத்தில் ஒதுக்குப்புறமாக நின்று கொண்டிருந்த ஓர் இளம் பெண் என்னை உற்றுப் பார்த்துக் கொண்டு இருந்தார்.

நான், 'என்ன பார்க்கறீங்க?' என்றேன்.

"யாரு நீங்க?" என்று அந்தப் பெண்மணி கேட்டுக் கொண்டே என்னை நெருங்கி வந்தார்.

"நாகேஷ்!" என்றேன்.

"நாகேஷா? நீங்க தான் போயிட்டீங்களாமே!" என்றார் ரொம்ப சாதாரணமான குரலில்.

எனக்கு அதிர்ச்சி தாங்க முடியவில்லை.

"உடம்பு சரியில்லாம ஆஸ்பத்திரியிலே இருந்தேன். இப்போ எல்லாம் சரியாயிடுச்சு!" என்றேன்.

"அதான் நீங்க போயிட்டீங்கன்னு பேப்பர்காரன் போட்டுட்டானே!" என்றார்.

எனக்கு 'பக்' என்றிருந்தது!

(சிரிப்பு தொடரும்)

பின்னோர்கள்

செல்வந்தர் ஒருவரின் மணி மாடத்தில் விளக்கேற்றும் பணிக்கு ஆள் எடுப்பதாகக் கேள்விப்பட்டு, சான்று ஓலைகளுடனும், நற்சான்று ஓலைகளுடனும் சென்ற நன்னனுக்கு அதிர்ச்சி கிட்டியது. நேர்முகத்தில் பங்கு பெற இவனையொத்த பலர் இருந்தார்கள். வந்திருந்தவர்களில் ஒருவன் ''இதெல்லாம் வெறும் கண்துடைப்பே..'' என்று முணுமுணுத்தான்.

நன்னனுக்கு ஏமாற்றமாக இருந்தது- இந்தப் பணி - அதாவது நிரந்தரப்பணி கிடைத்தால்தான், குயில்பாடினியை மணம் செய்து கொடுப்பேன் என்று அவளது தந்தை திட்டவட்டமாகச் சொல்லி விட்டார். அடுத்தவரிடம் கைகட்டி சேவகம் புரியாது, சுயமாக குறுவாள் உறைகள் விற்பதில் பொற்காசுகள் தாராளமாகக் கிடைக்கிறது என்று நன்னன் போராடிப் பார்த்தான். பலனில்லை. அவனுக்கு வெறுப்பாக இருந்தது. ஏன் இந்த இளைஞர்களின் ஆற்றலை கடல் சூழ் உலகம் ஏற்க மறுக்கிறது? கடந்தகால மதிப்பீடுகளில் சிக்கித் தவிக்கிறது? அந்தக் காலத்து மதிப்பீடுகளில் வாழும் மனிதர்களின் - குறிப்பாக முதியோர்களின் மனோபாவம் நகைப்பிற்குரியது.

நேர்முகத்தில், 'விளக்கேற்றுவதில் முன் அனுபவம் உண்டா?'' என்றார்கள். ''என் இல்லத்தில் ஏற்றியுள்ளேன், யானைகள் உலவும் காட்டிற்குச் சொந்த மானவனே...!''

''சிறிய கொட்டாரங்களில், சத்திரங்களில் விளக்கேற்றிய அனுபவம் உண்டா?''



விண்ணோடும் வியக்கும் வீரம் உடையவனே என்று விளிக்கலாமா என நினைத்து, ''பகக்கூட்டத்தை உடையுவனே, நான் யாழ் வாசிப்பதில் நிபுணன். இலக்கணம் நன்கு அறிவேன், உதாரணமாக, மாயோன் மேய காடுறை உலகமும், சேயோன் மேய மைவரை உலகமும், வேந்தன் மேய..'' என்றான் நன்னன்.

''தேவையில்லை. எங்களுக்கு விளக்கேற்றும் அனுபவம்தான் வேண்டும்..'' என்றார் தேர்வாளர்களில் ஒருவர்.

''அத்தகு அனுபவம் இல்லை ஐயா..'' என்றான் நன்னன் எரிச்சலுடன்.

''அனுபவம் இன்றி ஆணை இல்லை''

''யாராவது பணி தந்தால்தானே ஐயா, அனுபவம் கிட்டும்...?'' இவனைப்

போய் முல்லை நிலத் தலைவனே என்று புகழ்ந்தோமே!

''அதெல்லாம் யாம் அறியோம். எங்கள் விதிகள் அனுபவம் பற்றித் தெளிவாகக் கூறுகின்றன. நல்லது...



அடுத்து சிறு அம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி, பெருவழுதி...''

நன்னன் சலிப்புடன் எழுந்தான். அனுபவம் இன்றி, பணி இல்லை. பணி இருந்தால் தான் அனுபவம். என்ன ஓர் அமைப்பு... அந்தக் காலத்து விதிமுறைகள்! பணி கிடைத்திருந்தால், இந்தப் பாடலைப் பாடியிருக்கலாம்.

ஏமாற்றத்துடன் வெளியே வந்தான். எதிர்பார்த்த பணி கிடைக்கவில்லை. காதல் தோல்வி. இனிய சுனை நீரில் பூத்த குவளை மலர்களைச் சூடிய குயில் பாடினியுடன் உடன் போகிச் செல்லலாம் என்றால், அவள் உடன்பட மறுக்கின்றாள். சமீபகாலமாய் குறுவாள் உறைகள் விற்பனையில் சுணக்கம். ஏதேனும் பாக்கள் எழுதி அரசனிடம் பொற்காசுகள் பெறலாம் என்றால், அங்கும் ஒரு கூட்டம் ஓலை நறுக்குகளோடு நிற்கிறது. அந்தக் காலத்துப் பெரிசுகள்...

அவன் மெல்ல தனது இல்லத்தை நோக்கி நடக்கத் துவங்கினான். புரவிகள் இரண்டு கடந்து சென்றன. வணிகர்கள் தத்தம் பொதிகளோடு சென்று கொண்டிருந்தார்கள். நிலமகளைத் துன்புறுத்தாத பாதங்களை உடைய ஒருத்தி, தன் செவிலித்தாயோடு சென்று கொண்டிருந்தாள். கதம்ப மாலை அணிந்த ஒருவன், ''விண்மீன்களை ஆராய்ந்து பலன் கூறப்படும்'' என்று கூவிக் கொண்டிருந்தான். நன்னன் அவனிடம் சென்று சிறிது நேரம் செலவிட்டதில் ''எதிர்பாராத ஆபத்து வரலாம்...'' என்று எச்சரிக்கை கிடைத்தது. நன்னன் எரிச்சல் அடைந்தான்.

என்ன ஓர் அவனி! வறியவர்கள் ஈ என இரக்கிறார்கள். ஒரு கூட்டம் தேறல் உண்டு, பரத்தையர்களுடன் பொழுதைக் கழிக்கிறது. ஒரு புறம் மேடு. இன்னொரு

ஷங்கர் பாபு

புறம் பள்ளம். ஒரு சாரார் இல்லத்தில் நெய்க்குடங்கள். ஒரு சாரார் வீட்டில் நெருப்பறியா அடுப்புகள். மோசமான சமூக அமைப்பு... அந்தக் காலத்து முறைகள் எதுவுமே சரியில்லை.

தன் இல்லத்தை அடைந்தான். யாருமில்லை. அன்னை மலர் கொய்யச் சென்றிருக்கலாம். தந்தை அங்காடியில் கணக்கு எழுதச் சென்றிருக்கலாம்.

ஒருவரை ஒருவர் புரிந்து கொள்கிற, அடுத்தவரை நேசிக்கிற உலகம். அங்கே வறியவர்கள் இல்லை. அனைவரும் முன்னேறுகிற, கடந்த காலக் கசடுகள் நீங்கிய உலகம். இப்படி ஓர் உலகம் என்று ஏற்படும்? என்று பிறக்கும் அந்த விடியல்?

இரண்டாயிரம் ஆண்டுகள் கழித்தாவது...? நிச்சயம் அவ்வளவு ஆண்டுகள் பிடிக்கும். ஆயிரக்கணக்கான யுகத்து அழுக்குகள் நீங்க அவ்வளவு காலம் பிடிக்கும்...

இவ்விதம் நன்னன் நினைத்துக் கொண்டிருந்தபோது, புழக்கடையில் ஏதோ சத்தம் கேட்டது. முதலில் அலட்சியப்படுத்தியவன் தொடர் சப்தத்தின் வேகம் கண்டு, கதவைத் திறக்கவும், அவன் உள்ளே வரவும் சரியாக இருந்தது.

அவன்...!

நன்னன் வியந்து அவனைப் பார்த்தான்.

அவன் தரித்திருந்த ஆடைகள் இதற்கு முன் கண்டிராதவை. தலையில் கவசம் போல் ஏதோ ஒன்று. நன்னன் ஆர்வமுடன் "யார் நீ...? எங்கிருந்து வருகின்றாய்?" என்றான்.

"நானா..? எதிர்காலத்துலர்ந்து வர்றேன்... சரி, கௌம்பு..." என்றான் அவன்.

"புரியவில்லை... யந்திரங்களால் சூழப்பட்டவனே..."

அவனைச் சுற்றி சில யந்திரங்கள்.

"ம்... உன்னோட பின்னோர். இது டைம் மெஷின். இந்த நிமிஷத்துலர்ந்து... ரெண்டாயிரம் வருஷம் கழிச்சு வர்றேன்... எதிர்காலத்துலர்ந்து வர்றேன்..." என்றான் வந்தவன்.

நன்னன் உற்சாகமடைந்தான். சற்று முன்தான் நினைத்தோம்... "எதிர்கால மனிதனே... உன்னிடம் நான் தெரிந்து கொள்ள வேண்டியவை நிறைய உள்ளன. கனிகள் உண்..."


"ஒக்காந்து பேசற அளவு இன்னா இருக்கு... வந்தமா, விசயத்த முடிச்சமான்னு போய்கிட்டே இருக்கணும்..." என்றவாறு அவன் அமர்ந்தான்.

"பின்னோர் உலகைச் சேர்ந்தவனே... உனது காலம் யாது? அந்த உலகம் எப்படி இருக்கிறது? வறியவர்கள் எவரேனும் உள்ளனரா? எல்லோர்க்கும் எல்லாம் கிடைக்கின்றதா? அன்பும், அறனும் பெற்று அனைவரும் வாழ்கின்றனரா?"

வந்தவன் தன் கவச ஆடையைத் தளர்த்திக் கொண்டான். "என் காலம் கி.பி. 2004. எங்கப்பா எல்லோரும் சமதானமா வாழறோம்? யுத்தம், தீவிரவாதம் எல்லாம் இருக்கத்தான் செய்யுது. உலகம் பூரா சனங்க அடிச்சுக்கறாங்க - சாப்பாட்டுக்காக, தண்ணீருக்காக, பைசாவுக்காக... ஏழை ஏழையாத்தான் இருக்கான்... ஏதோ வண்டி ஓடுது..."

நன்னனால் அவனது ஆயாசத்தைப் புரிந்து கொள்ள முடிந்தது. சிறிது ஏமாற்றமடைந்தான்.

"சரி, கௌம்பு... இது எங்களோட டைம் மெஷின்.



"தலைவர் தம்மையும் அறியாமல் உண்மையை உளறித் தொலைச்சுட்டாரா...! அப்படி என்ன சொல்லிட்டார்?"

"'நமது பொருளாதாரக் கொள்ளை' என்கிற தலைப்பிலே என்னைப் பேச அழைத்திருக்கிறார்கள்'னு பேச்சைத் தொடங்கினாரே!"

- கே.என். பாலகிருஷ்ணன்

முதன்முதலா, கடந்த காலத்துள் பயணம் பண்ணி, ஒரு மனிதனைச் சந்திக்கிறேன்...! உன்னை பத்திரமா கொண்டு போகணும். அப்ப தான் ஸீனியர் சயின்டிஸ்ட் போஸ்டிங்னு எங்க ப்ரொபஸர் சொல்லிட்டார்.."

''என்னை பத்திரமாகத் திருப்பி அனுப்பி வைப்பாயா?''

''அனுப்பறதா?'' வந்தவன் சிரித்தான். ''மிஸ்டர் கடந்த காலம், உன்னை ரிஸர்ச் பண்றதுக்காக எங்க லேப்ல வச்சிருப்போம். மறைமுகமாகச் சொன்னா, நீ எங்களோட பரிசோதனைப் பிராணி.... இதுக்கே எவ்வளவு செலவு பண்ணியிருக்கோம்...!''

நன்னன் ஆபத்தை உணர்ந்து, தன் குறுவாள் இருக்கும் திசையை நோக்கினான்.

''இந்தத் துப்பாக்கி முன்னால் உன்னோட கத்தி செல்லாது மகனே... ஸாரி, தந்தையே...!''

'''குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் பரம்பரையில் வந்தவன் நான்..ம், யார் அங்கே..!'' கைதட்டினான்.

''இந்த மாதிரி ஆயுதத்தைப் பாத்திருக்கியா நீ...? எத்தினி பேர் வந்தாலும் சுடுவேன். இது இன்னா தெரியுமா? இதுலர்ந்து வெளி வர்ற வாயுவை சுவாசிச்சீங்க... ரெண்டு நாள் கழிச்சுதான் எந்திரிப்பீங்க... மரியாதையா கோ-ஆப்ரேட் பண்ணு...''

''உதவுங்கள்... உத்திர வழுதி. இரும்பொறை...''

''வரட்டும். கொன்று விடுவேன்!...'' அவன் ஒவ்வொரு திசையையும் சுட்டான். பானை தெறித்தது. சுவரில் விரிசல் ஏற்பட்டது. நன்னன் உறைந்து போனான்.

நன்னன் அழத் துவங்கினான். ''விநோதப் பொறியை உடைய கரங்களை உடையவனே... இது தகாது!''

''டேய், பொலம்பாதடா...'' இப்போது அவன் கையில் வேறொரு கருவி. ''உன்னை இப்போ மயக்கத்துல ஆழ்த்தப் போறேன்...''

''பதரே...!'' நன்னன் கண்ணீருடன் கதறினான். ''முல்லைத் திணையின் தெய்வம் மாயோன் என்பது உண்மையானால், குறிஞ்சிக்கடவுளாம் சேயோனை நான் வணங்குவது உண்மையானால்...'' அடுத்து என்ன சொல்வது என்று திணறிய போது -

அவன் அலட்சியமாய் தன் ஆயுதத்தை இயக்க எத்தனித்த போது

அது நடந்தது.

மெலிதான சத்தம். மின்னல் போல வெளிச்சம். நன்னனும், அவனும் பார்க்க - கோள வடிவப் பொறி மிதந்து வர, புகையினூடே அந்த உருவம் வெளிப்பட்டது. யந்திரத்தின் சாயலும், குரலும் கொண்டிருந்த அது, ''நான் கி.பி. பத்தாயிரத்திலிருந்து வர்றேன். எதிர்த்து, தோற்க வேண்டாம். எங்களது அறிவியல் வளர்ச்சியைச் சொன்னாலும் புரியாது. பரிசோதனைப் பொருட்களே, யுகா பஸ்ஸில் ஏறிக் கொள்ளுங்கள்.''

இருவரும் அலறி, ''ப்ரதர், ப்ரதர், விட்ருங்க ப்ரதர்'' என்றும் ''வீரக்கழல் புனைந்த கால்களை உடையவனே...'' என்றும் கெஞ்சி, தப்பிக்க வேறு வழியே இல்லை என்ற போது ஒரே குரலில், ''உன்னிடம் சில கேள்விகளைக் கேட்க விரும்புகிறோம்...'' என்றார்கள். ○




''கிரிமினல் குற்றச்சாட்டுக்கு உள்ளானவங்களுக்கு அமைச்சர் பதவி கிடைச்சிருக்கலாம்; அதுக்காக அவரோட ஆதரவாளர்கள் இந்த அளவுக்குப் போகக் கூடாது...''

''ஏன்? என்ன ஆச்சு?''

'' 'கேடி வாழ்ந்தால் கோடி நன்மை'ன்னு போஸ்டர் அடிச்சு ஒட்டறானுங்க!''

- வே. ஆறுமுகம்



"கிராமத்துப் பெண்ணாக 'சொல்ல மறந்த கதை'யில் நடிச்சாலும் நடிச்சேன். மாடர்ன் ரோல் எதுவுமே வர மாட்டேங்குது. நல்ல வடிவமுள்ள எனக்கு இப்படி ஒரு பேட் லக்" என்று அலுத்துக் கொண்டிருந்த ரதிக்கு, 'மகாலட்சுமியின் லக்' படம் கை கொடுத்திருக்கிறது. நவ நாகரிக மங்கையாகத் துள்ளாட்டம் போட்டிருக்கிறாராம்.

ஷெரீனுக்கும்



'தம்' படத்துக்குப் பிறகு தன்னுடைய மார்க்கெட் ஒரு எகிறு எகிறும் என்று ரக்ஷிதா நினைத்தது தப்பாகிவிடவே, கன்னடக்கிளி அப்செட்! 'மதுர' படத்தில் விஜய்யுடன் வந்து போகும் வேஷமானாலும் பரவாயில்லை என்று ஒப்புக் கொண்டிருக்கிறார்.



ஷெரீனுக்கும் சிம்ரனுக்கும் உலக மகா ஒற்றுமை! ஸாரி... வேற்றுமை! 'ரீன்', காதலரைக் கழற்றி விட்டு வாய்ப்பு தேடுகிறார். 'ரன்', கணவருடன் சேர்ந்து வாய்ப்பு தேடுகிறார்... இரண்டு பேருக்கும் ரிஸல்ட் என்னவோ முட்டைதான்.

சிம்ரனுக்கும்...?



''சினிமா எடுத்து கையைச் சுட்டுக்கிட்டேன். நடுவுலே வீட்டை வேறே கட்டிட்டேன். சிரம தசைதான்'' என்று கையைப் பிசைந்த தேவயானிக்கு, தன்னுடைய சொந்தப் படமான 'கிரி'யில் முக்கியமான வேடம் கொடுத்து உதவி செய்திருக்கிறார் குஷ்பூ.


ஆரம்ப ஆசிரியர்

எனக்குத் தெரிந்த பையன் ஒருவன் ஐந்தாவது ஃபாரத்தில் படித்துக் கொண்டிருந்தான். அவன் துர்சகவாசத்தினால் கெட்டுப் போய், கெட்ட வழிகளில் இறங்கினான். ஒருமுறை அவன் தன் அண்ணன் மனைவியின் நகைகளைத் திருடிக் கொண்டு போய், சில தினங்கள் எங்கேயோ கெட்டலைந்து கடைசியாக வீட்டுக்குத் திரும்பி வந்து சேர்ந்தான்.

அப்போது தமையனார் தம்பிக்கு அன்புடன் சொன்ன புத்திமதியாவது ''தம்பி! போனது போகட்டும். எல்லாவற்றையும் மன்னித்து விடுகிறேன். இனிமேல் உனக்குப் படிப்பில் புத்தி செல்லாது. படித்தது போதும். ஏதாவது பிழைப்புக்கு வழி பார்க்க வேண்டும். வக்கீல் குமாஸ்தா ஆகிறாயா? ஆனால் அதில் எடுத்ததும் வருமானம் கிடைக்காது. கோயில் கணக்குப் பிள்ளையாகலாம். தர்மகர்த்தாவை எனக்குத் தெரியும். சிபாரிசு செய்கிறேன். இதுவும் உனக்குப் பிடிக்காவிட்டால், டிரெயினிங்குக்குப் போய் வந்து, பள்ளிக்கூட உபாத்தியாயராகவாவது ஆகலாம். ஆமாம், எல்லாவற்றையும் விட இதுதான் நல்லது. சிபாரிசு கிபாரிசு ஒன்றும் வேண்டியதில்லை. சுலபமான வேலை. என்ன சொல்கிறாய்?'' என்றார். பையன் தற்போது டிரெயினிங் ஸ்கூலில் படித்து வருகிறான்!

நான் இத்தனை சக்கர வட்டமாக எழுதுவதெல்லாம், ஓர் ஆரம்ப ஆசிரியரின் அருளினால்தான். அவர் இருக்கும் திக்கு நோக்கித் தண்டம் சமர்ப்பிக்கிறேன். இன்றும் எனது பிரிய நண்பர்களில் சிலர் ஆரம்ப ஆசிரியர்கள். என் மதிப்புக்குரிய பெரியோர்களில் பலர் ஆரம்ப ஆசிரியர்கள். எல்லாவற்றிலும் முக்கியமானது என்னவென்றால், நானும் தற்போதைக்கு ஒரு முறையில் ஆரம்ப ஆசிரியர்தான். ஆகவே ஆரம்ப ஆசிரியர்களைப் பற்றி நான் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. அந்தத் தொழிலின் தற்கால நிலைமையைப் பற்றியே கூறினேன்.

"ம-ர-ம் = மரம்," "ம-ர-ம் = மரம்'' என்று பன்னிரண்டு தடவை சொல்லிக் கொடுத்த பிறகு, பையன், "ப-ள-ம் = மழ்ழும்" என்று அழுத்தம் திருத்தமாய்ச் சொல்லுகிறான். "ஐயோ? கர்மமே?" என்று உபாத்தியாயர் தலையில் அடித்துக் கொள்கிறார். இதற்குள் ஒரு பையன், "ஸார்! சீனு என் புத்தகத்தைக் கிழித்து விட்டான்'' என்று கத்துகிறான். மற்றொருவன், "ஸ்லேட்டுக் குச்சியைக் காணோம்'' என்கிறான். வேறொரு பையன் தேம்பித் தேம்பி அழுகிறான். எவ்வளவு தடவை கேட்டாலும் பதில் வருவதில்லை. இதற்குள் வாசலில் ஏதோ சத்தம் கேட்கிறது. எல்லாப் பிள்ளைகளும் எழுந்து வெளியே ஓடுகிறார்கள். அவர்களைத் திரட்டிக் கொண்டு வந்து சேர்ப்பதற்குள், உபாத்தியாயருடைய பிராணன் உச்சந் தலைக்கு வந்து விடுகிறது.



இந்த உண்மைகளை மேநாட்டார் நன்கு

உணர்ந்திருக்கிறார்கள். ஆரம்பக் கல்விக்குக் கோடி கோடியாய்ப் பணம் செலவழிக்கிறார்கள். உயர்தரக் கல்விக்குச் செலவு செய்கிறார்கள். டாக்டர் மாண்டி ஸோரி என்னும் ஓர் அம்மையார் இருக்கிறார். இவர் பச்சைக் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க ஒரு புதிய முறை கண்டுபிடித்திருக்கிறார். இந்த முறையின்படி ஐந்து வயதுக் குழந்தை ஒன்றுக்குக் கல்வி கற்பிக்க 500 ரூபாய்க்குக் கருவிகள் மட்டும் வாங்க வேண்டும்! நமது நாட்டிலோ ஐம்பது குழந்தைகள் படிக்கும் ஒரு பள்ளிக்கூடம் முழுவதற்கும் ஆசிரியர் சம்பளம் உள்பட, வருஷத்தில் 500 ரூபாய் கூடச் செலவழிப்பதில்லை.



இந்த நிலையில், ஒரு வேலைக்கும் லாயக்கில்லாதவர்கள், ஆரம்பப் பள்ளிக்கூட உபாத்தியாயராக முன்வருவதில் ஏதேனும் ஆச்சரியமுண்டா? இடையவே கிடையாது. உண்மையில் ஆச்சரியமென்னவென்றால், இப்படிப்பட்ட நிலைமையிலும் சில உத்தமர்கள், சன்மார்க்கசீலர்கள், அறிஞர்கள், தலைசிறந்த ஆசிரியர்கள் ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்களாயிருந்து வருவதேயாகும். இது இவர்களுக்குப் பெருமை தருவதேயன்றி, தொழிலின் தற்போதைய நிலைமைக்குப் பெருமை தருவதாகாது. ஆனால் நிலைமை இப்படியே இருந்து வருமானால், நாளடைவில் இந்த் உத்தமர்களெல்லாம் விலகிக் கொள்வார்கள். வேறு தொழில் எதற்கும் தகுதியற்றவர்களும், மூடர்களும், துன்மார்க்கர்களும், சோம்பேறிகளுமே உபாத்தியாயர்களாக வந்து கொண்டிருப்பார்கள். இவர்களுடைய போதனையினால் நம் குழந்தைகள் எவ்வளவு நல்ல பயிற்சி பெறுவார்கள் என்று சொல்ல வேண்டியதில்லை.

அமரர் கல்கி

இத்தகைய விபத்து நேராமல் தடுக்கவேண்டுமானால், உடனே இந்த நிலைமையைச் சீர்திருத்த வழி தேட வேண்டும். உபாத்தியாயர்களுக்கு நல்ல சம்பளமும், உயர்ந்த கௌரவமும் கொடுத்து, அறிஞர்களும், உத்தமர்களும் ஆரம்ப ஆசிரியத் தொழிலுக்கு வருமாறு ஊக்கமளிக்க வேண்டும். பள்ளிக்கூடங்கள் அந்தந்த ஊர்ப் பஞ்சாயத்தின் மேற்பார்வையிலோ, அல்லது உள்ளூரிலுள்ள சிறந்த கல்விமான் ஒருவருடைய மேற்பார்வையிலோ நடக்குமாறு ஏற்பாடு செய்ய வேண்டும். ஆனால், இந்த யோசனைகளெல்லாம் காரியத்தில் நடக்கப் போகின்றனவா என்று கேட்டால், நல்லது, அந்தக் கேள்வி என்னைக் கேட்க வேண்டாம். பக்கத்திலுள்ள பிரபல ஜோசியரைப் பிடித்து உரிய தட்சிணை வைத்துக் கேளுங்கள்.

வலம்புரி முத்து



மாத்தூர் கோவில்தான் சுப. பெரி. தியாகராஜன் ஆதி கோவில். தியாகராஜன்தான் திருஞானத்தின் அப்பா. தியாகராஜனின் அய்யா (அப்பாவின் அப்பா) இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே பர்மாவில் மிகப் பெரிய அளவில் லேவாதேவி நிறுவனம் நடத்தி வந்தார். பிறகு சுப்பையாவின் ஒரே ஆண் வாரிசான பெரிய கருப்பனின் மேற்பார்வையில், நிறுவனம் தன்னைப் புதுப்பித்துக் கொண்டதோடு கிளைகளையும் பெரிதாக்கியது. சுப்பையா நிறைய தோட்டச் சிறு முதலாளிகளுக்கு பர்மாவில் வட்டிக்குப் பணம் கொடுத்தாலும், மிரட்டலும், உருட்டலுமாய் ஏழைகளை மிரட்டி பணம் வசூலிப்பவர் என்ற பெயர் பெற்றவர். பெரிய கருப்பன் அந்தப் பெயரை மாற்றினார். நிறுவனத்தை லிமிடெட் கம்பெனியாக மாற்றினார். கிளைகளை விரிவுபடுத்தினார். பொறுப்புகளைப் பகிர்ந்தளித்தார்.

பெரிய கருப்பனுக்கு மூன்று ஆண் வாரிசுகள். சுப்பையா, ராமலிங்கம், தியாகராஜன். பிள்ளைகள் மூவரும் புதுக்கோட்டையில் பிறந்தாலும், படித்தது வளர்ந்தது எல்லாம் ரங்கூனில்.

இரண்டு முறை நகரத்தார் பர்மா நகரிலிருந்து வெளியேற்றப்பட்டனர். இரண்டாம் உலகப் போரின்பொழுது முதல்முறை. ஜப்பான் குண்டு போட்டுத் தகர்த்து விடும் என்ற அச்சத்தில் நடந்த வெளியேற்றம். பெரிய கருப்பன் வந்தது வரட்டும் என்று லேவாதேவி நிறுவனத்தை விட்டு விடாமல் அங்கேயே தங்கி விட்டார். 1953ம் ஆண்டு பர்மா அரசாங்கம், விவசாய நிலங்களை மொத்தமாக தேசிய மயமாக்கியது. சுதாரித்துக் கொண்ட பெரிய கருப்பன் எல்லாக் கடன்களையும் மெல்ல மெல்ல கட்டுமானத் துறை, பொறியியல் துறை, கப்பல் துறை என மாற்றி அமைத்ததோடு இல்லாமல், மூன்று மகன்களிடமும் நேர்மையான முறையிலும், நேர்மையற்ற முறையிலும் பர்மாவில் சேர்த்த சொத்து முழுவதையும் பைசா சுத்தமாக கொடுத்தனுப்பி, அதே லேவாதேவி தொழிலை சென்னையில் தொடங்க ஏற்பாடு செய்தார்.

சுப்பையா, ராமலிங்கம், தியாகராஜன் மேற்பார்வையில், ஸ்ரீகணேஷ் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அண்ட் ஃபினான்ஸ் என்ற



நிறுவனம் தொடங்கப் பட்டு, தமிழ்நாட்டில் இருபது கிளைகளுடனும், மற்ற மாநிலங்களில் பத்துக் கிளைகளுடனும் தமிழ்நாட்டின் முன்னணி நிறுவனமாக இருந்து வருகிறது. சுப்பையா, ராமலிங்கம், தியாகராஜனின் பிள்ளைகள் அனைவரும் போர்ட் ஆஃப் டைரக்டர்களாக விளங்குகின்றனர். திருஞானம், ராஜா வீட்டு பொலி காளையாக, யாருக்கும் கட்டுப்படாமல், எல்லாவிதக் கெட்ட பழக்கங்களுடன் வளைய வருகிறான். திருஞானத்தின் தாயார் சிவகாமிக்கு, பையனுக்கு ஒரு கால் கட்டு போட்டு விட்டால் திருந்தி விடுவான் என்ற தவறான அபிப்ராயம் இருந்தது.

8

அந்தஸ்துடன் பெண் பார்த்தார்கள். இவர்களிடம் இருக்கும் அளவுக்கு எஸ்டேட், பங்களா, பங்குகள், கார், ரொக்கம் என முடியாவிட்டாலும், ஓரளவு சொத்து உள்ள வீட்டில் பெண் எடுக்கப் போவார்கள். பெண் வீட்டினர் ரகசியமாக திருஞானத்தின் குணாதிசயங்களை ஆராய்வார்கள். திருஞானம் வாழ்க்கை வரலாறு மிக மோசமாக இருந்ததால், சம அந்தஸ்தில் கிட்டி முட்டி வந்து, அல்ப காரணங்களைச் சொல்லி கலியாணம் நின்று விடும். பையனிடம் குறையை வைத்துக் கொண்டு ஊராரை ஏச முடியுமா? பையனிடம் சொல்லிப் பார்த்தார்கள். நேருக்கு நேராகச் சொல்லிப் பார்த்தார்கள். நயந்து சொல்லிப் பார்த்தார்கள். பயந்து சொல்லிப் பார்த்தார்கள். திருஞானம் திருந்துவதாக இல்லை. வெறுத்துப் போன சிவகாமி ஆச்சி, கொஞ்சம் கீழே இறங்கி வந்தார்.

“பணம், காசு உள்ளவக வீட்டிலிருந்து திருவுக்குப் பொண்ணு கிடைக்கும்ங்கிற நம்பிக்கை எனக்கில்லை. பணங்காசு இல்லாத செட்டிக்குடும்பம் ஏராளம் இருக்கு. அதில குணமும், படிப்பும் இருக்கா மாதிரி, ஒரு பெண்ணைப் பார்க்கலாம்னு இருக்கேன். இருக்கிறவுக இல்லாதவுகளுக்குச் செய்யோணுமில்லியா? அதுக்கு நாம முன்னுதாரணமா இருப்போம்.”

இந்த நேரத்தில்தான் நாகப்பனின் பால்ய சிநேகிதம் புதுப்பிக்கப்பட்டு, பங்காளிகளை ஒழிப்பது எப்படி என திருஞானம் பாடம் நடத்திக் கொண்டிருந்தான்!

“படிச்ச சிநேகிதன்தானே? நீயாவது காரைக்குடியில் இவனுக்கு ஒரு பொண்ணு பார்க்கக் கூடாதா?” என சிவகாமி கேட்டாள்.

“ஆச்சி! என் சிநேகிதன் ஒருத்தனுக்குக் கலியாணம். காரைக்குடியில் நடக்கப் போவுது. திருஞானத்தை என்னோட அனுப்புங்க. நானே நல்ல பொண்ணா பார்த்து, இவன் கலியாணத்தை முடிச்சுப்புடறேன். என்ன திரு? சரியா?” என்றான்.

“யாருக்கய்யா கலியாணம்? எங்கம்மாவை அவ்வளவு இலேசில் ஏமாத்திட முடியாது” என்

* சத்தியப்ரியன் *

றான் திருஞானம் சிரித்துக் கொண்டே.

"நெசமாத்தான் திருஞானம். காரைக் குடியில் பத்தாம் வகுப்பில் நம்ம வகுப் புக்குப் புதுசா வந்து சேர்ந்தானே முத்து ராமன், மலேயா செட்டி வீட்டுப் பையன். அருணாசலா தியேட்டர் பக்கம் வீடு. ஞாபகம் வருதா?"

"ஆமா ஆமா! பொழுதுக்கும் ஒரு வெளிர் நீல ஸ்ட்ரெச்லான் பனியன் போட்டுக்கிட்டு வருவானே?"

"அவந்தான்."

"அவன் இப்ப என்னவா இருக்கான்?"

"பாரத் ஓவர்ஸீஸ் பாங்கில் அசிஸ்டெண்ட் மானேஜரா இருக்கான்."

"ஓகே! நான் வர்றேன். எனக்கும் பழைய சிநேகிதர்களைப் பார்த்தா மாதிரி இருக்கும்."

இரவோடு இரவாக காரில் பயண மானார்கள். அந்த இரவில்தான் நாகப் பனுக்கு அவனுடைய முழு வடிவம் தெரிய வந்தது. கார் சென்னையில் அவ னுக்குத் தெரியாத பல பகுதிகள் வழி யாகச் சென்று, மண்ணடியில் ஒரு முகம்மதியத் தெருவில் நின்றது. இவனு டைய வண்டி வருவது தெரிந்ததுமே, தாடி வைத்த ஒருவன் திருஞானத்தை அவசர அவசரமாக காரிலிருந்து இறக்கி கூட்டிக் கொண்டு போனான். திரும்பி வரும்பொழுது திருஞானத்தின் கையில் கையகல அட்டைப்பெட்டி ஒன்று இருந்தது. ஷாம்பு சாஷே பாக்கெட் டுக்களைப் போல சிறிய பாலிதீன் உறைகள் வரிசையாக அடுக்கப்பட்டிருந் தன. திருஞானம் காரின் பின் இருக் கைக்குப் பின்னால் இருந்த பழக் கூடையை எடுத்தான். ப்ளாஸ்டிக்கில் ஆன கூடை என்றாலும், மேல்பகுதி அடிப்பகுதி என இரண்டாகப் பிரிந்திருந் தது அந்தக் கூடை. அடிப்பகுதியைக் கழற்றி வரிசையாக எல்லாப் பாக்கெட் டுக்களையும் அடுக்கினான். பிறகு இரண் டையும் ஒன்றாக்கி, மேல் பகுதியில் மேலும் ஏழெட்டு ஆப்பிள் பழங்களை வைத்தான். பிறகு கார் தெற்கு நோக்கிப் போகாமல், கிழக்கு நோக்கி திருவான் மியூர் தாண்டி நீலாங்கரை அருகில் ஒரு பெரிய பங்களா முன்பு நின்றது.

"கழுத்து வரையிலும் அதுக்கு மேல யும் கூட பணம் இருக்கு எனக்கு நாகப் பன். இளமை இருக்கு; வயசு இருக்கு. அப்பாவின் கட்டுப்பாடுகளுக்கு ஏற்ப ஆடினால், வகைக்கு ரெண்டுன்னு நாலு பிள்ளைகளுக்குத் தகப்பனாகி, அதுங்க ப்ராக்ரஸ் கார்டில் கையெழுத்துப் போடும் சராசரி வாழ்க்கைதான் வாழ முடியும். என் தேவைகள் பெரிசு; என் ஆசைகள் பெரிசு; என் வக்கிரங்களும் பெரிசு. பைசாவுக்குப் பைசா கணக்குப் பார்க்கும் அப்பாவிடமும், அண்ணனி டமும், காசு பேர்க்கவே முடியாது. அதுக் காக கஞ்சா கடத்தறேன்; அபின் கடத் தறேன். காரைக்குடி வர்றது பொண்ணு பார்க்கவும், கலியாணம் பார்க்கவும்னு மட்டும்தானா நெனச்ச? பாம்பேயி லிருந்து வந்த சரக்கை தேவிப்பட்டணம் கடற்கரை பக்கம் கைமாத்தணும். கைமாத்த மட்டும் லட்ச, லட்சமாய் கிடைக்கும்" என்றான் சிரித்துக் கொண்டே.

துளியாவது தெரியுமா?

நம்மூர் நடிகைகள் எல்லாம் ஹாலி வுட்டில் நடித்துக் கொண்டிருக்கும்போது, ஹாலிவுட்டின் முன்னணி நடிகை ஒரு வர் பாலிவுட்டுக்குத் தாவியிருக்கிறார்.

இருபத்து மூன்று வயதான கெய்ரா, ராஜஸ்ரீ ஓஷா இயக்கும் 'யத்னா' என்ற படத்தில் நடித்து வருகிறார்.

கலியாணத்திற்கு, தாமரையும் அவள் அண்ணன் அருணாசலத்துடன் வந்திருந்தாள். மாப்பிள்ளை முத்து ராமனுக்கு மணம் பேசிய தேனம்மை, தாமரையின் வகுப்புத் தோழி மட்டுமில் லாமல், ஒன்றுவிட்ட சிற்றப்பன் மகள் என்ற உறவும்கூட, வீட்டோடு முத்து ராமனின் குடும்பம் பழக்கம் என்பதால், தாமரை, தேனம்மை கல்யாணத்தில் படு உற்சாகமாக இருந்தாள்.

தனக்கென்று உள்ள டைரியில் தாமரை நான் தேதியிட்டு குறிப்புகள் எழுதினாள்.

18.1.2000: தேனம்மை வீட்டு வளைவு வாசலில் முகூர்த்தக்கால் ஊன்றுவதற்கு எல்லோரும் போயிருந்தோம். வீட்டு ஈசானிய மூலையில் பந்தல்காரர் வந்து நல்ல பெரிய மூங்கில் முழுவதும் மஞ்சள் தடவி, துணியில் மாங்குழை கட்டி ஊன்றினார். காப்ச்சி ஊற்றிக் கொள்ளும் வரை எந்த தீட்டு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளக் கூடாது என்றார்கள். கதிரேசன்! உன் கரம் பற்றும் நல்ல நாளின் பொழுது, இது போன்ற சடங்குகள் இருக்கும் அல்லவா?

20.1.2000: அடேயப்பா! கதிரு!... அப்படிக் கூப்பிட எவ்வளவு ஆசையா இருக்கு தெரியுமா? கதிர்! உன் பெயரில் தான் எவ்வளவு பொலிவு. எவ்வளவு ஜ்வலிப்பு. கதிர். தாமரை. பெயரில்கூட என்ன பொருத்தம் பாரேன்.

ப்ச், சொல்ல வந்ததை விட்டுவிட்டேன்.

இன்றைக்குத்தான் தேனம்மை கலியாணம் தொடர்பாக எவ்வளவு சடங்குகள் நடந்து விட்டன! கோவிலில் பாக்கு வைக்க எல்லோரும் காரில் போனோம். பிள்ளையார்பட்டிதான் தேனம்மைக்கு கோவில். பிள்ளையார்பட்டி கோவில் என்றால், இளையாத்தாங்குடியிலும் பாக்கு வைக்கணுமாமே. ஆயா சொல்லித் தெரிந்து கொண்டேன். கதிர்! உங்களுக்கு இளையாத்தாங்குடிதானே கோவில்? பிள்ளையார்பட்டி கோவிலிலிருந்து மணநாளுக்கு முதல்நாள், இரண்டிரண்டு மாலைகள் வருமாமே. அதைத்தான் திருப்பூட்டுகிற பொழுதும், பகவனம் செய்து கொள்ளும் பொழுதும் போட்டுக் கொள்ள வேண்டுமாம்.

மத்தளம் கொட்ட வரிசங்கம்
நின்றூத
முத்துடைத் தாமம் நிரை தாழ்ந்த
பந்தல்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன்
வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன்
தோழீ! நான்.

ஆண்டாள் பாசுரத்தின் கவிதையில்தான் எத்தனை கனவு. அவளுடைய காதலின் மேலிருந்த தீராத நம்பிக்கையே, அவளை முடிவில் அரங்கநாதனுடன் இணைத்திருக்க வேண்டும். உன்பால் எனக்கு ஏற்பட்டுள்ள காதல் தரும் நம்பிக்கையைப் போல...

படையல் வைத்து பங்காளி, தாயாதிக்காரர்களுக்கு விருந்து வைத்தார்கள். கூடி ஆக்கி உண்ணுதல் என இதற்குப் பெயராம். தமிழையும், நகரத்தாரையும் பிரிக்கவே முடியாதா? சடங்குகளுக்கும், விசேடங்களுக்கும் நமது தமிழ்ச் சொற்களைப் போல, வேறு எங்கும் காண முடியாது.

மறுசீர் செய்யவும், கலியாண வேவு இறக்கவும் நானும் சத்திரத்திற்குப்

"கதையைக் கேட்டேன். பிடித்திருந்தது. பாரீஸ் நகரிலிருந்து, கொல்கத்தா வரும் பிரெஞ்சுப் பெண்ணாக நடிக்கிறேன்" என்கிறார் கெய்ரா.



கம்ப்யூட்டர், மாடலிங், சுற்றுலாத்துறை என ஏகப்பட்ட துறைகளில் ஆர்வம் உள்ள கெய்ராவுக்கு சினிமாவில் ஆர்வம் வந்ததே தாத்தாவால்தானாம்!

கெய்ராவின் தாத்தா? சார்லி சாப்ளின்! முகத்தில் தான் தாத்தாவின் சாயல் தெரியலை... நடிப்பிலாவது தெரியுமா? - **ஆர். லலிதா**

போயிருந்தேன். தேனம்மை வீடு வளவு வீடு இல்லை என்பதால், நகரத்தார் திருமண மண்டபத்தில்தான் (சிவன் கோவில் பக்கம்) நடைபெறுகிறது. இந்த டைரியைக் கூட இந்தத் திருமண மண்டபத்தின் ஆளரவமற்ற ஓர் அறையில் அமர்ந்துதான் எழுதுகிறேன். ஏன் தெரியுமா? இதே போன்ற சடங்குகள் நாளை நமக்கும் நடைபெறும்பொழுது, என் அயித்தான் அருகில் அமர்ந்து படித்துக் காட்ட வேண்டாமா?

வெள்ளிக் கடாகம் ஒன்றில் பச்சரிசி, கத்தரிக்காய், தேங்காய் ஆகியவற்றை வைத்து, தேனம்மையின் அப்பச்சி, அப்புறம் அண்ணன்மார்கள் ஒவ்வொருவரும் தலைச்சுமையாக ஏந்தி வருவது போல ஒரு பாவனை. ஏக கலாட்டா, கேலி. எல்லாம் மணப்பெண்ணிற்குப் பிறந்த வீட்டின் பரிவும், காவலும், எப்பொழுதும் உண்டு என்பதைக் காட்டும் நிகழ்ச்சி...

எனக்குப் பிறந்த வீடு என்றால், அது முழுவதும் அருணாசலம் அண்ணன் மட்டும்தான். அவன் சொன்னதே சொல். அவன் செய்வதே செயல். ஆண்மகனாகவும் பிறந்து, வீட்டின் தலைமகனாகவும் இருந்து, பொருள் ஈட்டும் வல்லவனாகவும் இருந்து விட்டால், அவனைப் போல ஒரு சர்வாதிகாரி இருக்க முடியாதல்லவா? கொம்புதான் மாட்டின் பலம்; கர்வம்; ஆயுதம் எல்லாம். அருணாசலத்தைப் பொறுத்த வரையில், என்னை அதிகம் செலவில்லாமல் கட்டிக் கொடுக்க வேண்டும் என்பதுதான்.

தாமரை டைரியை மூடினாள்.

"ஏய்! இங்க என்ன பண்ற?" என கல்லூரித் தோழி ஒருத்தி அவள் தங்கி இருந்த அறைக்குள் நுழைந்தாள்.

"கோவிலுக்குப் போயிட்டு, மாப்பிள்ளை முத்துராமன் குதிரையில் வாராருடி. தேனம்மை வாசலில் மாலையோட நிக்கிறா. வா!"

தாமரை உடையை நேர்த்தி செய்து கொண்டு வாசலுக்கு ஓடவும், முதல்நாள் கோவிலூர் பங்களாவில் தங்கி இருந்து விட்டு கலியாணம் பார்க்க திருஞானமும், நாகப்பனும் காரில் வந்து இறங்கவும் சரியாக இருந்தது.

காரிலிருந்து இறங்கிய திருஞானத்திற்குத் தாமரையின் இளமையும், அழகும் பரவசத்தை ஏற்படுத்த, "யார் இந்த தேவதை?" என அசந்து நின்றான்.

(தொடரும்)

கௌசல்யாவின் விரல் ஜோசியம்!



இரட்டை விரலைக் காட்டி "ஏதாவது ஒண்ணைத் தொடுங்க" என்றார் கௌஸ்!

எதுக்கு வம்பு என்று இரண்டு விரலையுமே சேர்த்துத் தொட்டு வைக்க, கலகலவென்று சிரித்தார்.

"இது அம்சவேணி, கிராமத்துப் பெண் வேஷம். இது கிருஷ்ணவேணி மாடர்ன் மங்கை ரோல். எனக்கு எது பொருந்தும்னு விரல் ஜோசியம் பார்த்துக்கிட்டு இருக்கேன். ஆனா இரண்டுமே சூப்பர்னு ஹோம் மீடியா டீமே பாராட்டுது" என்றார்.

'சித்தி' புகழ் சி.ஜே.பாஸ்கர் இயக்கும் டீ.வி தொடர் 'மனைவி'யில், கௌசல்யாவுக்கு இரட்டை வேடம்! ஒரு தாய்க்குப் பிறந்த குழந்தைகள் சந்தர்ப்பவசத்தால் பிரிந்து, தனித்தனியே வளர்ந்து, இருவரும் விஜய் ஆதிராஜையே மணந்து கொள்ளும் சூழ்நிலை உருவாகிறது. இது போதாதா? நவரசங்கள் மிதக்கும் குடும்பக் கதையை, சன் டீ.வியில் கண்டு களிக்கலாம்.



• மனைவி டீம்

"இளமையில் பூச்செடியாகவும், முதுமையில் மூலிகையாகவும் திகழும் மனைவியின் பெருமை சொல்லும் கதை" என்று ஒரே வரியில் முடித்துக் கொண்டார் சி.ஜே. பாஸ்கர்.

ஸ்ரீ பெரும்புதூரில் நடப்பது போன்ற கதை என்பதால், 'மனைவி' டீமே ஸ்ரீ பெரும்புதூரில் முகாமிட்டிருக்கிறது. சி.ஜே. பாஸ்கரின் ஆஸ்தான காமிராமேன் சக்திசரவணன், அஜய்ரத்னம், வாகவிக்ரம் என 'சித்தி'குழுவில் இடம் பெற்ற ராசியான முகங்களே இதிலும் தொடர்கின்றன.

வாக விக்ரமின் பெயரும், அதே... வேலுமணிதான்!

— ஆதர்ஷ்

குழந்தை வாங்கலியோ...

சுற்றுப்பட்டு கிராம மக்களுக்கு குன்னத்தூர் சந்தையில்தான் ஒரு வாரத்துக்கான ஷாப்பிங். பிஞ்சுக் கத்திரிக்காய் முதல், பருத்திப் பஞ்சுப் பொதி வரை எல்லாம் கிடைக்கிற அந்த வெள்ளிக் கிழமை சந்தையில், பிறந்து சில மணி நேரங்களே ஆன ஒரு பச்சிளம் பெண் குழந்தை, நான்காயிரம் ரூபாய்க்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்பட்டது என்றால், உங்களால் நம்ப முடிகிறதா? நிற்க; குன்னத்தூர் ஏதோ ஆந்திராவிலோ, கர்நாடகத்திலோ மலையோரமாக இருக்கும் ஒரு ஊர் அல்ல. சத்தியமாக தமிழக வரைபடத்தில் இருக்கும் ஒரு சிற்றூர். ஈரோட்டிலிருந்து கோபிச் செட்டிபாளையம் செல்லும் சாலையில், வறட்சியின் சோக முகத்தோடு வரவேற்கிறது குன்னத்தூர். இங்கிருந்து எண்பது கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் பொள்ளாச்சி சந்தை, தனது பழைய புகழை இழந்துவிட்ட நிலையில், குழந்தை ஏலத்தால் ஓவர்நைட்டில் பிரபலமாகிவிட்டது குன்னத்தூர் சந்தை. இங்கே, ஒரு தரம், இரண்டு தரம், மூன்று தரம் என்று ஏல பேரத்தில் குழந்தை கூவி விற்கப்பட்ட போது, அதன் தாய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாளா? இந்த ஊரின் காவல்துறை கோடை விடுமுறையைக் கழிக்க உல்லாசச் சுற்றுலா போய்விட்டிருந்தார்களா?

நாற்பது வயது ஜோதிமணியைப் பார்க்கிற பலருக்குப் பரிதாபமாக இருக்கும். இன்னும் சிலருக்குக் கோபம் கூட வரும். கணவனைப் பிரிந்து பத்து வருடங்கள் ஆகிவிட்ட இவர், குப்பைகளைக் கிளறி இரும்புச் சாமான்களை சேகரித்து விற்று வயிற்றைக் கழுவிக் கொள்ளும் அபலை. கணவரோ விசைத்தறி கூலித் தொழிலாளி. ஜோதிமணிக்கு, கடந்த ஜூன் பதினோராம் தேதி குன்னத்தூர் சந்தை அருகே பிரசவவலி வந்துவிட, அங்கேயே மண் தரையில் விழுந்த ஜோதிமணி, வலியில் கதற, அந்த அதிகாலைப் பொழுதில் சந்தைக்கு வந்து கொண்டிருந்த பெண்கள், மனிதாபிமானத்தோடு பிரசவம் பார்த்தார்கள். "நிறைந்த வெள்ளிக் கிழமையில் இந்தப் பாவி மவளுக்கு பொம்பளைப் பிள்ளை பொறந்திருக்கு" என்ற செய்தி அந்தப் பகுதியில் பரவிவிட, கூட்டம் கூடிவிடுகிறது. ஜோதிமணியோ, வயிற்றுச் சுமை இறங்கிய களைப்பில், கண் மூடிப் படுத்திருக்க... "ஏய் இது குருசாமி சம்சாரம் போல... அதோ ஆள் வரான்ப்பா, கூப்பிடுங்க" என்று, அந்த வழியாக வந்த ஜோதிமணியின் கணவரை அழைத்து வருகிறார்கள். குருசாமியோ கூட்டத்தை விலக்கிப் பார்த்து நிலைமையைப் புரிந்து கொண்டு, அடுத்த கணமே, அங்கிருந்து



நகர யத்தனிக்க, "என்னப்பா, சம்சாரம், கொழந்தைய விட்டுட்டுப் போறே?" என்று கூட்டம் அவரைத் தடுத்து நிறுத்துகிறது. அவரோ "இந்தக் கொழந்தைக்கும் நமக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது. தூக்கிக் குப்பைத் தொட்டியிலே போடுங்க, இல்லே, இன்னைக்கு வெள்ளிக் கிழமை, சந்தையிலே ஏலம் போடுங்க" என்று இதயத்தில் ஈரமில்லாமல் சொல்லி விட்டுப் போக... அதை நல்ல யோசனை என்பதுபோல்

குழந்தை!



• ஏலம்நடந்த இடம்

செயல்படுத்த முனைகிறார்கள் அங்கிருந்த உள்ளூர் ஆட்கள். அவ்வளவுதான், ஐந்நூறு ரூபாய்க்குத் தொடங்கிய ஏலம், நாலாயிரம் ரூபாயில் முடிந்தது.

குழந்தையை ஏலத்தில் எடுத்தவர் அந்தப் பகுதியின் அ.தி.மு.க. ஒன்றியச் செயலாளர், கோபாலன் என்பவரின் மகன் பிரகாஷ். "எனக்குத் திருமணமாகி பத்தாண்டுகள் ஆகியும் குழந்தை இல்லை. அதனால் எனக்கே குழந்தையை விட்டுக் கொடுங்க" என்று இவர் ஏலத்தில் குழந்தையை எடுத்து சென்றார். இந்தச் செய்தி,

உலுக்கி எடுத்த ஏலம்!



• ஜோதி மணி

பிறந்த சில நேரத்தில் பெண் சிசு கொல்லப்பட்டது என்ற செய்தியைக் காட்டிலும் ஆறுதலாக இருந்தாலும், இப்படி குழந்தையை ஒரு பொதுச் சந்தையில் ஏலம் போடுகிற வரை, நமது காவல் துறை என்ன செய்து கொண்டிருந்தது? இப்போது என்ன செய்திருக்கிறது என்று கேள்விப்பட்டால், விஷயம் வெட்கித் தலை குனிய வைக்கிறது.

ஏலம் என்பது நிரூபணமானால், எல்லாத் தரப்பிலிருந்தும் எதிர்ப்பு கிளம்பும் என்பதால், குன்னத்தூர் காவல் நிலையத்தில் ஊர்ப் பெரியவர்கள், மற்றும் பிரகாஷின் உறவினர் சாட்சியத்தில் 'குருசாமி குழந்தையைக் கொடுத்ததாகவும், பிரகாஷ் வாங்கிக் கொண்டதாகவும்' டி.எஸ்.பி. முன்னிலையில் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்கிறார்கள்.

எப்படியோ, பெண் சிசுக் கொலை நிகழாமல், ஒரு பிஞ்சு உயிர் காக்கப்பட்டது என்று ஆறுதல் கொள்ளும் அதே நேரம், பொது இடத்தில் குழந்தை ஏலத்துக்கு வந்திருக்கும் அவலம், நல்ல தங்காள் காலத்தையே நினைவு படுத்துகிறது.

- சாந்தி சர்மா

"பாலிவுட்காரங்கன்னா என்ன பெரிய பருப்பா? - ஒலிம்பிக் தீபத்தைத் தூக்கிட்டு ஓட கோலிவுட்காரங்களுக்கு ஏன் அழைப்புக் கொடுக்கல?" என தொடை தட்டி விஜயகாந்த் சீற, "கோலிவுட் சார்பா தனி டீமை அனுப்புவேண்டா... அனுப்புவேண்டா... அனுப்புவேண்டா...! என எக்கோ உடன் சரத் முழங்க, ஏவி.எம். ஸ்டுடியோவில் 'பயிற்சி முகாம்' பட்டையைக் கிளப்புகிறது.

(த்ரிஷா ஜிம்னாஸ்டிக்ஸ் பயிற்சி செய்து கொண்டிருக்க, கோச் டி.ஆர். வருகிறார்:)

டி.ஆர்: "ஏ த்ரிஷா! நீ பண்றது ஜிம்னாஸ்டிக்ஸ்! நான் பண்றது பாலிடிக்ஸ்! தொண்டை வலிச்சா போடு விக்ஸ்! தொடர்ந்து பண்ணு எக்சர்சைஸ்!

த்ரிஷா: Actually I want to know...

டி.ஆர்: ஏ நிறுத்து! நம்ம தாய்மொழி தமிழு! விடாதே இங்கிலீஸ் - ல டமிலு!

- என பிளிற, த்ரிஷா மிரண்டு 'மம்மி' என கத்திக் கொண்டே ஓடுகிறார்.

(தனுஷுக்கு வெயிட்-லிஃப்டிங் ஒதுக்கப்பட, 'கோச்'சாக வடிவேலு)

வடிவேலு: ஏம்ப்பு... என்ன பண்ணுற... வெயிட்டைத் தூக்கச் சொன்னா, வெடக் கோழியாட்டம் நிக்குற! சின்னபுள்ளத்தனமால இருக்கு... அண்ணன் தூக்கறேன் பாரு... குறுக்க கிறுக்க வந்த, தொலைச்சுப்புடுவேன்.

(என வெயிட்டைத் தூக்க முற்பட, முதுகு பிடித்துக் கொள்ள, "அய்யோ... போச்சே! போச்சே!" என மூர்ச்சையாகிறார்.

(நீச்சல் பயிற்சியில் சிநேகா ஈடுபட்டிருக்க, பாடம் சொல்ல வருகிறார் வைரமுத்து)

நீ கடலிலே நீந்தும்போது கணவாய் மீன்! ஆற்றிலே நீந்தும்போது அயிரை மீன்! குளத்திலே நீந்தும்போது கெண்டை மீன்! ஒலிம்பிக்கில் வெல்லப் போகும் தங்க மீன்!

தண்ணீர் குதித்தால் அருவி - நீ
தண்ணீரில் குதிக்கும் குருவி!

(என வைரமுத்து பயிற்சிக்குப் பதில் பாடலால் பாடாய்ப்படுத்த, சிநேகா வெறுத்துப் போய் வீட்டுக்குக் கிளம்புகிறார்.)

(சிம்புவுக்கு பாக்சிங் சொல்லிக் கொடுக்கும் கோச்சாக விவேக் களமிறங்குகிறார்)

"பிரதமர் பேரு மன்மோகன் சிங்
பிரதர் பண்றாரு பாக்சிங் - நான்
கொடுக்கப் போறேன் கோச்சிங்!
பண்ணாதே மேட்ச் பிக்சிங்"

(சிம்பு அவரைக்

கோலிவுட் ஒலிம்பிக்ஸ்!

கவனிக்காமல் இருக்க, விவேக் கடுப்பாகி)

"ஏம்பா! இங்க சிங்கிள் ஆளா நின்னு கத்திக் கிட்டு இருக்கேன். நீ குத்தறதுக்கு கத்துக்காம,



அந்த அங்கிளோட பொண்ணை லுக் விட்டுக் கிட்டு இருக்க! அடப்பாவி! கோல்டு மெடல குறி வைக்கச் சொன்னா, நீ கோல்டு செயின் போட் டிருக்கிற 'ஓல்டு மாங்'ஐ குறி வைக்கிற! உங்களை யெல்லாம் ஆயிரம் அஞ்சு ஜார்ஜ் வந்தாலும் இருத்தவே முடியாது!"

(மாதவனுக்குத் துப்பாக்கிச் சுடுதலில் பயிற்சித் தருகிறார் மணிரத்னம்)

மணிரத்னம்: துப்பாக்கி...பைக்... மைக்கேல்... சுடுற... ரெடி... டேக்... ஆக்ஷன்... வைக்கிற... தப்பக் கூடாது... மெடல் தப்பக் கூடாது... தப்புனா தப்பு தான்... பச்சைப்பாவம்... முடியும்... உன்னால முடியும்.

(தந்தி பாஷை பேச, நொந்து ஓடுகிறார் மாதவன்.)

(டிஸ்கஷனில் விஜயகாந்த் - சரத்குமார்)

விஜயகாந்த்: சரத், எதுவும் சரிவரல. எல்லாரும் சொதப்பிட்டாங்க... அஜித் போன் பண்ணி கார் ரேஸ் உண்டான்னு கேக்குறாரு! விஜய் 'கபடி' இருந்தா கால்ஷீட் கொடுக் கறேங்கிறாரு... கத்திச்சண் டைக்கு நெப்போலியனைப் போட்டா, அவரு அரிவா ளோட வர்றாரு... இப்ப என்ன பண்ண?

சரத்: விஜி, கவலைப் படாதே! எல்லாத்தையும் துணை நடிகர்களை வைச்சு சமாளிச்சிடலாம். ஒலிம் பிக்ஸ்ல கலந்துக்க முடியாவிட் டாலும், ஏதென்ஸ்-ல ஒரு ஸ்டார் - ஷோவாச்சும் பண்ணி கலெக்ஷனை அள்ளி ரலாம்...

(சந்தோஷமாக, அடுத்த கட்டத்துக்குத் தயாராகிறார் கள்)

கார்ட்டூன் - சேகர்

செய்திகள், திரிப்ப

புது தில்லி. முன்னாள் பிரதமர் இல்லம்.

''விடாதீங்க! மோடியை ஒரு கை பார்த்துருங்க'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தேன்.

வாஜ்பேயி கைகளை உயர்த்தி, இறக்கி, நீட்டி, மடக்கி தேகப்பயிற்சி செய்து கொண்டிருந்தார்.



போனா பி.ஜே.பி. இமேஜ் என்ன ஆகிறது...?"

"ரொம்ப ரொம்ப டிராஜிக்தான்; ஆனாலும் பாருங்க, நீங்க உறுதியா இருக்கணும். வழக்கப்படி உள்ள எதிர்ப்புன்றது ஆரம்ப சூரத்தனமா அமைஞ்சு, நாளைக்கு பிசுபிசுத்துப் போயிடக் கூடாது..."

"நேற்று வரை ஆட்சியில் இருந்தேன்; அதனால் பல நெருக்கடிகள். இன்றைக்கு நிலைமையே வேற; ரெண்டில் ஒன்னு பார்க்காம விடறதில்லே..." என்று வாஜ்பேயி தோள் தட்டினார்.

"பார்த்து... பார்த்து... உற்சாகத்துல ஞாபக மறதியா தண்டால், பஸ்கின்னு ஆரம்பிச்சுடப் போறீங்க... முழங்கால் பத்திரம்!" என்று கூறி, பறந்து விட்டேன்.

சென்னை மீனம்பாக்கத்தில் பெட்ரோல் விலை உயர்வு காரணமாக, ஆட்டோ, டாக்ஸி டபுள்ரேட் கேட்டார்கள். ஏர்போர்ட் வாசலில் ஒரு மணல் லாரியை நிறுத்தி, 'போயஸ் தோட்டம்' என்றதும், சந்தோஷமாக ஓசியில் கொண்டு வந்து இறக்கி விட்டார் ஓட்டுனர்.

அந்த நடுநிசியிலும் முதல்வர் வீட்டில் ஒரே ஆர்ப்பாட்டமாக இருந்தது!

''பெட்ரோல், சமையல் காஸ் விலை உயர்வைத் தடுக்க முடியாத கருணாநிதியே! மத்திய அமைச்சரவையிலிருந்து தி.மு.க. வெளியேறுமா? வெட்கமாக இல்லையா?" என்று ஏகக் கூச்சல்!

உள்ளே, சசிகலா ஒரு பெர்ர்ர்ரிய போஸ்டரைப் பிரித்துக் காட்ட, ஜெயலலிதா ஆவேசமாகப் படித்துக் கொண்டிருந்தார்!

"போஸ்டருக்கு மேலே அறிக்கையும் விட்டு அமர்க்களப்படுத்திட்டீங்க" என்றேன்.

"அது மட்டுமா? அதே சமயத்தில் மணல் விலையைக் குறைத்து குத்திக் காட்டியிருக்கேன். லோடுக்கு ரூ.400 குறைச்சிருக்கேன்!"

"அசத்திப்புட்டீங்க, ஆனா ஒரு சின்ன வித்தியாசம் மணல், நம்ம தமிழ் நாட்டில ஓடும் - அல்லது ஓடாத - ஆற்றுப் படுகைகளிலிருந்து பெறப்படுகிறது. பெட்ரோலியமோ, அயல்நாடுகளிலிருந்து இறக்குமதியாகணும் சர்வதேச சந்தையில் விலை உயர்ந்து ரொம்ப காவ

''பி.ஜே.பியின் தன்னிகரில்லாத் தலைவர்னு உங்களுக்கு ஐஸ் வைச்சபடியே இந்த வெங்கையா நாயுடு மோடி பக்கம் சாயறார்."

''அந்த மஸ்தான் வேலையெல்லாம் எனக்குப் புரியாமயா இருக்கு... இப்ப பாரு, குஜராத் போலீஸ் ஒரு பாவமும் அறியாத ஒரு இளம் பெண்ணை பயங்கரவாதின்னு முத்திரை குத்தி, சுட்டுக் கொன்னுடுச்சு. இப்படியே

மாச்சு... முந்தைய பி.ஜே.பி.தலைமையிலான மத்திய அரசு, தேர்தலுக்கு பயந்து ஆறு மாதங்களாக விலை உயர்த்தாமல் இருந்து வந்துச்சு... அதனால் ஏற்படும் நஷ்டத்தையும் வரி செலுத்தும் தொகையில்தான் கொடுக்கிறாங்க..."



செம்பியன்!

"என்னப்பா, ஏதோ பழங்கணக்கெல்லாம் சொல்லிக்கிட்டிருக்கே... இன்னிக்கி நிலைமை என்ன? பெட்ரோல் - காஸ் விலை ஏறிச்சா, இல்லையா?"

"ஏறித்தான் இருக்கு. ஆனா உலகச் சந்தையில் ஏற்பட்ட விலை உயர்வு முழுவதையுமே மத்திய அரசு வாடிக்கையாளர் மீது சுமத்தலை... அரசு கொஞ்சம் ஏற்றுக் கொண்டது; பெட்ரோலியம் கம்பெனிகள் கொஞ்சம் சுமக்கின்றன... பெட்ரோலியப் பொருள்கள் மீது போடப்பட்டிருந்த வரிகள் சிலவற்றைக் குறைத்துத்தான், கெரசின் விலை உயராம சமாளிச்சிருக்காங்க..."

"என்னய்யா, என்னவோ பொருளாதாரப் புலி போல பேசுறே... இந்தக் கணக்கெல்லாம் ஜனங்ககிட்ட எடுபடாது! அவங்களுக்குப் புரியாது!"

"அதுதான் உங்க பலமே! அவங்க படிச்சு தேறிடப் போறாங்களேங்கிற கவலைலதான், பாடப்புத்தகங்களுக்கே தட்டுப்பாடு ஏற்படுத்தியிருக்கீங்களோ...?"

''யாரங்கே!'' என்று அழைத்த ஜெ. "இந்தக் கருணாநிதிக்கு சவால் விடற போஸ்டரில் ஒன்றை இவன் முதுகிலே ஒட்டி அனுப்பு" என்று உத்தரவு போட்டார்.

உத்தரவு நிறைவேற்றப்படும் முன்னர், ஸ்பைடர் மேன் கணக்காக ஒரு ஸ்விங் அடித்து, கோபாலபுரத்தில் கருணாநிதி வீட்டின் மொட்டை மாடியில் வந்து இறங்கினேன்.

"யாருப்பா அது! கூரை மேலே புடிக்கிறதுக்குக் கோழி கூடக் கிடையாதே" என்று ஜன்னல் வழியே எட்டிப் பார்த்து இரைந்தார் கருணாநிதி.

"வெற்றி! வெற்றி! காவிரியில் தண்ணீர்! தண்ணீர்! நல்ல காலம் பொறக்குது! தஞ்சைத் தரணியில் விளைச்சல் பெருகுது!'' என்று நல்ல சேதி சொல்லவும், கலைஞர் 'கூல்' ஆனார்.

''எப்படியோ போராடி தண்ணீர் கொண்டாந்துட்டேன் பார்த்தியா!''

''எல்லாருமே இப்படித்தான் சொல்றாங்க... அ.தி.மு.க., தி.மு.க., காங்கிரஸ், பா.ம.க., ஜனதாதளம்-எஸ் ஆகிய எல்லாக் கட்சிகளுமே தங்களால்தான் தண்ணீர் தமிழகத்துக்கு வந்ததாகச் சொல்றாங்க.''

''சொல்லிட்டுப் போகட்டுமே... எப்படியோ தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் வந்ததா இல்லையா?''

''வந்தது; ஆனால் இவங்கள்ல யாராலயும் இல்ல... வருணபகவானின் கருணையால் வந்தது.''

"சாமி, பூதமெல்லாம் என்கிட்ட பேசாதே'' என்றார் கருணாநிதி.

''இதை ஸ்டாலினிடமும் தயாநிதி மாறனிடமும் சொல்லுங்க; அவங்கதான் பகிரங்கமா சாமி கும்பிடக் கோயிலுக்குப் போறாங்க'' என்று கூறியபோது, கலைஞர் மேஜை மீதிருந்த ஒரு கனமான பேப்பர் வெய்ட்டைக் கையில் எடுத்துக் கொண்டிருந்தார். ஏன் நிற்கிறேன்!

நீங்கள் கேட்டவை -தராசு

● எம். ராஜேந்திரன், லால்குடி

? மத்தியில் ஆறு ஊழல் அமைச்சர்களை வைத்துக் கொண்டு மன்மோகன் சிங் எப்படி காலம் தள்ளப் போகிறார்?

! சர்க்கரை, B.P, கொலஸ்ட்ரால் என்று உடம்பு நிறைய வைத்துக் கொண்டு சிலர் காலம் தள்ளவில்லையா...? அதே மாதிரிதான். என்ன, கட்டு மீறித் துள்ளும்போது, மருந்து கொடுத்து அடக்கி வைக்கணும்... அது சரி, ஆறு என்ன கணக்கு?

● ஆர். மாதவராமன், கிருஷ்ணகிரி

? 'சிகரெட் பிடிப்பதை நிறுத்துங்கள்' என்று ரஜினிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளாரே அன்புமணி...?

! ரஜினி பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு முன் மாதிரியாகத் திகழ வேண்டும் என்பது ராமதாஸ், அன்புமணி அண்ட் கோவின் விருப்பம். ஆனால், இதில் சீண்டிப் பார்க்கிற விவகாரம் சிறிதளவு இல்லாமல் போகவில்லை.

● பூவராகன் சீனிவாசன், சென்னை - 26

? நிழல் அமைச்சரவை ஏற்படுத்த பா.ஜ.க யோசிக்கிறதாமே... 1) அரசியல் சட்டத்தில் இதற்கு இடம் இருக்கிறதா...? 2) நாட்டுக்கு இதனால் என்ன பயன்?

! 1) நிழல் அமைச்சரவை என்பது அதிகாரங்கள் படைத்த அமைப்பு அல்ல. சிந்தனை, ஆலோசனை மட்டங்களில் மட்டுமே இயங்குவது. எனவே அரசியல் சட்டத்தில் இடமுள்ளதா என்கிற கேள்வி எழாது. 2) நிழல் அமைச்சரவையில் ஓர் எதிர்க்கட்சி 'அமைச்சர்' பொறுப்பு வகித்து, அந்த இலாகாவின் செயல்பாடுகள், கொள்கை வகுத்தல் போன்றவற்றை உன்னிப்பாகக் கவனித்து மாற்று யோசனைகள் (அவசியமானால்) வழங்கி வருவார். நிஜ அமைச்சரவை அவற்றை ஏற்கலாம் அல்லது மறுக்கலாம். ஆனால், மாற்றுக் கருத்து, சிந்தனைப் பரிமாற்றம் போன்றவற்றுக்கு வாய்ப்பு பெருகும்.

● ரஞ்சிதம் கோபிநாத், வத்திராயிருப்பு

? தேர்தல் தோல்விக்கு ஜெயலலிதாவின் அகங்காரம்தான் காரணம் என்று காஞ்சி சுவாமிகள்

தயாநிதி மாறன்

கூறியுள்ளது பற்றி...?

! மடாதிபதிகள் அரசியல் விமர்சகர்களாகவும் அரசியல்வாதிகளை விமர்சிப்பவர்களாகவும், மாறாமல் இருப்பது நல்லது. இதற்கு அதிகமாக மடாதிபதிகளை நாம் விமர்சிக்காமல் இருப்பது, நமக்கு நல்லது!


● ஆர். சாலமோன், ஆலங்குளம்

? 'ஒருவனுக்கு ஒருத்தி என்பதெல்லாம் மலையேறிவிட்டது. பாதுகாப்பான செக்ஸ் பற்றித்தான் இளைஞர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்' என நடிகை ரேவதி கூறியுள்ளாரே... நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?


! பண்பாட்டை மறந்துவிட்டுப் பாதுகாப்பைப் பற்றிப் பேசுவதும், கண்ணை விற்று விட்டு கம்ப்யூட்டர் வாங்குவதும் ஒன்றுதான் என்பது ரேவதிக்கு



* சூப்பர் டாக்டர்!



* மோடி மோதல்!



சொன்னது பற்றி ஆட்சேபணையே இல்லை. ஒலிம்பிக்கில் நம் நாட்டுப் பிரதிநிதிகளாக, ஏற்கெனவே பங்கேற்றுப் பெருமை தேடித் தந்தவர்களை ஒதுக்கியது, உதாசீனம் செய்ததுதான் தவறு.

● ப. ராமகிருஷ்ணன், காயக்காடு

? இலக்கியக் கூட்டங்களுக்குத் தராசு செல்வதுண்டா...?

! கால்களில் கிரிக்கெட் பேட், கைக்கு கிளவுஸ், முதுகிலும் முன்னாலும் தலையணைகள், வலுவான ஹெல்மெட்... இத்தனையும் மாட்டிக்கொண்டு கிளம்புவதற்குள் இலக்கியக் கூட்டம் முடிந்துவிடுகிறதே!



* கியா பாத் ஹை!

புரியாதது துரதிர்ஷ்டம்தான்.

● வி. ஜான்சிராணி, திண்டுக்கல்

? நார்வே தூதுக் குழுவும் இலங்கை அமைதிப் பேச்சு வார்த்தையும் முடிவுக்கு வரும் நாள் எப்போது...?

! வீரப்பன் வேட்டை முடிவுக்கு வரும்போது.

● மகா, திருப்பூர் - 3.

? பிறந்து சில மணி நேரங்களே ஆன பெண் சிசுவை, அதன் பெற்றோரே ஏலம் விட்டதாகச் செய்தி வருகிறதே... மனிதத் தன்மையைத் தொலைத்துக் கொண்டிருக்கிறோமோ...?

! வறுமை ஆட்டிப் படைத்தால், மனிதத் தன்மை என்ன... சகலமும் தொலைந்து போகும்!

ஹிந்தி பேசுகிறாரே...?



● உமா பாலமுரளி, சென்னை - 92

? ஒலிம்பிக் ஜோதி ஊர்வலத்தில் கலந்து கொள்ள திரையுலகப் பிரபலங்களை அழைத்தது எவ்வாறு தவறாகும்? அவர்களும் இந் நாட்டு மக்கள் தானே...?

! அவர்களைக் கலந்து கொள்ளச்

* கண் கெட்ட பிறகு...

● அ. முனியம்மாள், சென்னை - 12

? 'இந்தி எதிர்ப்பு வீரர்' தி.மு.க தலைவர் மு. கரு





• சீண்டல் வேண்டுகோள்!

• 'சுத்தமான' திட்டம்



• நல்லது: நல்லது!

ணாநிதியின் பேரன், மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் இந்தியில் சரளமாகப் பேசுவதும் எழுதுவதும் எதைக் காட்டுகிறது...?

! இந்தி திணிப்புக்குத்தான் எதிர்ப்பே தவிர, இந்திக்கு அல்ல. இந்தி மட்டுமே மத்திய அரசின் ஆட்சி மொழி என்ற நிலைக்குத் தான், அன்றும் இன்றும் என்றும் எதிர்ப்பு.

● பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி

? மாவட்டத்துக்கு நூறு இளைஞர்கள் மூலம் மூவாயிரம் பேரைத் (சுத்தமானவர்கள்) திரட்டி புதியதொரு தொண்டர் படையை அமைக்கப் போகிறாராமே வைகோ...?

! அரசியல் கலக்காதவரை தொண்டர் படை சுத்தமாயிருக்கும்.

● எஸ். இராமலிங்கம், ஆத்தூர் *

? சந்தடிச் சாக்கு என்றால் என்ன...?

! பெட்ரோல் விலை உயர்வைக் காரணம் காட்டி, ஆட்டோக்காரர்கள் செய்யப் போகிற மீட்டருக்கு மேலான கூடான காரியங்கள்தான்!

● ஆர். நாகராஜன், சென்னை - 117

? "குஜராத் முதல்வர் மோர்டியை மாற்றாததே பா.ஜ.க தோல்விக்குக் காரணம்'' என்று வாஜ்பாய் ஏற்றுக்கொண்டுள்ளாரே...?

! பாவம் வாஜ்பாய். பதவியில் இருந்த வரையில் ஒன்றும் செய்ய இயலாமல் பரிதவித்தார். இப்போது துணிந்து பேசுகிறார் - பேசிய கையோடு வாங்கிக் கட்டிக் கொள்ளவும் செய்கிறார்! கட்சித் தலைமையிலிருந்து விடை பெறத் தயார் என்றும் சொல்கிறார். பா.ஜ.க வரலாற்றில் கொஞ்சம் நஞ்சம் மிச்சமிருந்த மிதவாத அத்தியாயமும் முற்றுப் பெற்றுவிட்டது. இனி அடிப்படைவாதம் தான் கொடி கட்டிப் பறக்கும்!

● அ. சுஹைல் ரஹ்மான்' திருச்சி - 21

? 'காவிரியில் தண்ணீர் கிடைக்கும் என்ற நம்பிக்கை குறைகிறது' என்று பா.ஜ.க பொதுச் செயலாளர் ராஜா கூறுகிறாரே...?

! கர்னாடகா பா.ஜ.க தலைவர்கள் அவர்களது சட்டமன்றத்தில், தமிழகத்துக்குத் தண்ணீர் தரக் கூடாது என்று முழங்கியது பற்றி, ராஜா எதுவும் சொல்ல மாட்டாரே! எல்லாருமே காவிரிப் பிரச்னையில் அரசியல் ஆதாயம் தேடத்தான் பார்க்கிறார்கள்.

● என்.வி. ரமணி, சென்னை - 9

? அனேகமாக எல்லாக் கட்சிகளும் குடும்பக் கட்சியாகப் பரம்பரை முறைப்படி இயங்குகையில், கம்யூனிஸ்டுகளும் அ.தி.மு.கவும் மக்கள் பலத்தில் இயங்குவது ஆறுதல்தானே?

! வாரிசுத் தலைவர்கள் இல்லை என்பதே பிளஸ்பாயிண்ட் ஆகிவிட முடியாது. உட்கட்சி ஜனநாயகம் உள்ளதா என்றும் பார்க்க வேண்டும்.

▢ ரூ. 100 பரிசு பெறுபவர்:
பூவராகன் சீனிவாசன்,
சாயி லோக் அபார்ட்மெண்ட்ஸ்,
பிளாட் - 46, கதவு எண் - 1,
குமரன் காலனி இரண்டாவது தெரு,
சென்னை - 600 026


* ரூ 50 பரிசு பெறுபவர்:
எஸ். இராமலிங்கம்,
165/74, மெயின்ரோடு,
ஆத்தூர் - 628 151 தூத்துக்குடி மா.வ

அரவிந்த அமுதம்-12

'இறையால் ஆட்கொள்ளப்படுவது என்பது ஞானிகளின் வாழ்வில் திடீரென்று தலைப்படும் நிகழ்வாக இருக்கும். சுந்தரர் ஆட்கொள்ளப் பட்டது திருவருட் துறையில். திருஞானசம்பந்தர் ஆட்கொள்ளப்பட்டது திருத்தோணித் துறையில். மணிவாசகர் ஆட்கொள்ளப்பட்டது திருப்பெருந்துறையில். அதுபோல அரவிந்தருக்கு இறைக்காட்சி தரிசனமாகி அவர் ஆட்கொள்ளப்பட்டது அலிப்பூர் சிறையில். அப்போது அவர்கள் உணர்ந்து நிற்கும் பரிபூரணானந்தம் அவர்களது ஆன்மிகப் பக்குவத்தை உயர்த்தி எழுச்சி கொள்ளச் செய்து விடுகிறது. அதற்குப் பின்னர் அவர்கள் மானுட வடிவில் உலவும் இறைத் தூதர்களாகி விடுகின்றனர்.

(ஸாவித்ரி தமிழாக்க நூலின் முன்னுரையில்
ஆ.-இ. இரவி ஆறுமுகம்)

சிறையிலிருந்து வெளிவந்த பின் அரவிந்தர் நிகழ்த்திய உத்தர் பாராச் சொற்பொழிவு, இந்தியாவையே உலுக்கியது. பாரத ஆன்மிகத்தின் அடித்தளம் என்ன என்பதை வெளிச்சமிட்டுக் காட்டியது.



கிடைத்தது தெய்வ தரிசனம்!

சுமார் பத்தாயிரம் பேர் அரவிந்தரின் ஆத்மாவிலிருந்து பொங்கிய பேச்சை மயிர்க்கூச்செறியக் கேட்டார்கள். அதில் சொல்லப்பட்டதெல்லாம் அவரது சிறை வாழ்க்கை அனுபவங்கள்தாம். அப்படி அந்தச் சிறை வாழ்க்கையில் என்னதான் நடந்தது? அதை அவரைக் கைது செய்த நாளிலிருந்தே பார்க்க வேண்டும்.

நேரம் நள்ளிரவாகி விட்டது. ஆனால் தியானத்தில் ஆழ்ந்திருந்த அரவிந்தர், இருக்கையை விட்டு எழுந்திருக்கவில்லை. மணிக்கணக்கில் அவர் இப்படி இறையுணர்வில் ஒன்றியிருப்பது வழக்கம் தான். 1908 மே







ஒன்றாம் தேதி இரவு அது. அன்று வழக்கத்தை விடக் கூடுதலாகவே தியானம் கைகூடியிருந்தது.

கடவுளை நேரில் காண வேண்டும் என்ற தீவிர வேட்கை ஒருபுறம். 'பாரதம் ஆன்மிக ரீதியாக உலகிற்கே வழிகாட்டப் போகிறது. ஆனால் பாரத மக்கள் சுதந்திர உணர்வில்லாமல் இருக்கிறார்களே!' என்ற கவலை ஒருபுறம். தாமதமாகத்தான் உறங்கப் போனார்.

அவரைப் பல சிந்தனைகள் வாட்டிக் கொண்டிருந்தன. கல்கத்தா தேசியக் கல்லூரித் தலைமைப் பொறுப்பில் நியமிக்கப் பட்டும், அவர் விரும்பிய கல்விச் சீர்திருத்தத்தைக் கொண்டுவர இயலவில்லை. நிர்வாகம் உடன்படாததால் வேலையை விட நேர்ந்தது. விபின்சந்திர பாலர் ஆரம்பித்த வந்தே மாதரம் இதழின் ஆசிரியரானார். பின் வங்காள தேசிய வாதிகளின் தலைவரானார். சூரத் காங்கிரஸ் மாநாட்டில்



திருப்பூர் கிருஷ்ணன்

பங்கேற்றார். திலகர் தலைமையில் தீவிரவாதிகள் பிரிந்த போது, திலகரின் வலக்கரமானார். சுதந்திரக் கனல் தெறிக்கும் வகையில் எழுதுவதும் பேசுவதும் பணிகளாயின. கனவெல்லாம் சுதந்திர இந்தியாதான். கூடவே ஓயாத கடவுள் சிந்தனையும்.

சரி. ஆனால் கடவுளைக் காண்பது எப்போது? வேத நெறிகளை ஆராய்ந்து தன்னளவில் பரிசோதனை செய்து பார்த்த இந்தக் குறுகிய காலத்திலேயே, கடவுளை நேரில் காண முடியும் என்பதற்கான நிரூபணங்களைப் பெற முடிந்ததே! முன்னோர்கள் முட்டாள்களல்ல. ஆன்மிகம் ஒரு தனி விஞ்ஞானம். மதத்தில் மூடநம்பிக்கைகள் சில கலந்திருக்கலாம். ஆனால் மதமே மூட நம்பிக்கை அல்ல. மதங்கடந்த ஆன்மிகம் என்ற ஒரு பேருண்மை இருக்கத்தான் செய்கிறது. அதை உணர்ந்துவிட்டேன். ஆனால் அதற்குரிய நெறிமுறைகளில் முழுமையாக என்னை ஈடுபடுத்திக் கொள்ள இயலவில்லையே! கடுமையாக உழைக்கிறேன், உலகியல் வாழ்க்கைக்காக. கடவுளுக்காக உழைப்பது எப்போது?

தம்மைப் போலவே கடவுளும் அதைப் பற்றி யோசிக்கிறார் என்பதையும், தெய்வம் தம்மை இன்னும் சில மணி நேரங்களிலேயே தடுத்தாட்கொள்ளப் போகிறது என்பதையும் அவர் அப்போது உணரவில்லை.

மறுநாள், 1908 மே 2. அதிகாலை. தடதடவெனக் கதவு தட்டப்பட்டது. அது இறைவனின் அவசர அழைப்பு. 'வா! வந்து விடு என்னுடன். என்னைத் தேடி வா என்றால் நீ வேறு பணியில் ஈடுபடுகிறாயே! இது நியாயமா? மகனே! நீ என்னிடம் வந்து சேரும் வரை உன்னை விட மாட்டேன்! என்னை தரிசிப்பதற்கான கடும்முயற்சிகளை நீ செய்துதான் ஆக வேண்டும்!' கண் விழித்த அரவிந்தர் அமைதியாக வந்து கதவைத் திறந்தார். வாசலில் அவரைக் கைது செய்யக் காவலர்கள் காத்திருந்தார்கள்.

முஸபர்பூர் வெடிகுண்டு விபத்தில் இரு வெள்ளைக்காரப் பெண்கள் மாண்டு போனார்களாம். அந்தச் சதிக்கு அவர்தான் காரணம் எனக் குற்றம்சாட்டப் பட்டார் அரவிந்தர்.

அருள்வாக்கு

உலகத்தில் நாம் காண்கிற அன்பை மூன்று வகையாகப் பிரிக்கலாம். மகான்கள், யோக்கியர்கள், சத்திய சந்தர்கள், பரோபகாரிகள், ஞானிகள், அனுக்கிரக சக்தி வாய்ந்த உத்தமர்கள் ஆகியோரிடம், அவர்களது குணத்துக்காக அன்பு ஏற்படுகிறது. பந்துக்களுடனும், சிநேகிதர்களுடன் சேர்ந்து பழகுவதால் அவர்களிடம் ஒருவித அன்பு உண்டாகிறது. மூன்றாவது, ஒரு காரியத்துக்காக, லாபத்துக்காகச் சிலரிடம் அன்பு வைக்கிறோம். உதாரணமாக வியாபாரத்தில் சகாயம்

அங்குமிங்குமான அலைக்கழிப்புக்குப் பின், மே ஐந்தாம் தேதி அலிப்பூர் சிறையில் அடைக்கப்பட்டார். 'வெளியுலகில் இருந்த போது கடவுள் சிந்தனையை விட்டு விட்டு ஏதேதோ செய்து வந்தாயே! உன்னை அதற்கா இந்த உலகுக்குக் கொண்டு வந்தேன்! இதோ இந்தச் சிறையில் வேறு வேலை எதுவுமில்லை உனக்கு. நாள்முழுதும் என்னையே சிந்திப்பாயாக.' கட்டளையிட்டான் வாசுதேவன். கண்மூடி கண்ணனையே அல்லும் பகலும் அனவரதமும் சிந்திக்கலானார் அரவிந்தர்.

அரவிந்தர் அடைபட்ட சிறை அறையின் நீளம் ஒன்பது அடி. அகலம் ஐந்து அடி. சாளரங்கள் கிடையாது. முன்பக்கம் இரும்புக் கிராதி மட்டுமே. அதைச் சிறை என்பது சரியா? வெறும் கூண்டுதான். ஒரு தட்டும் குவளையும் தரப்பட்டன. கை கழுவுவது, சாப்பிடுவது எல்லாம் அவற்றில்தான். அந்த அறை தான் படுக்கையறை. சாப்பாட்டு அறை. சிறுநீர் கழிக்குமிடம். தியாகிகள் சிறையில் வாடினார்கள் என புத்தகத்தில் ஒரு வரியில் படிக்கிறோம். ஆனால் அந்த ஒரு வரிக்குள் புதைந்திருக்கும் ஓராயிரம் கஷ்டங்களை உணர்கிறோமா?

தாகம்! தாகம்! தாங்க முடியாத தண்ணீர்த் தாகம்! நீர் கொடுப்பவர் யாருமில்லை. சுதந்திர தாகம் ஒருபுறம். கடவுளைக் காணும் ஆன்மிக தாகம் ஒருபுறம். இவற்றோடு நீர் வேட்கை

செய்வார் என்பதற்காக ஒரு தனிகரிடம் அன்பு பாராட்டுகிறோம்; சம்பளம் கொடுக்கிறார் என்பதால் யஜமானரிடம் அன்பாக இருக்கிறோம்,



உத்தம புருஷர்களான மகான்களிடம் வைக்கும் அன்புகூட நிரந்தரமில்லைதான். மகானிடம் உத்தம குணம் குறைந்தால் - அல்லது குறைந்ததாக நமக்குத் தோன்றினாலே போதும் - அவரிடம் வைத்த அன்பும் குறைந்து விடுகிறது.

இப்படியெல்லாம் எக்காரணமும் வியாஜமும் இன்றி பிரியமாக இருப்பதுதான் உண்மை அன்பு. ஒருவர் நம்மிடம் நெருங்கிப் பழகாவிட்டாலும் சரி, அவருக்கு ஆத்ம குணங்களும் அநுக்கிரக சக்தியும் இல்லாவிட்டாலும் சரி, அவரால் நமக்கு எந்தக் காரியமும் ஆகாவிட்டாலும் சரி - அப்போதும் நாம் அவரிடம் மாறாத அன்பு வைத்தால், அதுவே உண்மையான அன்பு.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

என்கிற இந்தத் தாகமும் சேர்ந்து கொண்டதே! தண்ணீர் கிட்டாத இந்தச் சூழலில் என்ன செய்வேன்? தாகத்தை வேடிக்கை பார்க்கலானார். இது என்ன உணர்ச்சி என ஆராயலானார். தாகத்துடன் போராடலானார். இறுதியாக தாகம் என்ற உணர்வை வென்றார். இப்படி ஒவ்வோர் உணர்ச்சியாக வெல்ல வேண்டியிருந்தது. அதற்கான பயிற்சிப் பட்டறையாகத்தான் சிறைச் சாலையை இறைவன் அமைத்திருக்கிறான் என்பது புரியத் தொடங்கியது.

ஒருநாள் அவர் போர்த்தியிருந்த கம்பளிக்கு உள்ளிருந்து மனோகரமான ஒரு கை நீண்டது. நீலநிறக் கை. செம்பவழ மொட்டுகள் போல் விரல்கள் கொண்ட பிஞ்சுக் கை. அவர் வியப்போடு உற்றுப் பார்த்தார். பார்க்கப் பார்க்க, நெஞ்சை அள்ளிச் சாப்பிடும் எழில் கொஞ்சும் இறைவனின் திருக்கை. கடவுள் கைகொடுப்பார் என்பது இதுதானா! தன்னைக் கிள்ளிக் கொண்டு பார்த்தார். நிஜம்தான். அடக் கடவுளே! கண்ணக் குழந்தையல்லவா பக்கத்தில் வந்து படுத்திருக்கிறது! கண்ணா! நீ சிறையில் பிறந்தது போதாதா! என் தெய்வமே! இப்படி என்னோடு இந்த அலிப்பூர் சிறையில் கிடந்து வாட வேண்டுமா! குளிருமே உனக்கு! இந்தக் கம்பளி முழுவதையும் நீயே போர்த்திக் கொள். நான் தரையில் படுக்கிறேன். என்னது! என் தனிமையைப் போக்கத்தான் வந்தாயா! கையில் புல்லாங்குழல். தலையில் மயில்பீலி. அகன்ற பெரிய மையுண்ட கண்களில் ஆதரவுப் பார்வை... என் கண்ணன்... என் மணிவண்ணன்... அவர் பக்தியில் நெகிழ்ந்தார். கண்ணனை எடுத்து மடியில் வைத்துக் கொண்டார். கண்ணன் கலகலவெனச் சிரித்தவாறே அவரைப் படுக்க வைத்தான். தட்டித் தாலாட்டத் தொடங்கினான். பெரியவர்கள் குழந்தையைத் தாலாட்டுவார்கள். யசோதையால் தாலாட்டப்பட்ட கண்ணன் குழந்தை இப்போது ஸ்ரீஅரவிந்தரைத் தாலாட்டத் தொடங்கியது. அவர் விழிகளைத் தூக்கம் தழுவியது.

காலையில் எழுந்தார். பக்கத்தில் பார்த்தார். கண்ணனைக் காணோம். எங்கே போனான் மாயக் கண்ணன்? கண்டதெல்லாம் கனவா? இல்லை. நிஜம்தான். கிள்ளிப் பார்த்துக் கொண்டோமே! என்னைத் தூங்க வைத்துவிட்டு எங்கே போனான்! கடவுளே! அவன் சரியாகத் தூங்கினானோ இல்லையோ! "கண்ணா! கண்ணா!'' அழைத்தவாறே எதிரே பார்த்தார். ஆகா! என்ன அற்புதமான கண்கொள்ளாக் காட்சி! சிறைக் கம்பி ஒவ்வொன்றும் உருமாறி, வாசுதேவனாகி இருந்தது. ஒவ்வொரு கம்பிக்கும் பதிலாக ஒவ்வொரு வாசுதேவன்! ஏராளமான வாசுதேவர்கள் இடுப்பில் கைவைத்துக் கொண்டு, குறும்பு கொப்பளிக்கக் கலகலவென்று சிரித்தார்கள். ஆனந்தத்தில் அவர் விழிகளில் நீர் பெருகியது...

(அமுதம் பெருகும்)

ஜோர்

ஓர் ஊரில் ஒரு ராஜா என்பதுதான் நமது கதை மரபு. அதற்காக அதை அப்படியே உடும்புப் பிடியாக கவ்விக் கொண்டு ஒரு திரைக்கதை எழுத வேண்டுமா? முதுகு நோகாமல் இந்த வேலையை 'ஜோர்' படத்திற்காகச் செய்திருக்கிறார் இயக்குனர் செல்வா. நேர்மையான மனிதர் சத்யராஜ். அவருக்கு நேர் எதிர் அயோக்கியத்தனங்களுடன் வில்லனாக ஓர் எம்.எல்.ஏ. இருவருக்கும் மோதல். இறுதியில் வில்லனின் மகன் ஆளுயர கடப்பாரையை சத்யராஜை நோக்கி குறிவைத்து வீச, அது அப்பாவின் வயிற்றில் குத்தி முதுகு வழியே வெளியே வருகிறது. அடேங்கப்பா! தமிழ் சினிமாவுக்கு சாப விமோசனம்!

சரி! சத்யராஜின் பையன் சிபிராஜ் என்ன செய்கிறார் என்று பார்த்தால், கல்லூரித் தேர்தலில் நின்று வில்லனுக்கு தலைவலி தருவது, அவரது மகளையே காதலிப்பது, என்று எண்பதுகளில் சராசரி தமிழ்ப் பட ஹீரோ செய்யும் அதே வேலையை, அட்சரம் பிசகாமல் செய் கிறார். அவ்வப்போது அப்பா சத்ய ராஜுடன் சேர்ந்து கொண்டு கொட்டும் மழையில் வில்லன்களைப் புரட்டி எடுக்கிறார் (தமிழ் சினிமாவில் சம்பந்தா சம்பந்தமில்லாமல் பெய்யும் மழை நிஜத்தில் பெய்தாலாவது, வறட்சி நீங்கும்) படத்தில் மிகவும் பாவப்பட்ட ஜென்மம் யாரென்றால், கதாநாயகி கஜாலா தான். தொடக்கத்தில் சிபியுடன் முறைத்துக் கொண்டு, பிறகு சிபியின் ஸ்பரிசம் பட்டதும், அவருக்குள் கெமிஸ்ட்ரி வேலை செய்யத் தொடங்கி விடுகிறது. அடுத்த காட்சியில் சிபியுடன் டூயட் ஆடிக் களைத்துப் போகிறார்.

ஜோர், இருபது வருடங்களுக்கு முன் வந்திருக்க வேண்டிய அக்கப் போர்!

- விஷ்ணுவல்தாசன்

● ஜஸ்ட் பாஸ்



கல்கி வழங்கும்
சென்னை ஸ்ஜேஸ்
கல்கி ஜன்னலில் ஒரு மின்னல்!
(சென்னை வாசகர்களுக்கு மட்டும்)

8 பக்கங்கள்
27, ஜூன் 2004 இதழுடன் இலவச இணைப்பு

திருட்டு விசிடி தர்பார்

– ஒரு 'ஸ்பெஷல்' ரிப்போர்ட்



முகில்

"யார் செய்த பாவமோ, தமிழ் சினிமா திருட்டு விசிடியின் பிடியில் சிக்கித் தவிக்கிறது. டெக்னிக்கலாக விசிடியும் முன்னேறிவிட்டது. இப்பொழுதெல்லாம் புதிய படங்கள் ரிலீஸாவதற்கு முன்பே, அதன் திருட்டு விசிடிகளும் வெளிவர ஆரம்பித்து


● சைலேந்திரபாபு

விட்டன. இனி இதெல்லாம் எங்கு போய் முடியுமோ?" என தற்பொழுது தமிழ் திரையுலகினர் நிலைகுலைந்து போயிருக்கின்றனர்.

சமீபத்தில் சென்னை பாரிமுனையில், வெளிவராத படங்களான ஜக்குபாய், உள்ளம் கேட்குமே, கஜேந்திரா, மன்மதன், நியூ, ஜனனம் ஆகியவற்றின் லேபில்களை அச்சடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தவர்களை, சென்னை போலீஸ் கைது செய்துள்ளது. இதைத் தொடர்ந்து ரிலீஸுக்கு முன்பே படங்கள் விசிடி கள்ள மார்க்கெட்டில் புழங்குகிறதா என்ற கேள்வியை, கோலிவுட் தனக்குத் தானே தற்பொழுது கேட்டுக் கொண்டிருக்கிறது.

பொது மக்களின் அமோக ஆதரவு, போலீஸாரின் அலட்சியமான போக்கு... என இவைகளோடு மல்லுக்கட்டும் தமிழ் சினிமா, அவ்வப்போது தனக்குத்தானே கேட்டுக் கொள்வது 'திருட்டு விசிடியை போலீஸ் பறிமுதல் செய்கிறார்களே, அதை அவர்கள் என்ன செய்கிறார்கள்? ஒருவேளை அவர்களுக்குள்ளேயே ரொடேஷனில் விட்டு, புதுப் பட சிடிக்களை ஜாலியாகக் கண்டுகளிக்கிறார்களா..!' என்பதுதான்.


திரையுலகில் முக்கியமான புள்ளிகள் சிலரிடம் இதுபற்றி பேசினோம். "திருட்டு விசிடிக்களை ஆயிரக்கணக்கில் பறிமுதல் செய்யும் போலீஸார், அதன்பிறகு அதை என்ன செய்கிறார்கள் என்பது திரையுலகில் யாருக்கும் தெரியாது. படங்களை வாங்கி திரையிடும் விநியோகஸ்தர்களிடமோ அல்லது அதன் சங்கத்திடமோ முறையாக ஒப்படைத்தால், எங்களுக்கு எவ்விதக் குறுகுறுப்பும் இருக்காதே" என்றார் பிரபல தயாரிப்பாளர் ஒருவர்.

"என்ன சார், நீங்க இதுபற்றி என்ன நினைக்கறீங்க!" என்று விநியோகஸ்தர்களின் தலைவரான சிந்தாமணி முருகேசனிடம் கேட்டபொழுது, "விசிடிக்களைப் பறிமுதல் செய்யும் காவல்துறை, அதன்பிறகு அதை என்ன செய்கிறார்கள் என்பது அந்த ஆண்டவனுக்குதான் வெளிச்சம். ஒருவேளை அவர்களுக்குள் புழங்கி புதுப்பட சிடிக்கள் மூலமாக படங்கள் பார்க்கலாம். யார் கண்டார்கள்!" என்று புதிர் போட்டார்.

நேரு ஸ்டேடியத்தில் துணை கமிஷனர் சைலேந்திர பாபுவை சந்தித்தோம். திருட்டு விசிடி என்ற டாபிக்கைக் கேட்டதும் ஆர்வத்துடன் பேச ஆரம்பித்தார். "இதோ இன்னைக்குக் கூட திருட்டு விசிடி கும்பலை பிடிச்சிருக்கோம். ரிலீஸாகாத படங்களின் லேபில்களை இப்பவே அடிச்சி ரெடியா வைச்சிருக்காங்க. நீங்க வேணா பாருங்க, 'ஜக்குபாய்' ஆடியோ ரிலீஸ் ஆகும்போது, படத்தோட பாட்டு விசிடி ரெடியானாலும் ஆச்சரியப்படுவதற்

→

உள்ளே...


வில்லை" என கலவரமூட்டினார். "சரி, இங்க வேணாம். நாளைக்கு ஆபீஸுக்கு வந்திருங்க. இதுபற்றி விரிவா பேசுவோம்" என்றார்.

ஓவர் டு கமிஷனர் அலுவலகம். 'காக்க காக்க' படத்தில் சூர்யாவின் ரோல்மாடலாக இருந்த சைலேந்திர பாபுவிடம், திரையுலகின் அச்சத்தை வெளிப்படுத்தினோம். உடனடியாக மறுத்தார். "லேட்டஸ்டே கிடையாது. இதுவரை பறிமுதல் செய்யப்பட்ட அத்தனை சிடிக்களும் பத்திரமாக இரு உத்தரவுகளுக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றன. ஒன்று கோர்ட், மற்றொன்று மாசுக்கட்டுப்பாட்டு வாரியம். இந்த சிடிக்களுக்கு மண்ணில் மக்கும் தன்மை கிடையாது. அதை எப்படி டிஸ்போஸ் செய்வது என்ற வழிமுறைகள் இதுவரை தெரிவிக்கப்படவில்லை. அதனால் முறையான உத்தரவுகளுக்காகத்தான் காத்திருக்கிறோம். கிடைத்த பிறகு சிடிக்கள் எங்கள் வசம் இருக்காது" என்றார். தொடர்ந்து "ஏன் தமிழ் நாட்டில் மட்டும் இந்த நிலைமை! ஆந்திராவில் திருட்டு விசிடியே கிடையாதே!" என திரையுலகினரின் கருத்தை அவரிடம் வைத்தோம். "நோ சான்ஸ். இங்கவிட ஆந்திராவுல வெளிப்படையான வியாபாரம் நடக்குது. நாங்களாவது குற்றவாளிகளைப் பிடிக்கிறோம். அங்க அதுவும் கிடையாது. இப்போ திருட்டு விசிடி ஒரு இண்டஸ்ட்ரீ மாதிரி ஆயிடுச்சு. கம்ப்யூட்டர் படிச்சு வேலை கிடைக்காத இளைஞர்கள் ஏராளமான பேர் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இதில் பெண்களும் அடக்கம். வெளியூர்களிலிருந்து வந்து சென்னையில் லாட்ஜில் ரூம் போட்டு, சிடிக்களை வாங்கிச் செல்லும் கொடுமையும் நடக்கிறது. மக்களும் சிடியில் படம் பார்ப்பதை விரும்புவதால், சட்டத்தால் கடுமையாக நடந்து கொள்ள முடியாமல் போகிறது. நாங்களும் இதையே முழு நேரமும் கண்காணிக்க முடியாது. காரணம், போதை, கள்ளக் கடத்தல் போல் திருட்டு விசிடியால் பொது மக்களுக்கு எவ்வித தீமைகளும் ஏற்படுவதில்லை. போலீஸை இதில் களங்கப்படுத்துவதைவிட, திரையுலகம் விஞ்ஞான ரீதியாக திருட்டு விசிடியைத் தடுக்க முடியுமா எனப் பார்க்க வேண்டும். மக்கள் வீட்டிலேயே படம் பார்க்க விரும்புவதால் அவர்களுக்கேற்றபடி படம் ரிலீஸான சமயத்தில் ஒரிஜினல் சிடியை சந்தைப்படுத்தினால், திருட்டு விசிடி தலைவலிகள் ஒழிவதற்கு வாய்ப்புள்ளது" என நமக்கு 'விடை' கொடுத்தார் துணை கமிஷனர்.

இந்தப் பிரச்னையைப் பொறுத்த வரை, எல்லோர் மனதிலும் ஒலிக்கும் பாடல் இதுதான்.

"இது உன் குற்றமா? என் குற்றமா? யாரை நான் குற்றம் சொல்ல..."

✍ **ச.ந. கண்ணன்**


விசிடிக்களை அழிப்பது குறித்து மாசு கட்டுப்பாடு வாரியத்தின் உயர் அதிகாரி ஒருவரிடம் விசாரித்தபோது "விசிடிக்களை தற்போதுள்ள முறையில் அழித்தால் (எரிப்பது) சுற்றுச் சூழல் மாசடைவது உறுதி. அதற்காக Scientific முறையில் மறு சுழற்சி (அ) மறு பயன்பாட்டுக்கு உள்ளாக்க வேண்டும். ஆனால் இது வரை எந்த நவீன முறையும் கையாளப்பட வில்லை" என்று தெரிவித்தார்.

✍ கலை

பிரபல வீடியோகஸ்தரான ஜோஹரிடம் பேசினோம். "காவல் துறையில் சில கருப்பு ஆடுகள் இருக்காங்க. அவர்கள் லஞ்சம் வாங்கிட்டு திருட்டு விசிடி தொழிலுக்கு உடந்தையா இருக்காங்க. கைப்பற்றப்பட்ட சிடிக்களெல்லாம் கோர்ட்டுலதான் ஒப்படைக்காங்கன்னு என்ன நிச்சயம்? ஆனால் சைலேந்திர பாபு மாதிரி சிலராலதான் சில குற்றவாளிகளாவது பிடிபடுறாங்க" என்றார்.

பொலிட் பீரோ

தமிழகத்துக்கு காவிரி நீரைப் பெற்றுத் தருவது சோனியா, கருணா



நிதியின் பொறுப்பாம்னு ஏற்கனவே சி.எம். சொல்லியிருந்தாங்கல்ல. அதை தண்ணி வந்துட்ட இந்த நேரத்துல சொல்லி, திமுக தரப்பு கொக்கரிக்குதாம்! நாங்களும் மம்ம இருந்தோம்ல! என்று பதிலுக்குக் கொக்கரிக்குதாம் சி.எம். தரப்பு.

(அணைகள் நிரம்பி வேறு வழியின்றி தண்ணி வருதுன்னு நமக்குத் தெரியாதா?)


ஐந்தாம் வகுப்பு வரை 'ஆல் பாஸ்'னு கவர்மெண்ட் அறிவிச்சிருக்குல்ல. அதை முன் தேதியிட்டு அமல்படுத்த முடியுமான்னு 5 ஆம் வகுப்பு கூட தேறாத அரசியல்வாதிகள் நக்கலடித்துள்ளனராம்.

(இது என்ன சின்னபுள்ளத் தனமா இருக்கு!)

முத்துக்கள் மூன்று :

★ தமிழக மத்திய அமைச்சர்கள் 12 பேருக்கும் வாழ்த்துகள்.

★ கருணாநிதி துணைப் பிரதம



ராகி இருந்தால் மகிழ்ந்திருப்பேன்.

★ மாவட்டத் தலைநகரை ஊராட்சியாக்குவது கேவலமானது


- இல. கணேசன்

(இதுக்குப் பேர்தான் 'ஹாட்ரிக்' சேம் சைடு கோல்லு)

அன்புமணி மந்திரியானது குறித்து விஜயகாந்த் கடுமையாகப் பேசி வைக்க டாக்டர் ராமதாஸ் கேப்டனுக்கு 'அரைவேக்காடு', 'வயிற்றெரிச்சல்காரர்' என்ற ரீதியில் கடாசிட பதிலடி கொடுக்க நொந்து நூடுல்ஸாகியிருக்கும் கேப்டனுக்கு திடீரென்று டாக்டர் கிருஷ்ணசாமி நேசக்கரம் நீட்டியிருக்காராம். அதுக்காக வீதிக்கு வந்து போராடுமாறு அன்பு அழைப்பும் விடுத்திருக்கிறாராம்.

(முன்பு 'சூப்பரு'க்காக ரோட்டுக்கு வந்த கிருஷ்ணசாமி இப்ப 'புரட்சி'ய ரோட்டுக்கு கூப்பிடறாரே! இல்லாட்டிதான்!)

✍ கலை



கமிஷனரை ஓட்டிய நிருபர்கள்

சென்ற வாரம் கமிஷனர் அலுவலகத்தில் ப்ரஸ்மீட் நடந்தது. அப்பொழுது முதலில் தமிழில் பேசத் துவங்கினார் கமிஷனர் நட்ராஜ். ஒரு பெண் நிருபர் "ஆங்கிலத்தில் சொல்லுங்கள்" என்று கேட்க முதலிலிருந்து ஆங்கிலத்தில் சொன்னார். பின்னர் அப்படியே ப்ரஸ்மீட்டை ஆங்கிலத்தில் தொடர்ந்தார். சும்மா விடுவாங்களா தமிழ் நிருபர்கள்! "சார், இங்லிஷில் சொன்னதை, தமிழில் சொல்லுங்கள்" என ஆங்கிலத்தில் கேட்க(!) வேறு வழியின்றி சொன்னதை தமிழ்ப் படுத்தினார் கமிஷனர்.

(ஏம்ப்பா, கமிஷனருக்கே ராக்கிங்கா.)

✍ எழில்

பூமராங்

✉ முன்பே 'மீடியா' கலக்கிய மாதிரி இப்போ நீங்க (கல்கி) 'சென்னை(வை) எக்ஸ்' - பண்ணி உள்ளூர் 'டைம்ஸ்' பத்திரிகைகளின் வயிற்றில் 'புளி' கரைத்திருக்கிறீர்கள். 'எக்ஸ்' ரீசல்ட்டுகளை போகப் போகத்தான் பார்க்கணும். எட்டு பக்கங்கள் படிக்க இண்ட்ரஸ்டிங் காகவே இருக்கு. பலே! வாழ்த்துகள்!


- செம்பவாழினி, வடசென்னை

✉ அதிக பக்கங்களுடன் ஏராள செய்தி / படங்களுடன் நிறைய விளம்பரங்களுடன், மேன்மேலும் செழித்து சிறப்பாக வெளிவர கல்கி வழங்கும், சென்னை எக்ஸ் இதழுக்கு வாழ்த்துகள்! பெண்களுக்கு பக்கம் தனியாக இரண்டு ஒதுக்குங்கள்!

- என். வசந்தா, வடபழனி

✉ சென்னை வாசகர்களுக்கு 'சென்னை எக்ஸ்' வழங்கிய கல்கி, அதை மற்ற ஊர்க்காரர்களுக்கும் வழங்கியிருந்தால், எங்களுக்கும் பயன்பட்டிருக்குமே!

- பி. ராஜசேகரன், மதுரை



காங்கிரஸின் மறுமலர்ச்சிக்கு இளங்கோவனே காரணம்!

வாடிக்கையாளரைப் பார்த்தவுடன் 'மெகா' புன்னகையுடன் வரவேற்றுப் பேசும் வசந்த் அண்ட் கோ உரிமையாளர் திரு. வசந்தகுமார், ஜி.கே. வாசனைப் பற்றிக் கேட்டால் மட்டும் பொரிந்து தள்ளி விடுகிறார். அவருடன் 'அதிக காரம், கொஞ்சம் ஸ்வீட்' கலந்த உரையாடல்:

நெல்லைச் சீமையின் மருமகனுக்கு திருநெல்வேலி வடு மறைந்து விட்டதா?

எப்படி மறையுங்றேன்! கட்சிக்காக உழைக்கிறவனுக்கு வாய்ப்பில்லைன்னா, ஆதங்கம் இருக்கத்தானே செய்யும். தமிழக தலைமைக்கு வேண்டப்பட்டவங்களுக்குத்தான் சீட்டுன்னா எப்படி? (சிரிக்கிறார்)

தமிழகத்துல காமராஜ் ஆட்சி என்ற கோஷம் நீர்த்துப் போய் விட்டதா?

தற்போதைய தலைமை மாதிரி இருந்தா ஏன் நீர்த்துப் போகாதுங்கறேன்? காமராஜர் படத்தைப் போஸ்டரில்கூட போடாதவங்க, எப்படி காமராஜர் ஆட்சியை அமைக்க முடியும்? (முகத்தில் கோபம் கொப்பளிக்கிறது)

தலைமை சீட்டு கொடுக்காததாலதான், இவ்வளவு கோபமாப் பேசறீங்களா?

கோபத்தை விடுங்க. தேர்தல்ல போட்டியிட டெபாசிட் தொகையா எல்லாரும் ஐயாயிரம் ரூபாய் கொடுத்தோம். அதை ஒன்னு திருப்பி கொடுக்கணும். இல்லாட்டி அதுக்குக் கணக்கு காட்டணும். எதையாவது செஞ்சாங்களா? செய்ய மாட்டாங்க.

திருநெல்வேலிக்கு அல்வா - காங்கிரஸுக்கு கோஷ்டி. ஒத்துக்கறீங்களா?

ஒத்துக்கறேன். தலைமை சுத்தமா இருந்தா - தலைவருக்கு உண்மையான தொண்டர் பலம் இருந்தா - மக்கள் செல்வாக்கு இருந்தா, கோஷ்டியே வராது. காமராஜர் காலத்துலயும் கோஷ்டி இருந்தது. ஆனால் காமராஜர் தன்னை எதிர்த்தவங்களையும் அரவணைச்சிகிட்டாரு. ஆனா இப்ப அப்படி இல்லை.

நீங்கள் தேர்தல் நேரத்து அரசியல்வாதின்னு சொல்றாங்களே?

யாரு சொன்னது? தேர்தல் நேரத்துல மட்டும் வருகிற அரசியல்வாதிகளுக்கு தலைமை தண்டனை கொடுத்ததை பார்த்திருப்பீங்களே! (சிரிக்கிறார்)

ஏற்கனவே மேயர் தேர்தல்ல நின்னீங்க. மீண்டும் நிப்பீங்களா?

கூட்டணில காங்கிரஸ் சென்னையையே கேக்காது. என்ன, எங்க வசந்தகுமார் வந்துடுவாரோன்னு பயந்துல கேக்கவே மாட்டாங்க. ஆனா ஒன்னு பதவியில்லாமலேயே என்னால சேவை செய்ய முடியும்.

சமீபத்துல சிம்பு நற்பணி மன்றத்தைத் திறந்து வைச்சீங்க. நடிகர்கள் அரசியலுக்கு வருவதை நீங்க ஊக்கப் படுத்தறீங்களா?

நடிகர்கள் அரசியலுக்கு வரலாம். ஆனால் அவங்க முதல்வர் கனவோட வரக் கூடாது.

விவேக் உங்களை 'பேரழகன்' படத்துல நக்கலடித்துள்ளாரே?

இதெல்லாம் ஜாலியா எடுத்துக்கணும்னு நினைக்கிறவன் நான். அதுமட்டுமில்லாம, விவேக் என்கிட்ட பெர்மிஷன் வாங்கிட்டாரு.

காங்கிரஸைச் சார்ந்த வர்த்தகரா நீங்க இருக்கிறதால, போன பி.ஜே.பி. கவர்மென்டிடம் இருந்து Tax problem ஏதாச்சும் வந்ததா?

நான் சுத்தமானவன். வியாபாரத்தில் ஒழுக்கமானவன். அதனால யார் ஆட்சிக்கு வந்தாலும் எனக்கு பயமே கிடையாது.

தமிழக காங்கிரஸ் மறுமலர்ச்சி அடைந்துள்ளதுன்னு நீங்க நினைக்கிறீங்களா?

நிச்சயமாக மறுமலர்ச்சி அடைந்துள்ளது. காரணம் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன்தான். ஆனா அவரது தலைமைக்குப் பிறகு காங்கிரஸ் வளர்ந்துள்ளதான்னு தெரியலே.



ராஜ்யசபா வேட்பாளர் அறிவிக்கப்பட்டவுடன் வசந்தகுமாருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது, "வருத்தம் எதுவும் இல்லை. சோனியாவே சுப்ரீம் அத்தாரிட்டி" என்று ஒரு வரியில் முடித்துக் கொண்டார்.

+ சி. இரா. முத்துக்குமார்

பிரேமின் பாயிண்ட்

இவற்றின் அர்த்தம் புரிகிறதா? புரியாதவர்கள் தாராளமாக 8ம் பக்கத்தில் விடையைப் பார்த்துக் கொள்ளுங்கள்.

ARREST
YOU ARE

ர ர
யி
ல் ல்

வரலாறு
வரலாறு
வரலாறு

அமைதி புயல்

ஒலிம்பிக்கிற்கான இறுதி தகுதிப் போட்டி என அறிவித்து விட்டதாலோ என்னவோ, சென்னையில் சென்ற வாரம் நடைபெற்ற நேஷனல் சர்க்யூட் மீட் பரபரப்பாகவும், பலவித எதிர்பார்ப்புகளுடனும் நடந்தது.

இந்த அத்லெடிக் மீட்டிற்கு காவல் துறையின் அனைத்து வி.ஐ.பி.களும் ஸ்போர்ட்டிவாக வந்திருந்து நெறிப்படுத்தினர். ஒலிம்பிக் தகுதிக் கோட்டிற்கருகே நிற்கும் பல வீரர்களுக்கு, இப்போட்டி ஒரு ஆசிட் டெஸ்ட் என்பதால், அவர்களின் கோபதாபங்கள், அழுகை, ஆர்ப்பரிப்பு எல்லாமே கண்கூடாகக் காண முடிந்தது. 400 மீ ஓட்டத்தில் நேரு ஸ்டேடியத்தையே தன்னவாக ஓடி கலக்கிய மஞ்சித் கவுர், சித்ரா கே. சோமன் இருவரும் அடுத்து நேராக ஏதென்ஸ் செல்ல வேண்டியதுதான். நூறு மீ. தடை ஓட்டத்தில் இரண்டாவதாக வந்த தமிழ்நாட்டின் தங்க மங்கை கே.என். ப்ரியா, நமக்காகக் காத்திருந்தாரோ என்னவோ, பார்த்ததும் குமுறி விட்டார்.



"கேரளாவுல போய்ப் பாருங்க. ஒரு சின்னக் குழந்தையின் ரத்தத்தில கூட ஸ்போர்ட்ஸ் கலந்திருக்கும். ஆனா இங்கே? பாகிஸ்தான் SAF கேம்ஸ்ல ஜெயிச்ச எனக்கு கேஷ் அவார்ட்ஸ் தர்றதா சொன்னாங்க. ஆனா இன்னைக்கு வரைக்கும் தினமும் இரண்டு வேளை ஓட்டிட்டிருக்கணும் அப்போதான் இதுல ஜெயிக்க முடியும். யாருக்காகவும் இல்லைனாலும் என் திருப்திக்காக நான் சாதிக்க நினைக்கிறேன்" என டாட்டா காட்டினார் கே.என். ப்ரியா. மைக்கில் அவர் பெயர் அறிவிக்கப்பட்டதும், மொத்த ஆடியன்ஸும் இந்த தங்க மங்கைக்காக ஆர்ப்பரித்தது.

தமிழக அத்லெடிக்ஸை தன் பிடியில் வைத்திருக்கும் தேவாரத்திடம் கே.என். ப்ரியாவின் மனத் தாங்கலை வெளிப்படுத்தினோம். உடனே டென்ஷனாகிவிட்டார். "என்ன பேசுது அந்தப் பொண்ணு. ஜெயிச்சா உடனே பணம் கொடுத்துடுவாங்களா? 2 லட்சம் கன்டிப்பா கிடைக்கத்தான்போகுது. அஞ்சு ஜார்ஜ் மட்டும் ரூ.55 லட்சம் தமிழக அரசிடமிருந்து வாங்கியிருக்காங்க தெரியுமா? ம். உங்க தமிழ்ப் பத்திரிகைகளுக்குத்தான் மத்த ஸ்போர்ட்ஸ் மேல அக்கறையில்லையே" என்றவர், ஒலிம்பிக் டீம் பிரச்னை தொடர்பாக மேலும் டென்ஷனானார்.

"முன்னாள் ஹாக்கி ப்ளேயர் பாஸ்கரன், அஞ்சு ஜார்ஜ், ஷைனி வில்சன் யாரையும் கூப்பிடலையே. வெரி பேட்" என்றார் கோபமுடன்.



மீட்டின் ஸ்டார் வீராங்கனையான பீனாமோல், 400மீ ஓட்டத்தில் தோற்றுப் போனாலும் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. பி.டி. உஷா, ஷைனி என கேரள மங்கைகளை அழைக்காத ஒலிம்பிக் கமிட்டி, இவருக்கு மட்டும் அழைப்பு விடுவித்தது பலருக்கும் ஆச்சர்யத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் மேடம் அப்போது உக்ரைன் பறந்து விட்டார்.

"ஆமா, எப்படி தமிழ்நாடு கவர்மெண்ட் இவ்ளோ கேஷ் அவார்ட்ஸ் கொடுக்குது ம்.. எங்க கேரளா கவர்மெண்டுல பணமே இல்லை. பாவம் தவிக்கறாங்க" என கேலியாகச் சிரித்தார்.

ஆளாளுக்கு குமுறுகிறார்கள்



• கே.என். ப்ரியா

"பணம் வந்து சேரலை" என படபடத்தவர், மேலும் பல குண்டுகளை வீசினார். "மத்தியில சினிமாக்காரர்களில் தந்தை ஸ்போர்ட்ஸ் மினிஸ்டரா போட்டிருக்காங்க. இதை விடுங்க, ஒலிம்பிக் டீம் தூக்கிட்டு ஓடுற பெருமையை எனக்குக் கொடுக்க வேண்டாம். பி.டி.உஷா, அஞ்சு ஜார்ஜ், ஷைனி வில்சன் போன்ற முக்கியமான அத்லெட்களை மறந்துட்டு கெட்டவரையும் நடிகைகளையும் கூப்பிட்டிருக்காங்களே, என்னது இது. கேட்டா ஸ்பான்ஸர்ஷிப்பை மகிழ்விக்கணுமாம். ஏன் கவர்மெண்டுல பணம் இல்லையா? கோடி கோடியா கொள்ளை அடிக்க தெரியுதுல்ல" என்று கொதித்தவர், கொஞ்சம் கொஞ்சமாய் கூலானார். "என்னுடைய இலக்கு 2006 ஏசியன் கேம்ஸ். அப்ப என்னை நான் ப்ரூவ் பண்ணுவேன், பாருங்க இங்கே இருக்கிற ஃபெடரேஷன் எனக்கு ஹெல்ப் பண்ணாங்க. விளையாட்டுச் செலவுகளுக்கான பில் கொடுத்தா, பணம் கொடுத்துடறாங்க.

நேரு ஸ்டேடியத்தில் ஷைனி வில்சன் பழைய நினைவுகளோடு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். "என்ன மேடம், அவ்வளவா பார்க்கவே முடியறதில்லையே" என குசலம் விசாரித்தோம். "ஆபீஸ்ல நான் பிஸி. பாருங்க, நான் நான்கு ஒலிம்பிக்கில கலந்துகிட்ட முதல் இந்தியப் பெண். கேப்டனாவும் இருந்திருக்கேன். ஆனா என்னைக் கூப்பிடலையே" என்று ஷைனி தன் நியாயமான ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

• பீனா மோல்



• ஷைனி வில்சன்



தங்கப் புலம்பல்கள் போதும். ஒலிம்பிக்கைக் குறி வையுங்க. ஆல் தி பெஸ்ட்!

ச.ந. கண்ணன்

முகில்

கிளிப்பிங்ஸ்

'ஃபயர்' போன்று பத்திக்கும் என 'கேர்ள் ஃப்ரெண்ட்' படத்தைப் போட்டி போட்டுக் கொண்டு



சூப்பர் கவலை

“அரசியல் எதிர்பார்ப்புகள், பாமகவின் புதிய எதிர்ப்புகள், நடிகை ஐஸ்வர்யா ராயின் கால்ஷீட் நெருக்கடி, இதற்கிடையே மூத்த மகள் ஐஸ்வர்யாவின் திருமணம் என இத்தனையும் சுமுகமாக முடிந்து எப்படித்தான் ஜக்குபாயை பத்திரமாக ரிலீஸ் செய்யப் போகிறேனோ” என்ற கவலையில் ஆழ்ந்துள்ளார் சூப்பர் ஸ்டார்.

சென்னை திரையரங்குகள் வாங்கின. கிருஷ்ணசாமிகூட எதிர்க்கக் கிளம்பினார். ஆனால் ரசிகர்கள் அது சைட் அடிக்கக் கூட தகுதியில்லாதது என நிராகரித்து விட்டனர்.

குணால் குண்டானால் எப்படியிருக்கும்? அதோடு விருமாண்டி டைப்பில் மீசை வைத்தால்... "ஆனா இதெல்லாம் ஓவரப்பா..." என்று நீங்கள் சொன்னாலும், 'காதல் திருடா' படத்தில் குணாலை இந்த கெட்-அப்பில்தான் பார்க்கப் போகிறீர்கள்!

வர வர அரசியல்வாதிகளாக மாறி வருகிறார்கள் நம் நடிகர்கள். விளம்பரமா? எதையும் என் ரசிகர்கள் மீது திணிக்க மாட்டேன் என்று பேசி வந்த அஜீத், தற்பொழுது சத்தமில்லாமல் நெஸ்கஃபே சன்ரைஸ் விளம்பரத்தில், சிம்ரனுடன் இணைந்து நடித்துள்ளார். (விளம்பரங்களில் இன்னமும் தலை காட்டாமலிருப்பது சீயான் மட்டும்தான்!)

“காதலைத் தவிர என்னைப் பற்றி எழுத எதுவுமில்லையா?” என சோனியா அகர்வால் பத்திரிகைகளுக்குப் பேட்டி தருவதில்லை.

அடுத்த சிம்ரன் யார் என்ற போட்டியில், ரீமாசென்னும் நமீதாவும் களத்தில் இறங்கியுள்ளனர். இனி ரசிகர்களுக்குக் கொண்டாட்டம்தான்.

ரீ-என்ட்ரிக்கு கார்த்திக் தயாராக இருந்தாலும், திரையுலகம் இவரை எண்ணி 'உச்' கொட்டுகிறது. இளமை இருக்கும்போது கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் உதாசீனப்படுத்தி, தயாரிப்பாளர்களைத் திணற வைத்துவிட்டு, இன்று வந்து திருந்தி விட்டேன் என டயலாக் அடித்தால் மட்டும் போதுமா? இழந்த இளமையை மீட்டுக் கொண்டு வந்தால் மட்டுமே இன்னொரு 'மௌனராகம்' பாட முடியும் என்கின்றனர்.

✍ எழில்





டாக்கீஸ் டாக்



“ஏடாகூடமா எழுதாதீங்க, ப்ளீஸ்!”

ஸ்ரீதேவி - இந்தப் பெயர் கொண்டவர்களையெல்லாம் அழகாகவே படைத்திருக்கிறான் பிரம்மன். விஜயகுமார் குடும்பத்தின் கடைக்குட்டியான ஸ்ரீதேவி சமீபகாலமாக பத்திரிகைகளுக்கு பேட்டியளிக்காமல் இருந்தவர் சென்னை ஸ்பெஷலுக்காக தன் அழகிய மனம் திறந்தார்.

“என்னுடைய முதல் மூன்று படங்களுக்கும் இப்போது தனுஷோட நடிக்கிற 'தேவதையைக் கண்டேன்'னுக்கும் பெரிய கேப் விழுந்திருக்கு. இந்தப் படம் இவ்வளவு தூரம் இழுக்கும்னு தெரியாது. நான் தெலுங்கு, கன்னடம் படங்களில் நடிச்சாலும் தமிழ் படங்களில் நடிக்கும்போது மட்டும் நல்லா பண்ணி ஜெயிக்கணுங்கிற வெறி இருக்கு.

'தேவதையைக் கண்டேன்' ஒரு ஃபுல் லெங்த் காமெடி படம் [illegible] போதும். கருணாஸ், மயில்சாமி பண்ணின காமெடியைப் பார்த்து, நான் ஷூட்டிங்கில சிரிச்சுட்டே இருந்தேன். தனுஷ் ஒரு அற்புதமான நடிகர். எங்க ரெண்டு பேருக்குமிடையே நல்லா அண்டர்ஸ்டாண்டிங் இருக்கு. 'சாமி' த்ரிஷா கேரக்டர் முதல்ல எனக்கு வந்ததுதான். ஆனா இப்போ அதைப் பத்திப் புலம்பறது வேஸ்ட். விதிப்படிதான் எல்லாம் நடக்கும் இல்லையா. இயக்குநர் ஹரி அக்காவோட கணவர் என்றாலும்கூட ஃபேமிலி வேற, சினிமா வேற. அவர் படத்துக்கு நான் தகுந்த ஹீரோயினா இருந்தா நிச்சயம் கூப்பிடுவாரு.

நல்ல ட்ரெண்ட் இங்க இருக்கு. 'கில்லி' 'ஆட்டோகிராஃப்' என காண்ட்ராஸ்ட்டான படங்கள் சரிசமமா ஜெயிக்குது. இதுல 'ஆட்டோகிராஃப்' எனக்கு ரொம்பப் பிடிக்குது. அருமையான திரைக்கதையால 3 மணி நேரம் கட்டிப்போட்டு [illegible] படம்.

அப்பா, அம்மா 'பேபி' மாதிரியெல்லாம் வாங்கிக் கொடுத்து கஷ்டமில்லாம வளர்த்திருக்காங்க. ஆனா பணம் அதிகமா இருந்தா கஷ்டமே இருக்காதுன்னு நினைச்சிடாதீங்க. டாட்டா - பிர்லாவுக்குகூட ஏதாவதொரு கஷ்டம் நிச்சயம் இருக்கும்.

காலேஜ் லைஃபை மிஸ் பண்ணினதுக்கு வருத்தமே இல்லை. நல்லவேளை சினிமாவுக்கு வந்தேன். என்னைக் கண்ணாடி முன்னாடி பார்த்தா குறைகள்தான் முதல்ல தெரியுது. ப்ச்... சீக்கிரம் அதெல்லாம் மறைஞ்சா பரவாயில்லை.

காதல் திருமணமா? தெரியாது. எதுவாயினும் அப்பா அம்மா சம்மதத்தோடுதான் நடக்கும். ரஜினி குடும்பமும் நாங்களும் ரொம்ப க்ளோஸ். அதனால ஜக்குபாயில அப்பா நடிக்க வாய்ப்பிருக்கு. ஆனா நான் நடிக்கல!”

கழுவுற மீனில் நழுவுற மீனாய் பேட்டி கொடுத்துவிட்டு இறுதியாக ஸ்ரீதேவி சொன்னது. “ப்ளீஸ்” ஏடாகூடமான தலைப்பு போட்டாதீங்க. ஏதாவது பிரச்னை ஆயிடப் போகுது!” இப்போ சந்தோஷமா ஸ்ரீ!

✍ ச.ந. கண்ணன்

CLASSIFIEDS

"ஐயம் ஜஸ்ட் ஸெவன்ட்டிதீர் இயர்ஸ் யங்" என்று சிரிக்கும் SAP வரதனின் அபார தன்னம்பிக்கையும், ஆங்கிலப் புலமையும் அசத்துகின்றன. 'தள்ளாத' என்று சொல்லக் கூடிய வயதில் எந்தத் தள்ளாட்டமுமின்றி, தடுமாறாத ஜோஸியம் சொல்லும் SAP வரதனிடம் கொஞ்சம் பேசினோம்.

நீங்கள் கணிக்கின்ற தகவல்கள் எத்தனை சதவிகிதம் உண்மை?

நூற்றுக்கு நூறு சதவிகிதம் உண்மை. (அழுத்தமாகக் கூறுகிறார்)

வாஸ்து ஜோதிடத்தால் உங்களுக்கு வரவேற்பு குறைந்துள்ளதா?

நூற்றாண்டு கண்ட கட்டடங்கள் பல இன்னும் அப்படியே உள்ளன. வாஸ்துப் பிரகாரம் கட்டப்பட்டவை சின்னாபின்னமாகி விட்டன. அதனால் வாஸ்து கூறுது இப்பல்லாம் வெறும் ஹம்பக்! அதனால எனக்கு பாதிப்பே கிடையாது.

ராசிக்கற்கள், பெயர் மாற்றிக் கொள்ளுதல் இவையெல்லாம் எப்படி?

மோதிரத்தில் ராசிக் கற்கள் அணியச் சொல்லி, ஆயிரக்கணக்கில் சம்பாதித்து விடுகின்றனர். இந்த மோதிரக் கற்களால் வர்ணிக்க முடியாத பல விஷயங்கள் நடந்து விட்டதாகக் கூறி, என்னிடம் பரிகாரம் கேட்கிறார்கள். அது போல தாய் - தகப்பன் வைத்த பெயரை மாற்றி, ஒன்றுக்கும் உதவாமல் போன பிறகு பழைய பெயரையே வைத்துக் கொள்ளட்டுமா? என்று என்னைக் கேட்கிறார்கள். கண்ணை மூடிக் கொண்டு கிணற்றில் விழுந்தவர்களை என்ன செய்ய முடியும்?

மனக் கஷ்டத்துடன் உங்களிடம் வருபவர்களுக்கு, மனத் திருப்திக்காக பொய்யான தகவல் சொல்வதுண்டா?

நிச்சயமாக சொல்லுவது கிடையாது. என் வயதுக்கு பொய் சொல்லலாமா?

உங்களிடம் தவறான தகவல் கொடுத்து ஜாதகம் பார்க்கச் சொன்னால், அதை எப்படிக் கண்டுபிடிப்பீர்கள்?

நான் தெய்வ அருள் பெற்றவன். அதனால் அவர்களை அடுத்த நிமிடமே வெளியே அனுப்பி விடுவேன். என்னை test செய்வதற்காக சில ஜோதிடர்கள் வந்து, ஏமாந்து போவதுண்டு. (மீண்டும் சிரிக்கிறார்)



ஆலோசனைக் கட்டணம் கூடுதலாக இருக்கிறதே. கஷ்டத்தில் இருக்கும் ஏழைகள் எப்படி தங்களிடம் வருவார்கள்?

நான் சம்பாதிப்பதில் 50% தான தர்மத்திற்குச் சென்று விடுகிறது. அதனால் கட்டணம் அதிகம்னு சொல்ல முடியாது.

ஜோதிடம் தவிர வேறு எந்தப் பணிகளில் ஈடுபடுகிறீர்கள்?

பல பேருடைய Divorce case-களை கவுன்ஸிலிங் செய்து ஜோடிகளை இணைந்து வாழச் செய்துள்ளேன். மற்றபடி, ஏழைக் குழந்தைகளின் கல்விக்கு உதவித் தொகை அளித்து வருகிறேன்.

பிரபலங்களின் ஜாதகத்தைக் கணித்து, பரபரப்பு ஏற்படுத்தும் எண்ணம் உண்டா?

இல்லை (அவசரமாக மறுக்கிறார்) என்னிடம் ஜோதிடம் பார்க்க அரசியல்வாதிகளுக்கு no entry.

வாஸ்துவெல்லாம் வெறும் ஹம்பக்தான்!

ச. இரா. முத்துக்குமார்

பக்தி ரவுண்ட்ஸ்

மைலாப்பூரின் முக்கிய லேண்ட் மார்க்கான ஸ்ரீ ஸாயி பாபா ஆலயம் வழக்கத்தைவிட பரபரப்பாகத் தெரிகிறது. காரணம், உள்ளே கோயில் கொண்டிருக்கிற ஸ்ரீ ஸாயிநாதனுக்கு ஜூன் 27ம் தேதி கும்பாபிஷேகம்.

ஸாயி நாதனுக்கு ஆலயம் உருவாகி ஐம்பது ஆண்டுகள் ஆகி விட்டன. நரசிம்ம ஸ்வாமிஜியால் 1941ல் உருவாக்கப்பட்டது இந்த ஆலயம். சேலத்தில் வக்கீலாக இருந்தவர், ஆன்மிகத் தேடல் காரணமாக நாடெங்கும் சுற்றி வந்து, மகாராஷ்டிரத்தின் ஷீர்டிக்கு வந்து சேர்ந்தார். ஷீர்டி ஸாயிபாபாவின் 'அன்பே தெய்வம், அன்பு வழி ஒன்றே உலகின் ஒரே மதம்' என்ற




போதனை அவரைக் கவர்ந்து, அந்த அன்பு வழியைப் பரப்பும் ஆவலைத் தூண்டியது. திரும்பி வந்தவர் மைலாப்பூரில் ஆசிரமம் அமைத்தார்.

அதுதான் இன்று 'ஆல் இந்தியா ஸாயி சமாஜ்' என்று ஆயிரமாயிரம் பக்தர்களை ஈர்க்கிறது. ஸாயி சமாஜ் வழிபாட்டுடன் மட்டுமில்லாது, இலவச மருத்துவமனை, அச்சகம், ஸாயி வித்யாலயா, வாசக சாலை என்று பல சேவைகளிலும் ஈடுபட்டிருக்கிறது. மிக முக்கியமானது அங்கு தினம் நடக்கும் அன்னதானம், வியாழக்கிழமைகளில் இன்னும் விசேஷமாக.

அன்பே சிவம், அன்பே மதம், அன்பே வாழ்க்கை வழி என்னும் ஸாயி அன்பர்களுக்கு, ஜூன் 27ம் தேதி ஆனந்தம் காத்திருக்கிறது.

ச. வி

விவேக்கெல்லாம் காமெடியனா?



சென்னையின் சுவாரஸ்யமான சினிப்களில் ஒன்றான ஹிப்பூமர்ஸ் கிளப்பில் அன்று ஆடி பறந்தது. காரணம் விழாவில் சிறப்பு விருந்தினராக வந்திருந்த ஒய்ஜி. மகேந்திரன்தான், நடிகர் விவேக்கை கடுமையாகச் சாடி, நிகழ்ச்சியைச் சூடாக்கினார். அதில் ஒன்று - 'நான் நடிச்ச காலத்திலெல்லாம் இன்டெலிஜண்டான காமெடியன்கள் இருந்தோம். ஆனால் இப்பொழுது கண்டவர்களெல்லாம் காமெடியனாகி விட்டார்கள்!"

(இருவருக்குமிடையில் ஈகோ ப்ராப்ளம்?)

ச. எழில்

கேம்பஸ் கடலை!

தேவையில்லாத விஷயத்தைப் பற்றி, தேவையில்லாத இடத்தில், தேவையில்லாமல் தேவத்தேய பேசிக் கொண்டிருப்பதன் பெயர் தான் "கடல போடறது". லயோலாவில் நாம் நுழைந்த போது அதுதான் மும்முரமாக நடந்து கொண்டிருக்கும் என்று பார்த்தால், பிரவீன் பாலாஜி, சித்தார்த், அருண் மூவரும் அநியாயத்திற்கு நல்ல பிள்ளைகளாக இருக்கிறார்கள். படிப்பு, செலஸ், கம்ப்யூட்டர் என்று எப்பொழுதும் பிஸிதானாம். "வெளியுறவுத் துறை" நடவடிக்கைகளில் அதிக ஆர்வம் இல்லையாம். இது போன்ற ஆசாமிகளை எப்படித் திருத்துவது?

"நாங்களெல்லாம் இன்டலக்சுவல்" என்று சொல்லிக் கொண்டார்கள். இதில் அவர்களுக்குப் பெருமை வேறு!

"ராகிங் எல்லாம் உண்டா?" என்றதும் அலட்டிக் கொள்ளாமல் "அப்படின்னா என்னங்க!" என்றார் சந்தோஷ். சித்தார்த் சற்று வித்தியாசமாய், "புட்போர்டுல தொங்காம பஸ் டிராவலா? ராகிங் இல்லாம காலேஜா? ரொம்ப லைட்டா தான் செய்வோம்" என்றார். "என்ன தான் இருந்தாலும் சீனியர்ஸ்கிற பொசிஷனை விட்டுத்தர முடியுமா?" என்று சப்பைக் கட்டு கட்டினார் பிரவீன்.



எல்லோரும் கோரஸாக சொன்னது இதைத்தான் "இப்பல்லாம் கல்சுரல்ஸ் அவுட் ஆப் ஃபேஷன். ஆடம் டீசிங்தான் நடந்திட்டிருக்கு. அதைக் கேக்க தான் யாருமே இல்லையாதே" (பாவம், விட்டுருங்க கேர்ள்ஸ் குலங்களே! பசங்க ரொம்ப ஃபீல் பண்றாங்கப்பா...). 'ஆடம் டீசிங்'கிற்கு மட்டும்? குட்டியாக ஒரு போடா போட்டால் என்ன?" என்றார் ஒருவர். அவரது பெயர் என்ன என்று விசாரித்த மறு நிமிடம் பொடி நடையாக நடந்து காணாமல் போய்விட்டார்.

பேரழகன், அருண், ஜோர் எல்லாரும் இங்கேதான் படித்தார்களாம். படித்தார்களா அல்லது படித்தது போல 'நடித்தார்களா' என்று யாருக்கும் தெரியவில்லை.

அட்டைப்பூச்சி போல எல்லோரிடமும் செல் போன் ஒட்டிக் கொண்டிருந்தது. அதை அடிக்கடி எடுத்து எடுத்து 'மெஸேஜிக்' கொண்டிருந்தார்கள்.

டேய் டேய் நிறுத்துங்கடா ஒரே நேரத்துல எத்தனை பொண்ணுங்களுக்குத்தான் ரூட் விடுவீங்க! நாட்டுல என்னென்னத்துக்கு தடா போட்டா, ஸ்டூடண்ட்ஸ் பலரைக் காட்டி ரணகளப் படுத்திருவாங்க போல!

"என் செல்போனில்
இன்-பாக்ஸில் நிறைந்துள்ள
உன் எஸ்எம்எஸ். போல்
என்னுள்ளும் நீதான்
நிறைந்துள்ளாய்."

என்று இன்ஸ்டன்ட் கவிதை ஒன்றை கார்த்திக் எடுத்து விட...

"காதலை வாழவைக்கும் எஸ்.எம்.எஸ். கண்டுபிடி. வாழ்க" என வாழ்த்திவிட்டு ஸ்விட்ச் ஆஃப் செய்தோம்.

காதல் கடவுள் SMS

+ ச. மருதன்

எல்லாக் கவிதைகளுமே புரியாதவைதான்

அ. வெண்ணிலா

கவிதைகளில் பெண் மொழி என்று தனியாக இருக்கிறதா?

பொதுவாக மொழியில் எந்த வேறுபாடும் இல்லை. தங்களது உணர்வுகளை வெளிப்படுத்தும் பொழுது, பெண்களுக்கென்று தனியாக ஒரு மொழி கிடைத்துவிடுகிறது.

நீங்கள், உங்கள் கணவர் முருகேஷ் இருவருமே கவிதை எழுதி வருகிறீர்கள். ஏதேனும் முரண்பாடுகள்?

அவரைப் பொறுத்தவரையில், கவிதை சமூகப் பயன்பாட்டை மையமாகக் கொண்டது. நான் அப்படியில்லை. எனக்கு அக உலகம்தான் முக்கியம். எழுத்தை ஒரு ஆயுதம்போல் பாவித்து பயன்படுத்திவருகிறேன். கவிதைகளைப் பற்றிய எங்கள் இருவருடைய கண்ணோட்டமும் வெவ்வேறானவை.

உங்களுடைய படைப்புகளில் குழந்தைகளின் உலகம் அதிகமாக சித்திரிக்கப்படுகிறது. இது எதனால்?

ஒரு வேளை சமீபத்திய கவிதைகள் இதுபோல் இருக்கலாம். என்னுடைய முந்தைய கவிதைகளில் காதல், திருமணம் பற்றி நிறைய எழுதியிருக்கிறேன். அது மட்டுமின்றி, குழந்தைகளைப் பற்றிய கவிதைகள் வந்த அளவிற்கு "குழந்தைகளுக்கான" கவிதைகள் வந்ததில்லை.



பாலியல் சார்ந்த கவிதைகளை, அதிகமாக தற்பொழுது பெண்கள் எழுதுவது பற்றி?

இது ஒரு தவறான கண்ணோட்டம். ஒரு வேளை பெண்கள் இது பற்றி எழுதுவதால் சிலருக்கு அதிர்ச்சி ஏற்பட்டிருக்கலாம். பாலியல் ஒரு தீம். மற்ற எல்லா விஷயங்களையும் போல இதைப் பற்றியும் பெண்கள் எழுதுகிறார்கள். தவறொன்றுமில்லை.

புதுக் கவிதைகளைப் போலவே புரியாக் கவிதைகளும் அதிகரித்து வருகின்றதே?

எல்லாக் கவிதைகளுமே புரியாத கவிதைகள்தாம். அதாவது ஒரு சாராருக்கு. பாரதியை எல்லோரும் புரிந்து கொண்டு விடவில்லை. என்னுடைய கவிதைகள்கூட எல்லோருக்கும் புரிந்து விடாது. புரிதல் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக இராது.

மரபுக் கவிதைகளைப் படித்து விட்டுத்தான் புதுக்கவிதைகள் எழுத வேண்டுமா?

அவசியமில்லை. ஆனால் மரபுக் கவிதைகளைப் படிப்பதன் மூலம் மொழி இன்னும் செழுமையடையும். மரபு சார்ந்த இலக்கியங்களைப் பற்றிய பரிச்சயம் இருத்தல் சிறந்தது.

ச. மருதன்

எழுத்தாணி

UNIVERCELLல் தமிழ்ப் புரட்சி



சென்னையைக் கிறங்கடித்து விட்டு, அடுத்ததாக தமிழகம் முழுக்க விரிவடைந்திருக்கும் யுனிவர் செல் ஷோரூமுக்குச் சென்றால், ஏதோ வானவில் கூடாரத்திற்குள் நுழைந்து விட்டது போல் மின்னும் விதவிதமான செல்போன்களின் வலையில் நீங்கள் நிச்சயம் விழப் போவது நிஜம்.


“பிரமா பஜாரில் வாங்கி ஏமாறாதீர்கள். ரூ. 2900 முதல் ரூ. 40,000 வரையுள்ள எங்கள் செல் போன்களை வாங்குங்கள். ஆறு மாதத்திற்கொருமுறை அதன் நலம் விசாரிப்போம்” என பரிவோடு பேசுகிறார் யுனிவர்செல் எம்.டி., சதீஷ்பாபு. ஏதேனும் பழுது ஏற்பட்டால் இவர்களே சரி செய்வதோடு, அக்கருணத்தில் மாற்று ஏற்பாடாக வேறொரு செல்போன் கொடுத்து உதவுவார்களாம். Samsung X 600ல் தமிழில் எஸ்.எம்.எஸ் அனுப்பும்முறை வந்துவிட்டது.

இனி கிராமங்களில் “மச்சான் சீக்கிரம் புளிமூட்டையை அனுப்பு” என மக்கள் தமிழில் எஸ்.எம்.எஸ் அனுப்பும் காலமும் சீக்கிரம் வந்துவிடும். இதன்மூலம் ஆங்கில அறிவில்லாத, காதுகேளாத / பேச முடியாதவர்கள் கூட செல்போனைப் பயன்படுத்த முடியுமே” என நெகிழ்கிறார். அடடா இதுவல்லவோ டெக்னாலஜியின் வளர்ச்சி!

ச. எழில்

சென்ற வார Poll ரிசல்ட்

மக்கள் மத்தியில் சூப்பர் ஸ்டாரின் மாஸ் இனி வருங்காலத்தில் எடுபடுமா?





பிரெய்ன் பாயிண்ட்

விடை :

1. You are under arrest
2. ரயில்வே கிராசிங்
3. வரலாறு தொடர்கிறது
4. புயலுக்குப் பின் அமைதி

“நாட்டுக் கோழி, ஆட்டுக்கறி வகையறாவும், நீர் வாழ்வன, பறப்பனவற்றின் தொகையறாவும் பட்டிக்காட்டுப் பாட்டி சொன்ன பக்குவத்தில், நம்ம லொடுக்கு பாண்டி மெஸ்ஸில் ருசித்துப் பார்” என்று வடபழனி நூறடிச் சாலையில் புதிதாகத் திறந்துள்ள தமது புதிய மெஸ் பற்றி 'தனவெண்பா' பாடுகிறார் கருணாஸ்!



“எத்தனையோ நான் வீட்டுச் சாப்பாடு மாதிரி நல்ல சாப்பாடு சாப்பிட முடியாம, சென்னையில கஷ்டப்பட்டிருக்கேன். ஒரு ஆளுக்கு இருநூறு ரூபாய் இல்லாம ஒரு நல்ல ஹோட்டலுக்குள்ள போகவே முடியாது. அதான் 100% கிராமிய அசைவ உணவகமாக, முழுக்க முழுக்க கிராமத்து ஆட்களை மனம் கொண்டு 'மெஸ்' ஆரம்பிச்சிருக்கேன். அளவுச் சாப்பாடு 15 ரூபாதான். கறிசோறு, மீனோ எல்லா அயிட்டமும் 40 ரூபாய்க்கு உள்ளதான். சைனீஸ் டிபன் வகைகள்கூட எல்லாம் 20 ரூபாய்க்கு உள்ளதான்” என்று 'கம கம' வென பேசுகிறார் 'மெஸ்' கருணாஸ்.

(என்ன, நாக்கு லொடுக்கு மெஸ்ஸைத் தேடி... ஒரு நடை போயிட்டு வாங்க!)

டேஸ்ட்.காம்

• ச. வித்யன்

தான் 'க்ளிக்'!

மூகில்



வாசகர்களும் தாங்கள் எடுத்த தூள் க்ளிக்குகளை சென்னை ஸ்கேனுக்கு அனுப்பலாம். 'தூள்'-ஆ இருந்தா 'துட்டு' உண்டுங்கோ!

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN/PMG (CCR) 572/03-05 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358/03-05 *
Registered as a Newspaper in Sri Lanka Supplement to the Kalki issue Dated 27.6.2004


DING...DING...DING



திடீர்ப் பரிசுப் போட்டி -1



• வசூல் ராஜா எம்.பி.பி.எஸ். - படத்தில்

கமலும், சிநேகாவும் என்னதான் பேசுவாங்களோ?

உங்க கற்பனை திமிங்கலத்தைத் தட்டி எழுப்பி, 'அஞ்சல் அட்டையில்' மட்டுமே எழுதி அனுப்புங்க. நறுக் சுருக் டயலாக்குக்குப் பரிசு ரூ.200/- தேர்ந்தெடுக்கப்படும் மற்ற வசனங்களுக்கும் பரிசு உண்டு.

கடைசித் தேதி 5.7.2004. ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

'திடீர்ப் போட்டி - 1' என்று குறிப்பிட்டு 'கல்கி' முகவரிக்கு அனுப்பவும். ஜல்தி! குவிக்!

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 0
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka



◆ மத்திய உள்துறை அமைச்சர் திரு. சிவராஜ் பாட்டிலிடம் இருந்து டைரக்டர் திரு. S.P. நாயுடு அவர்கள் விருது பெறுகிறார்.

பாரம்பரிய பெருமைமிக்க இயற்கை வைத்தியத்தை விஞ்ஞான பூர்வமாய் நடத்திவரும், தேசி **Outstanding services & achievement** விருது பெற்ற டைரக்டர் திரு. S.P. நாயுடு அவர் தலைமையின் கீழ் நடந்துவரும் அடையார் இயற்கை மருத்துவ மையம்

மூட்டுவலி - சர்க்கரை நோய் - புற்று நோய் - ஆஸ்துமா
பக்கவிளைவற்ற இயற்கை வைத்தியம்!

◆ மூட்டுவலி ◆ குதிகால்களில் எலும்பு வளர்ந்து நடக்க முடியாமல் வலி, ◆ கை கால்களில் மூட்டு வீக்கு வலியும் ◆ கை, கால் விரல் மூட்டுகளில் வீக்கமும் வலியும் ◆ கழுத்து வலி ◆ நடு முதுகின் கீழ்பகுதி வலி. பல ஆண்டுகளாக இருந்தாலும் வித்தியாசமான இயற்கை வைத்திய முறையில், பக்க விளைவு இல்லாமல் நலம் பெற செய்கின்றோம். இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் வியாதியஸ்தர்கள் வருகிறார்

CANCER- புற்றுநோய்: ஆரம்ப நிலையில் உள்ளவர்களுக்கு குணமாகும்படியான இயற்ை வைத்தியமும், முற்றிய நிலையில் உள்ள RADIATION, CHEMOTHERAPY எடுத்துக் கொள்ளும் பு நோயாளிகளுக்கு உண்டாகும் முடி உதிர்தல், வாய் புண், இரத்த சோகை, குமட்டல், வாந்தி இவை குறைகின்றன. வர இயலாதவர்களுக்கு மூலிகை மருந்து அனுப்பி வைக்கின்றோம்.

ASTHMA- ஆஸ்துமா: 1. Dyspnea(மூச்சுத் திணறல்) 2.Respiratory Difficulties (மேல்மூச்சு வாங்குத 3. Dry cough (வறட்டு இருமல்) 4. Cough with sputum (சளியுடன் கூடிய இருமல்) 5. Running No (மூக்கில் நீர் வழிதல்) 6. Nasal Block (மூக்கடைப்பு) மிகச் சிறந்த இயற்கை வழி சிகிச்சையும் இயலாதவர்களுக்கு மூலிகை மருந்து அனுப்பி வைக்கின்றோம்.

DIABETES- சர்க்கரை நோய்: FOR TYPE 2- சிறப்பான இயற்கை மருத்துவம். FOR TYPE இன்சுலின் ஊசி மருந்தை குறைக்கும்படியான மூலிகை மருந்து AT AFFORDAE PRICE)- இல் கொடுக்கிறோம். வர இயலாதவர்களுக்கு மூலிகை மருந்து அனுப் வைக்கிறோம்.

எங்களிடம் நாள்பட்ட இதர நோய்களுக்கும் ஆலோசனை கேட்கலாம்.

அடையார் இயற்கை வைத்திய மையம்
ADYAR NATURE CURE CENTER ™
Regd. Hos
No. 6, SECOND CROSS STREET, KASTURBHA NAGAR, ADYAR, CHENNAI - 20.
Phone:2441 3399, 2440 2470. Tele Fax: 044-2491 6650 (Opp. Gandhi Nagar Bus Termin
www.adyarnaturecure.com e-mail: adyarnaturecure@yahoo.com,

குறிப்பு: சாதா, A/c தங்கும் அறைகள் மற்றும் ஜெனரல் வார்டு, கலர் டீ.வி., போன் வசதியுடன் கிடைக்கும். சைவ உணவு வசதி மட்டும் உண்டு. முன்பதிவு அவசியம்.